# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 31 | கதிர் 337 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 12, வெள்ளிக்கிழமை 28.10.2016


## நேற்று தமிழில் ஆளுநர் கடிதம்

யாழ்ப்பாணம், ஒக். 28
வடக்கு மாகாண ஆளுநர் சிங்கள மொழியில் அனுப்பிய கடிதத்தை பல்கலைக் கழக மாணவர்கள், அவருக்கே திருப்பிய >> 24

## ஆவாவை அடக்குமாம் 'ராவணா பலய'

கொழும்பு, ஒக். 28
வடக்கில் உருவாகியுள்ள 'ஆவா' குழுவைக் கட்டுப்படுத்தத் தாம் புதிய குழுவை உருவாக்கவுள்ளதாக ராவணா பலய அமைப்பு தெரிவித்துள்ளது. >> 04

## குண்டுச் சிதறல்கள் உள்ளோருக்கு சிகிச்சை ஊக்கில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 28
உடலில் குண்டுச் சிதறல்களுடன் உள்ளவர்களுக்கான சிகிச்சை மற்றும் சிதறல்களை இயன்றளவு வெளியே எடுப்பதற் >> 24

# மன்னார் கடலில் 71 மீனவர் கைது

### கடற்படையுடனான முரண்பாட்டின் எதிரொலி; 13 படகுகளும் பறிமுதல்

மன்னார், ஒக்ரோபர் 28
மன்னார் முத்தரிப்புத்துறைக் கடற் பரப்பில் நேற்றுத் தொழிலில் ஈடுபட்டிருந்த 71 மீனவர்களைச் சிலாவத்துறைக் கடற் படையினர் கைது செய்து அட்டகாசம் புரிந்துள்ளனர் என்று அந்தப் பகுதி மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.
கடற்படையினருக்கும் - பொதுமக்களுக்கும் இடையில் முத்தரிப்புத்துறையில் ஏற்பட்ட மோதல் காரணமாக, அந்தப் பகுதி மீனவர்கள் மீது கடற்படையினர் தொடர்ச்சியான கெடுபிடிகளைப் பிர >> 25

## விக்கிக்கு பாதுகாப்பு; சி.வீ.கேயிடம் வாக்குமூலம் பெற்றது சி.ஐ.டி

யாழ்ப்பாணம், ஒக். 28
வடக்கு மாகாண முதலமைச்சருக்குப் பாதுகாப்பு வழங்கக் கோரிய வடக்கு மாகாண சபையின் பிரேரணை தொடர்பில், அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானத்திடம், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்றுமுன்தினம் மாலை வாக்குமூலம் பெற்றனர்.
வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கின்றமையி >> 25

## யாழ். பல்கலை. மாணவர்களின் பொருள்கள் சூறை

கந்தர்மடத்தில் பட்டப்பகலில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 28
யாழ்.பல்கலைக்கழகத்தில் கற்கும், போரால் பாதிக்கப்பட்ட வன்னி மாணவர்கள் தங்கியிருந்த வீட்டில் அவர்களின் மடிகணினிகள் உள்ளிட்ட 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
மாணவர்கள் வீட்டில் இல்லாத 4 மணித்தியால இடைவெளியில் இந்தத் திருட்டு நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளது. >> 06

## ஆனையிறவு ரயில் நிலையம் இன்று மக்கள் பாவனைக்கு

யாழ்ப்பாணம், ஒக். 28
பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நிதிப் பங்களிப்புடன் உருவாக்கப்பட்ட ஆனையிறவு தொடருந்துநிலையம் இன்று மக்கள்பாவனைக்குக்கையளிக்கப்படவுள்ளது. >> 04

## யாழில் இந்திய உதவியுடன் 3,000 மழை நீர்த் தொட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக். 28
யாழ்ப்பாணக் குடாநாட்டில் மழை நீரைச் சேகரிக்கும் 3 ஆயிரம் நீர்த் தாங்கித் தொட்டிகளை அமைப்பதற்கு, இந்தியாவுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொள்ளப்படவுள்ளது. இதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலையான குடிதண்ணீர் ஆதாரத்தை வழங் >> 25



வடக்கு மாகாண பிரதி அவைத் தலைவர் போட்டி

## அனந்தி தோல்வி

கமலேஸ்வரன் தெரிவு

யாழ்ப்பாணம், ஒக். 28
வடக்கு மாகாண சபையின் புதிய பிரதி அவைத் தலைவராக வ.கமலேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார். கமலேஸ்வரனை எதிர்த்துப் >> 23

## இந்திய மீனவர்கள் இருவர் ஹெரோயினுடன் சிக்கினர்

மன்னார், ஒக்.28
2 கிலோகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் இந்திய மீனவர்கள் மூவர் மன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படைப் பேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி தெரி >> 25



## மாணவர் கொலை
## மலையகத்தில் நேற்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 28
யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து மலையகத்திலும் நேற்றுப் போராட்டம் ஒன்று இடம்பெற்றது. லிந்துலையில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.
கடந்த 20 ஆம் திகதி நள்ளிரவு, யாழ். பல் >> 23

## உடுவிலில் மீண்டும் வாள்வெட்டு

### தந்தையும் தனயனும் படுகாயம்

யாழ்ப்பாணம், ஒக். 28
வீதியில் பயணித்த தந்தையையும் மகனையும் கைக்கோடரியால் வெட்டிவிழுத்திய முகமூடி அணிந்த குழு பின்னர் அவர்களிடமிருந்து 2 ஆயிரம் ரூபா பணத்தையும் சாதாரண அலைபேசி ஒன்றையும் எடுத்துக் சென்றுள்ளனர்.
உடுவிலை அண்மித்து சங்குவேலி வயல் வெளிப் பகுதியில் வீதியில் வைத்து நேற்றிரவு 7. 30 அளவில் இந்தச் சம்பவம் இடம் >> 04



## கொலையுண்ட மாணவருக்கு மாகாண சபைகளில் அஞ்சலி

### அகவணக்கம் செலுத்தினர் உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், ஒக். 28
யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளில் இரு நிமிட அகவணக்கம் நேற்றுச் செலுத்தப்பட்டது.
வடக்கு மாகாண சபையின் 64 ஆவது அமர்வு நேற்று ஆரம்பமானது. சபை நடவடிக்கை ஆரம்பமானதும், ஆளும் >> 24

## ஆவா குழுவை உருவாக்கியவர் ராணுவ அதிகாரியே

### ஆங்கில ஊடகம் தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 28
ஆவா குழுவை, மகிந்த ஆட்சிக் காலத்தில் வடக்கில் உயர் பதவியில் இருந்த இராணுவ அதிகாரி ஒருவரே, இரகசியமாக >> 25




எமது நடைமுறைக் கணக்கு மூலம் நீங்களும் வளர்ச்சி பெறுங்கள்

- நடைமுறைக் கணக்கு
- சேமிப்புக் கணக்கு
- வாகனக் கடன்
- லீசிங்
- தனிநபர் கடன்
- வீட்டுக் கடன்
- கல்விக் கடன்
- வர்த்தகக் கடன்

உங்கள் வளர்ச்சிக்கு உதவி புரியும் சேவைகள் பற்றி மேலும் விபரங்களை அறிந்து கொள்ள எம்மிடம் வாருங்கள்.
24 மணிநேர அழைப்பு மையம்: 011 2350000 | www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தகாத வார்த்தை பேசினார் மாகாண சபை உறுப்பினர்

## அதிர்ச்சியில் முதலமைச்சர், ஆசிரியர்கள்

திருமலை, ஒக் 28

கிழக்கு மாகாண சபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஏ.எல்.தவம் முதலமைச்சர் அலுவலகத்தில் வைத்து தகாத வார்த்தைப் பிரயோகம் மேற்கொண்டதாகக் கூறப்படுவது தொடர்பில் பலரும் அதிர்ச்சி வெளியிட்டுள்ளனர்.

வெளிமாவட்டங்களில் கடமையாற்றும் கிழக்கு மாகாண ஆசிரியர்கள் தமது நியமனம் தொடர்பில் முதலமைச்சரைச் சந்தித்து கலந்துரையாடிய வேளையிலேயே மாகாண சபை உறுப்பினர் தகாத வார்த்தைப் பிரயோகம் மேற்கொண்டதாகவும், இதனால் அங்கிருந்த ஆசிரியர்கள் அவமானப்பட்ட நிலையில் வெளியேறியதாகவும் கூறப்படுகின்றது.

கிழக்கு மாகாண சபையின் 65ஆவது அமர்வு நேற்று நடைபெற்றதைத் தொடர்ந்து முதலமைச்சரின் அலுவலகத்தில் ஆசிரியர்களுடனான சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போதே மாகாண சபை உறுப்பினர் தகாத வார்த்தை பேசியுள்ளார். இதனால் முதலமைச்சர் செய்வதறியாது வாய்மூடி இருந்ததாகக் கூறப்படுகிறது.

மாகாணசபை உறுப்பினர் தவம் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டுமென்பதுடன், அவர் மீது முதலமைச்சர் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-45)

# வெளிநாட்டு முதலீடுகள் இலங்கைக்கு வேண்டும்

## அபிவிருத்தியடைந்த நாடாக மாற அதுவே வழி என்கிறார் பிரதமர்

கொழும்பு, ஒக். 28

இலங்கையை வறுமை மற்றும் பின்னடைவிலிருந்து முன்னோக்கி – அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதற்கு, நேரடியான வெளிநாட்டு முதலீடுகள் இலங்கைக்குக் கொண்டு வரப்பட வேண்டும். இதனை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் நேற்றுத் தெரிவித்தார்.

2017 ஆம் ஆண்டுக்கான பொருளாதாரக் கொள்கைத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுச் சமர்ப்பித்து உரையாற்றினார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:-

எமது பொருளாதாரத்தின் எதிர்க் காலப் பயணத்துக்கு மாற்றுச் சிந்தனையொன்று அவசியமாகும். அதற்காக அச்சமற்ற கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். 11 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த எமது ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது.

தைத்த ஆடைகள் ஏற்றுமதி 5 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்குள் இறுகியுள்ளது. ஆடைக் கைத்தொழிலில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காகவே நாம் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையைமீளப்பெற்றுக்கொள்ளவதற்கான விண்ணப்பத்தை முன்வைத்துள்ளோம்.

உலக சந்தையில் தேயிலை, இறப்பரின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளதாலும் எமது ஏற்றுமதி வருமானம் குறைந்துள்ளது. நீண்ட மற்றும் நிலையான பொருளாதார அபிவிருத்தியை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். மத்திய கிழக்கில் எமது பணியாளர்கள் கஷ்டங்களுக்கு மத்தியில் பெற்றுக் கொள் ளும் வருமானத்தில் நிச்சயமற்ற தன்மை உருவாகியுள்ளது.



உலக நாடுகள் இலங்கை தொடர்பில் கொண்டுள்ள தோற்றப்பாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்துடன் சுற்றுலாத் துறையினரின் வருகை தற்போது குறிப்பிடத்தக் களவு அதிகரித்துள்ளது. தசாப்த காலமாக எமது சந்தை குறித்து கவனத்தில் கொள்ளாத முன் ணணியான பன் னாட்டு விமான நிலையங்கள் மற்றும் விடுதிகள், நிறுவனங் கள் என்பன மீண்டும் எமது நாட்டுக்கு வர ஆரம்பித்துள் ளன.

2003ஆம்ஆண் டில் எமது நாட் டின் புடைவை மற்றும் ஆடைக் கைத்தொழில் 2.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. அதே ஆண்டில் பங்களாதேஷின் புடைவை மற்றும் ஆடைக் கைத்தொழிலின் வருமானம் 5.2 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. 2015 ஆம் ஆண்டு எமது புடைவை மற்றும் ஆடை ஏற்றுமதிக் கைத்தொழில் 4.8 அமெரிக்க டொலர்களை ஈட்டியபோது 26.6 பில்லியன் அமெரிக்க டொலர்களை பங்களாதேஷ் பெற்றுள்ளது.

வறுமை மற்றும் பின்னடைவிலிருந்து முன்னோக்கிச் செல்லும், அபிவிருத்தியடைந்த நாடாக இலங்கை மாற்றமடையவேண்டுமெனில், எமது வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கு பெரியளவிலான நேரடி வெளிநாட்டு முதலீடுகளை நாட்டுக்குக் கொண்டுவரவேண்டும் என்பதே அனைவரும் உணர்ந்துக் கொள்ள வேண்டிய உண்மையாகும். உலக வர்த்தக சுட்டியில் முன்னியிலிருக்கும் 70 நாடு களுக்குள் 2020ஆம் ஆண்டுக்கு முன் இலங்கையை உள்ளடக்குவதே எமது எதிர்ப்பார்ப்பாகும்.

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளில் புதிய வீடுகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை மீள நிர்மாணிக்க அதிக முக்கியத்துவத் தையும் நாம் வழங்குவோம்.

ஒவ் வொரு குடிமகனுக்கும் வீடொன்றை உரித்தாக்கவும், சம சந்தர்ப்பம் கிடைக்கும் வகையிலான உரிமைகளைப் பாதுகாக்கும் சமூகம் ஒன்றை உருவாக்கவும் நாம் திட்டமிடுகிறோம்.

கிராமிய வீட்டுக்கடன் திட்டம், நகர வீட்டுத்திட்டம், தோட்டப்புற வீட்டுத் திட்டம் மற்றும் மீள் குடியேற்ற வேலைத் திட்டம் ஆகியன ஊடாகப் பெரிய மக்கள் தொகையினருக்கு வீட்டு உரிமையை பெற்றுக் கொள்வதற்கும் நாம் திட்டமிட்டுள்ளோம். நகர மற்றும் அதனை அண்டி வாழும் மக்களுக்கு 5 லட்சம் வீடுகளை நிர்மாணிக்கவும் நகரங்களில் வாழும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு 65 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதும் எமது நோக்கமாகும். இதற்குச் சமாந்தரமாக மோதல் இடம்பெற்ற பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்காக 65 ஆயிரம் வீட்டுத் தொகுதியும் நிர்மாணிக்கப்படும்.

பன்னாட்டு வர்த்தகம் தொடர்பான தேச எல்லைத் தடையை நீக்குவோம். டிஜிட்டல் தொழில் நுட்பம் தொடர்பான புதிய பாடத்திட்டமொன்றையும் பாடசாலை மாணவர்களுக்கு நாம் யானத் தேவையும் தற்போது நாட்டில் உள்ளது. பெண்களின் பொருளாதாரத்துடன் அரசியல் பங்கேற்பையும் அதிகரிப்பதே எமது எதிர்க் கால இலக்காகும் – என்றார். (த-5)

# ஊடக நிபந்தனைகளை மீறியுள்ளது சீ.எஸ்.என்.

## அதனால் உரிமம் மீள வழங்கப்படாது என்கிறார் அமைச்சர் கயந்த கருணாதிலக

கொழும்பு, ஒக் 28

ஊடக நிபந்தனைகளை மீறியதன் காரணமாக மீளப் பெற்றுக் கொள்ளப்பட்ட சீ.எஸ்.என். நிறுவனத்தின் உரிமை மீளக் கையளிக்கப்படமாட்டாது என வெகுஜன ஊடகத்துறை அமைச்சரான கயந்த கருணாதிலக நேற்றுத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நிலையியற் கட்டளை 23/2 இன் கீழ் விசேட வினாவை முன்வைத்த பொது எதிரணி உறுப்பினரான தினேஸ் குணவரத்தன,

சி.எஸ்.என் நிறுவனத்தின் உரிமத்தை மீளப்பெற்றமையானது தகவல் பெறும் மக்களின் உரிமையை அப்பட்டமாக மீறும் ஒரு செயற்பாடாகும். அது அரசமைப்புக்கே முரணாக உள்ளது. நல்லாட்சி அரசினால் நிறைவேற்றப்பட்டுள்ள தகவலறியும் சட்டத்தையும் இது மீறும் வகையிலேயே காணப்படுகின்றது.

ஆகவே, மக்கள் மத்தியில் பிரபல்யமான இந்தத் தொலைக் காட்சி நிறுவனத்தை மீண்டும் நிறுவுவதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நிறுவனம், அரசியலுடன் தொடர்புடைய நிறுவனமல்ல என்பதால் அவரசப்பட்டுத் தீர்மானம் எடுக்கவேண்டாம். அந்த உரிமத்தை மீளவும் கையளிக்குமாறு நாம் அரசிடம் கேட்டுக் கொள்கிறோம்–என்றார்.

இதனை அடுத்து பதிலளித்த அமைச்சர் கயந்த கருணாதிலக, இந்த நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பில் பெரும் நிதி மோசடிக் குற்றப் பிரிவினால் விசாரணைகளும் மேற் கொள்ளப்பட்டன. ஊடகத்துறை அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்காமல் நிறுவனத்தின் முகவரியை மாற்ற முடியாது.

ஆனால், இந்த நிறுவனமானது அந்த நிபந்தனைகளை முற்றாக மீறியுள்ளது. நிறுவனத்தின் வருடாந்தக் கணக்கு வழக்கை நிதியாண்டின் முதல் மூன்று மாதங்களுக்கு முன்னர் கையளித்திருக்கவேண்டும். அந்த நிபந்தனையும் மீறப்பட்டுள்ளது. எனவே அதற்கான உரிமையை மீண்டும் கையளிக்க முடியாது என்று பதிலளித்தார். (த)

# சிறைச்சாலை திரும்ப மறுத்த பிள்ளையான்

திருகோணமலை, ஒக் 28

கிழக்கு மாகாண சபையின் 65ஆவது அமர்வுக்கு வருகை தந்திருந்த மாகாண சபை உறுப்பினரும்முன்னாள்கிழக்கு மாகாண முதலமைச்சருமான பிள்ளையான் நேற்றுப் பிற்பகல் 3.15 மணிக்குச் சபை அமர்வுகள் முடிவடைந்த நிலையில்



மாலை 4 மணிவரை சபையின் அறைக்குள் இருந்து கொண்டு வெளியே செல்லமுடியாது எனத் தெரிவித்து பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாமாக வெளியில் வரும்வரை தன்னை அழைக்கவேண்டாம் எனப் பல தடவை பாதுகாப்புப் பொலிஸாரிடம் தெரிவித்த வாறு பிள்ளையான் உள்ளே அமர்ந்திருந்ததாகக் கூறப்படுகின்றது. எனினும், பல தடவைகள் பொலிசார் வாக்குவாதப்பட்டும் அவர் வெளியே வராத நிலையில் பலத்த சிரமத்தின் மத்தியில் அவரைச் சிறைச்சாலை பஸ்ஸில் ஏற்றியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பில் சந்தேகத்தின்பேரில்பிள்ளையான் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரவிராஜ் படுகொலை வழக்கு யூரி சபை முன்பே விசாரணை

## கொழும்பு மேல் நீதிமன்று அறிவிப்பு

கொழும்பு, ஒக்.28

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான நடராஜா ரவிராஜ் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட வழக்கை, நீதிமன்றில் யூரி சபை முன்பாக விசாரணை செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

ரவிராஜ் வழக்கை நீதிபதி முன்னிலையில் விசாரிக்குமாறு பாதிக்கப்பட்ட தரப்பினரும் யூரி சபை முன்பாக விசாரணை செய்யுமாறு எதிரி தரப்பினரும் மன்றில் கோரியிருந்தனர். அதனால் அது தொடர்பில் இருதரப்பினரையும் மன்றில் எழுத்துமூல அறிக்கை முன்வைக்குமாறு கொழும்பு மேல்நீதிமன்று இரண்டுதவணைகளுக்கு முன்னர் உத்தரவிட்டது.

எதிரிகளுக்குப் பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் கீழ் 3 குற்றச்சாட்டுக்களும், குற்றவியல் தண்டனைச்சட்டக்கோவையின் கீழ் 2 குற்றச்சாட்டுகளும் தாக்கல் செய்யப்பட்டன. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் உள்ள வழக்குகளும் குறித்த வழக்கில் உள்ளதனாலேயே யூரி சபை முன்பாக ரவிராஜ் கொலை வழக்கை விசாரிக்க முடியாது என்று பாதிக்கபட்டவர்களின் தரப்புச் சட்டத்தரணிகள் மன்றில் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்த வழக்கு கொழும்பு முதலாம் இலக்க மேல் நீதிமன்றில் நீதிபதி மணிலால் வைத்தியரட்ண முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போதே இருதரப்பு வாதங்களையும் பரிசீலித்த நீதிபதி, இந்த வழக்கு யூரி சபை முன்பாக விசாரிக்கப்படும் என்று நேற்று அறிவித்தார். இந்த வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் நலன் சார்ந்து மூத்த சட்டத்தரணி கே.வி.தவராசா, நாடாளுமன்ற உறுப்பினரும் மூத்த சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன், ஆகியோர் நேற்று முன்னிலையாகியிருந்தனர். வழக்கு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

எனினும் யூரி சபை முன்பாக விசாரணை செய்ய வேண்டும் என்ற தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்வது தொடர்பில் ஆராயப்படுகிறது – என்று தெரிவிக்கப்பட்டது.

**பின்னணி**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் மூத்த சட்டத்தரணியுமான நடராஜா ரவிராஜ் 2006ஆம் ஆண்டு நவம்பர் 10ஆம் திகதி நாரஹேன்பிட்டியவிலிருந்து புதுக்கடை நீதிமன்றுக்குச் சென்றுகொண்டிருந்தபோது, நாரஹேன்பிட்டிய மனிங் பிளேஸ் பகுதியில் இராணுவ முகாம் மற்றும் அரச திணைக்களங்கள் அமைந்துள்ள பகுதியில் முற்பகல் சுமார் 9 மணியளவில் அவர் பயணித்த கார் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ரவிராஜ் மற்றும் அவரது கார் சாரதியான பொலிஸ் உத்தியோகத்தர் ஆகியோர் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து கொல்லப்பட்டனர்.

இந்த வழக்கில் 6 பேர் பொலிஸாரால் எதிரிகளாகக் குற்றஞ்சாட்டப்பட்டனர். பழனிசாமி சுரேஸ், ஹெட்டியாராச்சி முதியான்சலாகே, காமினி செனவிரத்ன, பிரதீப் சாமிந்த, சிவகாந்தன் விவேகானந்தன், றொயிஸ்டன் ருசேன் ஆகியோரே எதிரிகளாகக் குற்றஞ்சாட்டப்பட்டனர். இவர்களில் சுரேஸ்,சிவகாந்தன், ருசேன் ஆகியோர் கருணா குழுவைச் சேர்ந்தவர்கள். ஆனால் இந்த 3 பேரும் இன்றுவரை எங்கு என்று தெரியவில்லை. நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டநிலையில் உள்ளது.

முதியான்சலாகே, செனவிரத்ன, சாமிந்த ஆகியோரே இன்றுவரை இந்த வழக்கை எதிர்கொண்டுள்ளனர். இவர்களுக்குப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழும் 3 குற்றச்சாட்டு வழக்குகள் உள்ளதனால், இன்றுவரைதடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் முதியான்சலாகே, செனவிரத்ன ஆகியோர் கடற்படையினர். சாமிந்த பொலிஸ் உத்தியோகத்தர். (வ–4)

## இரு இடங்களில் இன்று மின்தடை

யாழ்ப்பாணம், ஒக்.28

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.30 மணி வரையும் இரு இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று வடக்கு மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார்.

யாழ். பிரதேசத்தில் அச்செழுவிலும் வவுனியாப் பிரதேசத்தில் வவுனியா நகரத்திலும் மின் விநியோகம் தடைப்படும் என்று அவர் தெரிவித்தார். (வ–ரீ)

பாராட்டி வாழ்த்துகிறோம்




கடந்த 05.10.2016 புதன்கிழமை தாமரைத்தடாக அரங்கியல் மண்டபத்தில் நடைபெற்ற கௌரவிப்பு விழாவில் குரு பிரதீபா பிரபா கௌரவம் பெற்ற அராலி சரஸ்வதி மகா வித்தியாலய ஆசிரியர்

ஆர்.ஸ்ரீரமணன்

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

கொக்குவில் மத்திய சனசமூக நிலையம்.

(C 23280)(16.19)

## DISTRICT SECRETARIAT JAFFNA
## INVITATION FOR BIDS

**The Chairman, Procurement Committee, District Secretariat, Jaffna on behalf of the Government Agent / District Secretary, Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for the **Reconstruction and Asphalt Surfacing of Ramanathan Road, (University of Jaffna road and outer circular connectivity to the Jaffna city region), Improvements of Kalviyankadu - Kokuvil Road, (0.160 - 0.950) (Asphalt Surfacing) Outer ring road to Jaffna city region as** described below the schedule.

1. Bidding will be conducted through National Competitive bidding Procedure.
2. To be eligible for contact award, the successful bidder shall not have been black listed and shall be registered in the field of building construction on the Institute for Construction Training and Development (ICTAD), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.
3. Interested bidders may obtain further information from the **Administration Branch, District Secretariat, Jaffna.** And inspect the Bidding Documents at the same address on any working day from **9.00 hrs to 3.00 hrs from 28.10.2016**
   Contact numbers are : phone; 021 222 2771
4. A Complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders on the submission of a written application to the **Administration Branch, District Secretariat, Jaffna from 28.10.2016** until **10.11.2016** from **9.00 am to 2.00 pm** upon payment of a non-refundable fee of Rupees **two thousand (Rs 2000/-)**
5. Sealed bids shall be sent by registered post addressed to the **Chairman, Procurement Committee, District Secretariat, Jaffna** or deposited in the Tender Box available at the **Government Agent office, District Secretariat, Jaffna** on or before **2.30 pm on 10.11.2016.** Late bids will be rejected, Bidders should write the job description and bid No. on the top left hand corner of the envelope. Bids will be opened at **3.00 pm at same day** in the presence of the bidders or bidders' representatives who choose to attend. Original and duplicate should be submitted separately.
6. Procurement Committee will keep the right to make final decision in regard to accept or reject Bids will be the final regarding the bids.
7. Bid shall be valid for a period of **90 days** from the last date fixed for receiving of Bids
8. Prebid meeting will be held on **03.11.2016 at 10.00 am**
9. The detail of the bid is given below.

| Bid No | Description of work | Estimated amount (million) (ExcludingVat) | Contract Period (months) | Minimum Grade of ICTAD (Highway) | Bids Security (Rs.) | Non refundable fee (Rs) |
|---|---|---|---|---|---|---|
| JF/ADM/ S.P/ R.Road /12/28/2016 | Reconstruction and Asphalt Surfacing of Ramanathan Road, (University of Jaffna road and outer circular connectivity to the Jaffna city region) | 44.62 | 02 | C5 | 446,500.00 | 2000.00 |
| JF/ADM/S.P/ Kal.Kok.Rd/ 12/32/2016 | Improvements of Kalviyankadu-Kokuvil Road (0.160-0.950) (Asphalt Surfacing) Outer ring road to Jaffna city region | 14.62 | 02 | C6 | 147,000.00 | 2000.00 |

**N.Vethanayahan**
**Government Agent/ District Secretary,**
**Jaffna District.**

(C/23030)(10.19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் இனத்துக்கு அஞ்சும் பொலிஸ் குடாநாட்டில் மாணவர்கள் மீது சூடு

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக்.28

முல்லைத்தீவில் பொலிஸார் தாக்கப்படும்போதுகூட தற்பாது காப்புக்காகக் கூட ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு செய்ய அஞ்சும் பொலிஸார் யாழ்ப்பாணத்தில் அப்பாவி மாணவர்கள் மீது துப்பாக்கிச் சூடு மேற் கொள்வது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

இவ்வாறு வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 64ஆவது அமர்வு நேற்று நடைபெற்றது. அதில் கொக்கிளாய் கடற்பரப்பில் கடந்த 17ஆம் திகதி குடாத்துறையில் புளியமுனை மீனவர்கள் மீதும், பொலிஸார் மீதும் பிற மாவட்ட மீனவர்கள் தாக்குதல் மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் எந்தவித சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனச் சுட்டிக் காட்டி, பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரேரணையை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"முல்லைத்தீவில்- குடாத்துறை, கடந்த 17ஆம் திகதி புளியமுனை மீனவர்களை பொலிஸார் மற்றும் திணைக் களத்தினர் அழைத்துச் சென்ற வேளை, தமிழ் மீனவர்களும், பொலிஸாரும் தாக்கப்பட்டனர். அதில் மீனவர்களும் பொலிஸாரும் காயமடைந்தனர். அங்கு நின்ற பொலிஸார் தற்பாதுகாப் புக்காக ஆகாயத்தை நோக்கி யேனும் துப்பாக்கிச் சூடு செய்ய வில்லை. இவ்வாறு ஓர் இனத்தவர்கள் தாக்கும்போது அஞ்சும் பொலிஸார் யாழ்ப்பாணத்தில் மட்டும் அப்பாவி மாணவர்கள்மீது நேரடியாகவே துப்பாக்கிச் சூடு மேற் கொள்வது சந்தேகத்தை ஏற் படுத்துவதாக உள்ளது.பொலிஸார் தமது பணிகளை நேர்மையாக சரிவரச் செய்ய இந்தச் சபை பொலிஸாரைக் கோர வேண்டும். முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் விடயத்தில் பொலிஸார் நீதியாகச் செயற்பட வலியுறுத்த வேண்டும்" என்று வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

குறித்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு, இது தொடர்பில் உரியவர்களின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும்என்று அவைத்தலைவர் பதிலளித்தார். (ந-101)

## உடுவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது. யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் மகனும், அவரது தந்தையுமே இவ்வாறு கோடரியால் வெட்டப்பட்டுள்ளனர். படுகாயமடைந்த நிலையில் அவர்கள் யாழ். போதனா வைத்தியசாலை யில் சிகிச்சைக்காக நேற்றிரவு சேர்க்கப்பட்டனர். கோண்டாவிலில் வசிக்கும் ஆ.சதீஸ்வரன் (வயது-49), அவரது மகன் ச.றெஜினோல்ட் (வயது - 23) ஆகியோரே படுகாயமடைந்தனர்.

உடுவில் மற்றும் மானிப்பாய் பகுதிகளில் வாள்வெட்டுச் சம்பவங்கள் அதிகரித்தன. சங்குவேலிப் பகுதியில் இரு மாதங்களுக்கும் முன்னர் இளம் குடும்பத்தலைவர் வாள் வெட்டில் கொல்லப்பட்டார். அதனை ஆள் மாறாட்டக் கொலை என்று பொலிஸார் தெரிவித்தனர். நீதிமன்ற உத்தரவுகளையடுத்து சிறப்பு அதிரடிப்படையினர், பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகளால் வாள் வெட்டுக் கும்பல்களின் அட்டகாசம் குறைவடைந்தன. இந்த நிலையிலேயே நேற்றிரவு மீண்டும் வாள்வெட்டு இடம்பெற்றது.

'பண்டத்தரிப்புக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த போதே சம்பவம் இடம்பெற்றது. வீதியில் 5 பேர் முகத்தை மறைத்தவாறு திடீரென கைக்கோடரியைக்காட்டி எம்மை வழி மறித்ததும், ஒரு வெட்டு எனது காலில் விழுந் தது. அதனால் இருவருமே மோட்டார் சைக்கிளிலிருந்து விழுந்துவிட்டோம். அந்தக் குழுவில் ஒருவன் மகனின் கழுத்தை நோக்கி கைக் கோடரியை ஓங்கினர். மகன் அந்த விநாடி நேரத்தில் குனிந்து கொண்டதனால் மகனின் தலை தப்பியது. சில விநாடிகளில் இவை நடந்ததால் மகனுக்கு பேரதிர்ச்சி. அதனைத் தாங்க முடியவில்லை. அந்த இடத்திலிருந்து மகன் தப்பியோடிய போது, அந்தக் கும்பல் மகனைத் துரத்திச் சென்று தாக்கியது. மகனை ஏன் வெட்டுகிறீர்கள்? உங்களுக்கு என்ன வேண்டும் என்று குருதி வெள்ளத்தில் கிடந்த நான் அந்தக் கும்பலிடம் கத்தினேன். பணம் வேண்டும் என்று கேட்டனர். எனது பொக்கட்டில் இருந்த பணம் முழுவதையும் எடுத்துக் கொடுத்தேன். அதில் சுமார் 2 ஆயிரம் ரூபா இருந்தது. அதனையும் சாதாரண அலைபேசியையும் எடுத்துக் கொண்டு அந்தக் குழு பதற்றமின்றிச் சென்றது.

அந்த நேரம் அந்த வழியில் சனநடமாட்டம் இருக்கவில்லை. நாங்கள் இருவரும் காயப்பட்ட நிலையிலும் உதவ யாருமின்றி குருதி சொட்டச் சொட்ட மோட்டார் சைக்கிளில் சென்று பின்னர் ஓட்டோ ஒன்றில் வைத்தியசாலைக்கு வந்தோம். அவர்கள் நடந்து கொண்ட மோசமான அச்சமூட்டும் அந்தச் சம்பவத்தால் பயமும் அதிர்ச்சியாகவும் உள்ளது.' என்று காயமடைந்த தந்தையான சதீஸ்வரன் தெரிவித்தார். (வ-4)

## ஆனையிறவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிகழ்வில் கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம், போக்குவரத்து, சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாணவர்கள் மத்தியில் வடக்குக்கும் தெற்குக்குமிடையிலான தொடர்பை வலுப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டே இந்தத் தொடருந்து நிலையம் பாடசாலைச் சமூகத்தின் ஒத்துழைப்புடன் புனர்நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள சகல பாடசாலைகளிலும் இரு வார காலம் நிதி சேகரிக்கும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. அந்தத் தினங்களில் மாணவர்கள் தமது செலவுக்காகக் கொண்டு வந்த பணத்தில் நாளொன்றுக்கு தலா இரண்டு ரூபாவை அன்பளிப்பு செய்தனர். ஆசிரியர்கள் நாள் ஒன்றுக்கு 10 ரூபா அன்பளிப்புச் செய்தனர்.

பாடசாலைச் சமூகத்தினால் 10.54 மில்லியன் ரூபாவும், எஞ்சிய நிதி கல்வி அமைச்சினாலும் வழங்கப்பட்டு 20 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டது.

அநுராதபுரத்திலிருந்து பாடசாலை மாணவர்களை ஆனையிறவுக்கு அழைத்துச் செல்லும் தொடருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்து பாடசாலை மாணவர்களை ஆனையிறவுக்கு அழைத்து வரும் தொடருந்தும் ஆனையிறவு தொடருந்து நிலையத்தில் நிறுத்தப்பட்டு மு.ப. 11.58 மணிக்கு தொடருந்து நிலையம் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்படும். (த-5)

## ஆவாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அந்த அமைப்பின் பொதுச் செயலர் இத்தேகந்த சத்தா திஸ்ஸதேரர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார்.

அவர் தெரிவித்ததாவது:

ஆவா குழுவின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்தவோ, அந்தக் குழுவின் உறுப்பினர்களைக் கைது செய்யவோ பொலிஸார் தவறியுள்ளனர். பொலிஸாரின் நடவடிக்கைகளை நாம் நிறைவேற்றப் போகின்றோம்.

பொலிஸாருக்கு இரு வாரங்கள் கால அவகாசம் வழங்குகின்றோம். அதற்குள் பொலிஸார் 'ஆவா' குழுவைக் கட்டுப்படுத்தத் தவறும் பட்சத்தில் நாம் 'வாணா' என்ற ஒரு புதிய குழுவை உருவாக்குவோம். அப்படி உருவாக்கினால் பொலிஸாருக்கு குறித்த இரு குழுக்களையும் கட்டுப்படுத்த நேரிடும் - என்றார். (த-5)

**காணவில்லை**

லையன் செப்பேட் (அல்சேசன்) நாய் கடந்த சனி இரவு முதல் காணவில்லை. கண்டவர்கள் தயவு செய்து அறியத்தரவும். (கச்சேரியடி யாழ்ப்பாணம்)

077 958 7328

**உடனடி வேலைவாய்ப்பு**

களஞ்சியக் காப்பாளர்கள் (Stores Keepers) உடன் தேவை. தகுதியுடையவர்கள் நேரில் வரவும்.

பிள்ளையார் இன்
இல. 31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2829

**அமெரிக்கா லொத்தர் விசா**

இந்த வருடம் சனத்தொகை கூடிய நாடுகள் அமெரிக்கா லொத்தர் விசாவிற்காக விண்ணப்பிக்க தகுதியற்ற நாடுகள் பட்டியலில் இருப்பதனால் இலங்கைப் பிரஜைகளுக்கான வாய்ப்புக்கள் அதிகம். ஆகவே நீங்களும் அதிஷ்டசாலியாகலாம்.

விண்ணப்பத்திற்கான புகைப்படங்கள் எமது நிறுவனத்திலேயே பெற்று விண்ணப்பிக்க முடியும்.

TwinStar IT Unit Mobile:
Main Street, Chankanai. 0770435330

**பரிசுத்த ஆவிக்கு செபம்**

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நானடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரையும் நான் மன்னிக்க அருள் புரிபவரே என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்துக்கும் நன்றி கூறித்துதிக்கிறேன் என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும். அனைவரும் என்றென்றும் உமது முடிவிலா மகிமையில் பங்குபெற வேண்டுகிறேன். ஆமென்

அடியாள்

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம். வடமராட்சிப் பகுதியில் வல்வெட்டி பழைய பொலிஸ் ஸ்ரேசன் வீதியில் வேவில் பிள்ளையார் கோயிலுக்குத் தெற்குப் புறமாக அமைந்த வீடும் வளவும் 2 பரப்பு 13 ¼ குளி (அன்னம் வளவு) உடனடியாக விற்பனைக்குண்டு.

கோபால்
077 9970 130, 077 969 8942

**புலவர் வீடியோ கோண்டாவில்**

எடியூஸ் - சிசி பிறிமியரில் வீடியோ எடிற்றிங், Photo Shop Designing செய்யக்கூடிய ஆண்கள் தேவை.


077 685 3417 , 077 960 3249, 021 321 2973

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்



மஜெஸ்டிக் ப்ளாட்டினம்
10.00 a.m / 1.00 p.m / 4.00 p.m / 7.00 p.m
சில்வர்
10.15 a.m / 1.15 p.m / 4.15 p.m / 7.15 p.m
ப்ரொன்ஸ்
10.30 a.m / 1.30 p.m / 4.30 p.m / 7.30 p.m
Fri/Sat 9.30 p.m
விசாரணை 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

Mangala
தீபாவளியை முன்னிட்டு
வாடிக்கையாளருக்கு மாபெரும் போனஸ்




அனைத்துத் தளபாடங்களுக்கும் விசேட விலைக் கழிவு
கையிருப்பு உள்ளவரை மட்டுமே...! தெரிவுக்கு முந்துங்கள்!
மங்களா காட்சியறை
இல.536, K.K.S வீதி, மனோகரா சந்தி,
யாழ்ப்பாணம். தொ.பே : 021 222 8367, 0777 286069

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீபாவளி விற்பனை சூடு பிடித்துள்ள நிலையில், வவுனியா நகர நிரந்தர வியாபார நிலையங்கள், நடை பாதை வியாபாரிகள், தென்னிலங்கை வர்த்தகர்கள் தரப்புக்களால் களை கட்டியுள்ளது. வவுனியா கடை வீதி, தர்மலிங்கம் வீதி, இலுப்பையடி மற்றும் குருமன்காடு - மன்னார் வீதி போன்ற பகுதிகள் எங்கிலும் மக்கள் கூட்டம் தீபாவளி கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. (ற-21)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 568
சீட்டிழுப்பு திகதி 2016.10.27
வியாழக்கிழமை

வெற்றி இலக்கங்கள்
12 39 53 60 Z
சுப்பர் ஜக்பொட்
ரூ.57,280,480/=

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1309
சீட்டிழுப்பு திகதி 2016.10.27
வெற்றி இலக்கங்கள்
13 15 17 64 M
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 10,288,360/=

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 09.09.2016 சிவபத மடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

### அமரர் நாகேந்திரர் வேலாயுதபிள்ளை

மலர்வு 12.12.1924 — உதிர்வு 09.09.2016

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.10.2016) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் அன்றைய தினம் நண்பகல் 12.30 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நி.மு சரவணை கிழக்கு,
வேலணை, 9ஆம் வட்டாரம்.
த.மு.இல,24/2 மதவடி லேன்,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
077 4627285

## வடமாகாண ரீதியிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி (ஓவர்கேம்)

மொடல் ரீம், குறூப் மொடல் பிரான்ஸ் நிறுவனத்தின் அனுசரணையில் அரியாலை சனசமூகநிலையம் நடத்தும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி எதிர் வரும் 29, 30/10/2016 (சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை) நடைபெறவுள்ளது.

முதலாம் இடம் - சுற்றுக் கேடயம், 20, 000/= பணப்பரிசு
2ஆம் இடம் - 15 000/= பணப்பரிசு
3ஆம் இடம் - 5000/= பணப்பரிசு

பங்குபற்ற விரும்பும் கழகங்கள் தொடர்புகளுக்கு (J 5694) (14,17,18)

077 601 3550/ 077 907 3792/ 077 309 0839

## கண்ணீர் அஞ்சலி



### கார்த்திகேய குருக்கள் நகுலேஸ்வரி அம்மா

நேற்று (27.10.2016) வியாழக்கிழமை காலமான கார்த்திகேய குருக்கள் நகுலேஸ்வரி அம்மா அவர்கள் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ மகா முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.
கீரிமலை. (J 5702)(16,19)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 27.09.2016 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

### அமரர் கிருஸ்ணபிள்ளை தேவராசா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (27.10.2016) வியாழக்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெற்றது.
வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று 28.10.2016 வெள்ளிக்கிழமை மு.ப 11.30 மணிக்கு அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். இக்கிரியைகளில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்தி பெறப்பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (J 5698) (16,19)

இல.15, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## யாழ். பல்கலை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், கந்தர்மடம் பகுதியில் உள்ள வீட்டில் பிறமாவட்ட மாணவர்கள் தங்கியிருந்து கல்வி கற்றுவருகின்றனர். நேற்றுமுன்தினம் அவர்கள் தமது வீடுகளுக்குச் சென்றிருந்தபோது திருட்டு இடம் பெற்றது. மாணவர்கள் சுமார் 11 மணியளவில் வீட்டிலிருந்து புறப்பட்டுள்ளனர். அதே வீட்டில் அவர்களுடன் தங்கியுள்ள விற்பனைப்பிரதிநிதி ஒருவர் பிற்பகல் 3 மணியளவில் வீட்டுக்குச் சென்றபோது, வீட்டுக் கதவுகள் திறந்த நிலையில் காணப்பட்டுள்ளன. அது தொடர்பில் அங்கு தங்கியிருக்கும் – தமது வீடுகளுக்குச் சென்றிருந்த மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.
அவர்கள் திரும்பி வந்துபார்த்தபோது 3 மடிகணினிகள், அலைபேசி உள்ளிட்ட பொருள்கள் திருடப்பட்டுள்ளமை தெரிய வந்தது. அது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸில் முறையிடப்பட்டது. பொலிஸார் அங்கு சென்று விசாரணை மேற்கொண்டனர். தடயவியல் பொலிஸார் நேற்றுச் சென்று விசாரணை மேற்கொண்டனர். எனினும் தடயங்கள் எதுவும் அகப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை திருநெல்வேலியில் நேற்றுமுன்தினம் பட்டப்பகலில் வீடு புகுந்த திருடர் பணம் மற்றும் நகைகளை திருடியிருந்தனர். அது தொடர்பிலும் எவரும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ-4)

## விற்பனைக்கு

நிறைமாத சினையுடன் ஜெசிஇன பசுமாடும் நாம்பன் கன்றும், பசுக்கன்றும், ஒரு வருட யமுனாபறி கிடாயும், மறியும், 8 மாத கிடாய்குட்டிகளும், பொமேரியன் ஆண், பெண் நாயும், பொக்கட்ஸ் பெனியர் ஆண், பெண் நாயும், 45நாள் பூர்த்தியான பொமேரியன் குட்டிகளும், வெள்ளடியன் மணிதாரா, முயல், மூன்றுமாத டசோன் ஆண் நாய்க்குட்டிகளும்

தொடர்பு: வி.மயூரன்
மயூரன் பாம் சென்ரர்
நீர்வேலி கந்தசாமி கோயில் பின் வீதி
077 0158690

## INVITATION FOR BIDS
## JAFFNA MUNICIPAL COUNCIL

### Renovation of New Market Building (Upper Floor)
### Contract No :- JMC/WD/01/CF.Bu/2016/70

1. The Chairman Local Authority Procurement Committee on behalf of the Municipal Council, Jaffna Northern Province, invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of Building Construction for grade mentioned in the table below with the Institute for Construction Training and Development (ICTAD)
4. Qualifications requirements are indicated in section 4 of the bidding document. Additional details are provided in the Schedule (Section 5) of the bidding document.
5. Interested bidders may obtain further information from the Commissioner, Municipal Council Jaffna. (T.No: 021-2216468/ Fax : 021 2222 334) on any working day from 0900 hrs to 1400 hrs from 02 November 2016.
6. A Complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Commissioner, Municipal Council, Jaffna from 02 November 2016 until 22 November 2016 from 0900 hrs to 1400 hrs upon payment of a non-refundable fees of Rs. 2000.00 +VAT. The method of payment should be by cash.
7. Bids shall be delivered to the address below The Commissioner, Municipal Council, Jaffna. on or before 1400 hrs on 22 November 2016. Late Bids will be rejected, Bids will be opened at 1430 hrs on 22 November 2016 in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| Se. no | Bid NO | Description of Work | Engineer's Estimated Cost/(Rs in Million) | Estimated Cost with all Taxes /(Rs in Million) | Contract Period | Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Security Amount | Valid Period |
| 1. | JMC/WD/ 01/ CF.Bu/ 2016/70 | Renovation of New Market Building (Upper Floor) | 13.999 | 16.000 | 3 months | C 6 or above | 280.000.00 | 91 days (till 20.02. 2017) |

9. Pre bid meeting will be held at 10.00 hrs on 11 November 2016 in the Municipal Council Building, Jaffna. Interested bidders may attend the pre-bid meeting at their own expense.

*Chairman, Local Authority Procurement Committee,*
*Municipal Council, Jaffna.*
*Northern Province.*
*28.10.2016*

(C/23027)(10.19)

## GIS Software தொடர்பான மென்பொருளுக்கான கூறுவிலை கோரல்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்காக புவியியல் தக்வல் ஒழுங்கு வரைபடங்கள் தயாரிக்கும் பொருட்டு GIS Software தொடர்பான மென்பொருள் ஒன்றினை கொள்வனவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. குறித்த GIS Software தொடர்பான மென்பொருள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

### GIS Software

1) Spatial analysis facilitice
2) Creation of interactive maps from file,database and online sources
3) Creation of street level maps that incorporate GPS locations
4)View CAD date/satellite images
5) Reports and charts generation
6) date conversion for CAD

எனவே கூறுவிலை தரவிரும்புவோர் தங்களால் வழங்கப்படக் கூடிய GIS Software தொடர்பான மென்பொருள் பற்றிய அறிமுக விளக்கத்தினைக் குறிப்பிட்டு கூறுவிலையுடன் கீழே (1)-(3) வரையுள்ள ஆவணங்களையும் இணைத்து கடித உறையிலிட்டு கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "GIS Software தொடர்பான மென்பொருளுக்கான கூறுவிலை" எனக் குறிப்பிட்டு 'ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 10.11.2016 இற்கு முன்னதாக அனுப்பிவைக்கவும்.(தேவையான விவரங்களினையும் இணைத்து அனுப்பவும்)

(1) Company profile
(2) Certified Copy of Business Registration Certificate
(3) Certified Copy of VAT Certificate

ஆணையாளர்,மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(C 23026) (16,19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதி மீறிய சாரதிகளுக்கு தண்டம்

சாவகச்சேரி, ஒக்.28
இருள் சூழ்ந்த பின்னரும் வாகனத்தின் பிரதான விளக்கை எரியவிடாமல் வாகனத்தை செலுத்திய சாரதிக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது சாவகச்சேரி நீதிமன்று.
மாலை வேளையில் வாகனத்தின் பிரதான விளக்குகளை எரியவிடாமல் வீதியில் சென்ற வாகனத்தை தடுத்த போக்குவரத்துப் பொலிஸார் சாரதிக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். இந்த வழக்கு நேற்று மன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
விசாரனையின் போது குற்றவாளி குற்றத்தை ஒப்புக் கொண்டதை யடுத்து நீதிவான் சாரதிக்கு 3 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார்.
சாரதிய அனுமதிப் பத்திரம் மற்றும் காப்புறுதிப் பத்திரம் ஆகியவையின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 13 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
பொலிஸார் நிறுத்துமாறு சமிக்ஞை செய்தபோதும் நிறுத்தாமல் ஆபத்தை விளைவிக்கக்கூடிய வகையில் வாகனத்தைச் செலுத்திய சாரதிக்கு 6 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ற-9)

# மழை ஏமாற்றுவதால் நெற்செய்கை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஒக்.28
கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பெரும்போக நெற்செய்கையை விடவும் இந்த முறை குறைந்த அளவு நிலப்பரப்பிலேயே நெற் செய்கை செய்யப்படவுள்ளது. மழை வீழ்ச்சி பின்தள்ளிப் போனமையே இதற்குப் பிரதான காரணமாகும்.
இவ்வாறு யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.
யாழ். மாவட்டத்தில் பருவகால மழையை அடுத்து பெரும்போக நெற்செய்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
யாழ். மாவட்ட விவசாயிகள் நெல் விதைப்புக்கான வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இந்த வருடம் 11 ஆயிரத்து 550 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை பண்ணுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
கடந்த வருடத்தில் 11 ஆயிரத்து 805 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை செய்வது என்று தீர்மானிக்கப்பட்டபோதும் 10 ஆயிரத்து 723 ஹெக்ரேயர் நிலத்திலேயே விதைக்கப்பட்டது.
கடந்த வருடம் பெரும்போக செய்கையை மேற்கொண்ட விவசாயிகளுக்கு பச்சபெருமாள், ஏ.ரி 303, ஏ.ரி 362, ஏ.ரி 402, பிஜி 406, எச் 4, ஆட்டக்காரி, முருங்கன், மொட்டக்கறுப்பன், பெரியவெள்ளை போன்ற இனவகையான நெல் விதைகள்

> **யாழ். மாவட்டத்தில் பருவ கால மழையை அடுத்து பெரும்போக நெற் செய் கைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன. யாழ். மாவட்ட விவசாயிகள் நெல் விதைப்புக்கான வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இந்த வருடம் 11 ஆயிரத்து 550 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற் செய்கை பண்ணு வதற்குத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.**

வழங்கப்பட்டன.
இந்த வருடம் நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு வழமையான நெல் வகைகளுடன் ஏ.ரி. 309 என்ற புதிய வகை நெல்லினம் வழங்கப்பட்டுள் ளது.
இந்தப் புதிய வகை நெல்லினம் 6 விவசாயிகளுக்கு மானிய அடிப் படையில் வழங்கப்பட்டுள்ளது. இவற்றுடன் சேதனப் பசளைகளும் வழங்கப்பட்டுள்ளன.
கமநல சேவைகள் திணைக்களத்தால் கடந்த வருடம் கால போக நெற்செய்கைக்கு என 23 ஆயிரத்து 400 ஏக்கருக்கு மானிய அடிப்படையில் உரம் வழங்கப்பட்டது. இந்த வருடம் உரத்துக்குப் பதிலாகப் பணம் வழங்கப்படவுள்ளது.
பணம்வழங்கப்படும்நடவடிக்கைகள் அனைத்தும் அந்தந்தப் பிரிவு கமநல சேவைகள் திணைக்களம் ஊடாக நடை பெறுகின்றது- என்று யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.
(ற-21,10)

அமரர் ஞானப்பிரகாசம் ஜோன் அல்பேட்

31ம் நாள் நினைவு





அன்பும் இரக்கமும் நிறைந்த தந்தையயே இறைவா
உம்மை நாம் போற்றிப் புகழ்கின்றோம். ஏனெனில் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவுக்குள் வானக வாழ்வுக்குரியவையும் தேவ ஆவி தருபவையுமான கொடைகள் அனைத்தையும் பொழிந்து அமரர் ஞானப்பிரகாசம் ஜோன் அல்பேட் எனும் உமது அடியாரை இவ்வுலகில் ஆசீர்வதித்தீரே. இயேசுக் கிறிஸ்துவின் வழியாகவே இவரை உமது பிள்ளையாக்கி கிறிஸ்துவின் இரத்தத்தினாலேயே மீட்பு வாழ்வை கொடுத்தீரே உமக்கே என்றும் மாட்சியும் புகழும் உண்டாகுக. வாக்களிக்கப்பட்ட தூய ஆவியின் முத்திரையை கிறிஸ்துவுக்குள் பெற்றுக் கொண்ட இவரது ஆன்மாவும் அனைத்து விசுவாசிகளின் ஆன்மாக்களும் உமது நித்திய மாட்சி நிறை ஒளியை அனுபவமிக்க அருள்தாரும் எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்து வழியாகவே உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.
(எபேசியர் 1:1-14)

யாழ். அச்சுவேலி தூய சூசைமாமுனிவர் பங்கின் மகனாரான 28.09.2016 அமரத்துவமடைந்த **ஞானப்பிரகாசம் ஜோன் அல்பேட்** அவர்களின் 31 ஆம் நாள் நினைவுத்திருப்பலி அச்சுவேலி தூய சூசைமாமுனிவர் ஆலயத்தில் 29.10.2016 அதாவது நாளைய தினம் சனிக்கிழமை காலை 11 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும். அமரரின் ஆன்ம சாந்திதிருப்பலி ஒப்புக்கொடுக்கவும் தொடர்ந்து ஐயாவின் இல்லத்தில் நடைபெறும் உரிமைச்சோற்றிலும் பங்குபற்றவும் ஐயாவின் உறவுகளையும் நண்பர்களையும் அழைத்து நிற்கின்றோம். பாசத்துடன் குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு - அருட்தந்தை அல்பேட் ஜோ. அருள்ராஜா
நிறுவனர் மாற்றுவலுவுடைய யோருக்கான வலுவூட்டல் அமையம்.
வன்னி 077 2365648. திருமதி மேவிஸ் மைதிலி அமல்ராஜ் - 076 9020791



கிளிநொச்சி, கொக்காவிலில் நேற்றுக்காலை இரு டிப்பர் ரக வாகனங்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. ஒரு வாகனம் குடைசாந்தது. காயடைந்த சாரதி கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். கொக்காவில் பொலிஸார் விபத்துத் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-21,6)

## சுண்ணாம்புச் சூளை வீதியை திருத்தித் தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.28
மண்ணரிப்பு ஏற்பட்டு கால்வாயாக மாறியுள்ளது புதுக்குடிரியிருப்பு கைவேலி, சுண்ணாம்புச் சூளை வீதி. 120 குடும்பங்கள் நாளாந்தம் பயன்படுத்தும் இந்த பிரதான வீதியை அதிகாரிகள் சீரமைத்துத்தரவேண்டும். இவ்வாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.
புதுக்குடியிருப்பு கைவேலி கிராமத்தில் கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பொருக்கால் சுண்ணாம்புச் சூளை வீதி மிகவும் சேதமடைந்தது. இந்த வீதியை 120 குடும்பங்கள் அன் றாடம் அத்தியாவசிய தேவைக்காக பயன்படுத்திவருகின்றோம். மண்ணரிப்பு ஏற்பட்டு கால்வாயாக மாறியுள்ள வீதியில் மாட்டுவண்டி லும், உழவியந்திரம் மட்டுமே தற்போது பயணிக்க கூடியதாக உள்ளது. அவசர தேவைகளுக்கான நோயாளிகளை வைத்திய சாலைக்கு கொண்டுசெல்வதென்றால் பிரதான வீதிக்கு வந்தே எங்கள் பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.
இந்த வீதியைச் சீரமைத்துத் தருமாறு புதுக்குடியிருப்பு கிராம மக்கள் எல்லோரும் சேர்ந்து பல அதிகாரிகளுக்கு கடிதம் கொடுத்துள்ளோம். மாரிகாலம் ஆரம்பித்துள்ளது. வீதியைத் திருத்தா விட்டால் வெள்ளம் ஏற்படும் காலங்களில் நாங்கள் நீந்தியே வெளியிடங்களுக்கு செல்ல நேரிடும். அதிகாரிகள் வீதியை சீரமைத் துத் தர வேண்டும். - என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.
புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட பல வீதிகளை திருத்தி தரும்படி பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பல வீதிகள் சீரமைக்கப்படுகின்றன. சுண்ணாம் புச் சூளை வீதியும் விரைவில் திருத்தப்படும்- என்று புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார். (ற-21,7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அவைத் தலைவர் தெரிவால் மாகாண சபை அமர்வில் குழப்பம்

## இரு மணி நேரம் வாதப் பிரதிவாதங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.28

வடக்கு மாகாண சபையின் புதிய பிரதி அவைத் தலைவரை தெரிவு செய்வது தொடர்பில் அவையில் நேற்று கடும் வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன. இந்த விவாதம் சுமார் இரண்டு மணி நேரம் நீடித்தது.

வடக்கு மாகாண சபையின் 64 ஆவது அமர்வு அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தின் தலைமையில் நேற்று நடைபெற்றது. சபையின் ஆரம்பத்தில் பல்கலைக் கழக மாணவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் புதிய பிரதி அவைத் தலைவரைத் தெரிவு செய்வதற்கான அறிவிப்பை அவைத் தலைவர் வெளியிட்டார்.

பதில் முதலமைச்சர் த.குருகுலராஜா, பிரதி அவைத் தலைவர் தெரிவை அடுத்த கூட்டத் தொடருக்கு பிற்போடுமாறு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கடிதம் மூலமாக மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளார். பிரதி அவைத் தலைவர் தெரிவை பிற்போட வேண்டும்- என்றார்.

முதலமைச்சர் இந்தச் சபையின் ஒரு உறுப்பினர். பிரதி அவைத் தலைவர் தெரிவில் சபையின் உறுப்பினர்கள் வாக்களிக்கும் போது அவரும் வடமாகாண சபையின் உறுப்பினர் என்ற ரீதியில் வாக்களிக்கலாம். அதை விடுத்து அவர் கடிதம் மூலம் இதைப் பிற்போடக் கோருவது சபைக்கு உகந்தது அல்ல. இன்றைய தினமே (நேற்று) தெரிவு நடத்தப்படவேண்டும் - என்று ஆளும் கட்சி உறுப்பினர் கே.சயந்தன் வலியுறுத்தினார்.

ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், அவைத் தலைவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தால், அங்கும் வடக்கு மாகாண சபையை நடத்தலாம். அடுத்த கூட்டத் தொடரில்தான் பிரதி அவைத் தலைவர் தேர்வு நடத்த வேண்டும் - என்றார்.

இனியாவது சபை கொந்தளிப்பில்லாமல் நடக்க வேண்டும். பிரதி அவைத் தலைவராக ம.அன்ரனி ஜெகநாதன் இருந்த போது நேர்மையாக உள்ளதை உள்ளபடி சொல்லிச் செயற்பட்டார். அந்தப் பதவிக்கு போட்டி போட்டு களங்கப்படுத்தக் கூடாது - என்று ஆளும் கட்சி உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்தார்.

அமைச்சர் பா.டெனீஸ்வரன், பிரதி அவைத் தலைவர் பதவிக்கு இவ்வளவு சண்டை நடக்கின்றது. இதற்கே இவ்வளவு சண்டை ஏற்படுகின்றது என்றால், சிங்களவர்கள் எமக்கு தனி நாடு தந்தால் நாம் அனைவரும் எங்களுக்குள்ளே அடிபட்டு சாகும் நிலைமை தான் வரும் - என்றார்.

வடக்கு மாகாண பிரதி அவைத் தலைவர் நியமனம் தொடர்பில் முதலமைச்சர் கருத்துத் தெரிவிக்கலாம். அவர் இருக்கும் போது தான் அவைத் தலைவர் தெரிவை மேற்கொள்ள வேண்டும் என்ற நியதி இல்லை. மேற்படி தெரிவு தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் ஒரு உறுப்பினர். அத்துடன் அவர் இல்லாதபோது அவரின் வாக்கு இல்லாமல் போகும் அவ்வளவுதான். இன்றைய தினமே தெரிவு நடத்தப்பட வேண்டும்- என்று ஆளும் கட்சி உறுப்பினர் பரஞ்சோதி குறிப்பிட்டார்.

பிரதி அவைத் தலைவர் பதவியிலிருப்பவர் இன்று வரை இந்தச் சபையை தலைமை தாங்கியது இல்லை. அத்துடன் அந்தப் பதவி அவரவர்கள் கல்வெட்டிலேயே பதியப்படுகின்றது- என்றார் ஆளும் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர் பசுபதிப்பிள்ளை.

பிரதி அவைத் தலைவர் தெரிவு இன்றே மேற்கொள்ள வேண்டும். இன்று நடத்துவதை விடுத்து அடுத்த அமர்வுக்கு ஒத்தி வைக்கும் பட்சத்தில் அடுத்த சபையும் இன்றையதைப் போலவே குழப்பமாகக்காணப்படும். சபைநேரத்தை வீணடிக்காது இன்றைய தினமே தெரிவு செய்யப்பட வேண்டும்- என்று ஆளும் கட்சி உறுப்பினர் ஆனோல்ட் தெரிவித்தார்.

மாகாண சபை உருவாக்கப்பட்ட பின்னர் அனைவரும் ஒற்றுமையாக இணைந்து எத்தனையோ பிரேரணைகள் நிறைவேற்றி இருக்கின்றோம். நாம் எந்த ஒரு வாக்கெடுப்புக்களை நடத்தியதில்லை. இப்போது இதற்கு முந்தியடித்துக் கொண்டு வாக்களிப்பு நடைபெற வேண்டும் என்று வலியுறுத்துவதன் நோக்கம் என்ன?- என்று ஆளும் கட்சி உறுப்பினர் விந்தன் கேள்வி எழுப்பினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் வழங்கிய வாக்குகளில் அதிகப்படியான வாக்கைப் பெற்ற அன்ரனி ஜெகநாதனை பிரதி அவைத் தலைவராக தேர்வு செய்வதாகவே முதலமைச்சர், பிரதி அவைத் தலைவர் தேர்வின் போது உரையாற்றினார். அந்த வகையில் மாவட்டத்தில் வாக்களிப்பின் மூலம் அன்று தேர்வு செய்யப்பட்ட நால்வரில் இன்று வரை நானே எஞ்சியுள்ளேன். அன்ரனி ஜெகநாதன் கட்சி ரீதியாகத் தேர்வு செய்யப்படவில்லை என்பதனையும் இங்கே கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இந்தத் தேர்வை ஒத்தி வைக்கலாம் என்றே கருதுகின்றேன் - என்று முல்லைத்தீவு மாவட்ட ஆளும் கட்சி உறுப்பினர் து.ரவிகரன் கூறினார்.

அமைச்சரவைத் தேர்வில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கான சந்தர்ப்பம் கிடைக்காததால்தான் பிரதி அவைத் தலைவர் பதவி முல்லைத்தீவுக்கு வழங்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தில் நானும் ரவிகரனுமே சேவை மூப்பில்உள்ளோம். கமலேஸ்வரனை முல்லைத்தீவின் உறுப்பினராக மக்கள் கருதவில்லை- என்று ஆளும் கட்சி உறுப்பினர் சிவனேசன் குறிப்பிட்டார்.

அதற்குப் பதிலளித்த அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், மக் கள் பிரதிநிதியின் பெயரைக் கூறி அவரை மக்கள் ஏற்கவில்லை எனக் கூறும் அதிகாரம் அல்லது உரிமை கிடையாது. அதனால் அந்தக் கருத்து பதி வேட்டில் இருந்து நீக்கப்படுகின்றது என்றார்.

பிரதி அவைத் தலைவர் என்பது முல்லைத்தீவு மக்களுக்காக வழங்கப்பட்ட ஓர் இடம். அதனை அவர்களிடமே வழங்க வேண்டும். அதே நேரம் மே 18ஆம் திகதி அன்று வெடி கொழுத்தியவர்களிடம் இந்தப் பதவியை வழங்க முடியாது - என்று ஆளும் கட்சி உறுப்பினர் ச.சுகிர்தன் கூறினார். (ற-5,8,10)

# நல்லூரான் பதியில் அருளுரை

யாழ்ப்பாணம், ஒக்.28

யாழ்ப்பாணம் சின்மயா மின் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா அவர்களால் வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் மாலை 6.30 முதல் 7.30 மணிவரை ஆன்மீக அருளுரை நடாத்தப்பட்டு வருகின்றது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை கந்தபுராண அரங்கேற்றம் எனும் தலைப்பின் கீழ் ஆன்மீக அருளுரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ)

# முதியோர் மாற்று ஆற்றலுடையோர் தினம்

யாழ்ப்பாணம் ஒக். 28

நல்லூர் பிரதேச செயலக முதியோர் மாற்று ஆற்றலுடையோர் தின விழா இன்று பி.ப.2 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பிரதேச செயலர் ஆ.சிறி தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு, முதன்மை விருந்தினராக கைதடி சாந்தி நிலைய அத்தியட்சகர் த.கிருபாகரன் கலந்து கொள்வார். நிகழ்வில் முதியோர்களின் பாடல், கவிதை, நடனம், நாடகம் போன்றவை இடம்பெறும். முதியோர் கௌரவிப்பும் முதியோர் மாற்றுவலுவுள்ளோர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியட்டியவர்களுக்கு பரிசில்களும் அன்பளிப்புகள் வழங்கலும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# கௌரிக் காப்பு கட்டுதல் வழிபாடு

கிளிநொச்சி ஒக். 28

முழங்காவில் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் கேதாரகௌரி விரத காப்புக் கட்டுதல் நிகழ்வு நாளை மறுதினம் மு.ப.11.00 மணி தொடக்கம் இட்ம்பெறும் என்று ஆலய ஆதீன தர்மகர்த்தா செ.தெட்சணா மூர்த்திக் குருக்கள் தெரிவித்தார்.

ஆலயத்தில் தினமும் பி.ப. 2.00 மணி தொடக்கம் கேதார கௌரி விரத வழிபாடுகள் இடம்பெற்றுவருவதுடன், விரத இறுதித் தினமான நாளைமறுதினம் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றுக் காப்புக் கட்டல் இடம்பெறும் என்று அவர் தெரிவித்தார். (வ- 9)

# பொதுநோக்கு மண்டபத்தின் கூரைக்கு தரமில்லாத மரங்கள்

## கண்டறிந்தது கணக்காய்வுக் குழு

கண்டாவளை - தட்டுவன்கொட்டி கிராமத்தில் நிர்மாணிக்கப்படும் பொதுநோக்கு மண்டபத்துக்கான கூரைக்குத் தரமில்லாத மரங்கள் போடப்பட்டதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டதனையடுத்து, கூரைக்கு ஏற்றப்பட்டிருந்த மரங்கள் அனைத்தும் மீளவும் கீழே இறக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டன. அதில் 30 க்கும் மேற்பட்ட மரங்கள் தரமற்றவை என்பதைக் கணக்காய்வுத் திணைக்கள விசாரணைப் பிரிவினர் கண்டறிந்தனர். அதனையடுத்து அந்த மரங்களை அகற்றுமாறும் தரமான மரங்களைப் போடுமாறும் அவர்கள் பணித்துச் சென்றனர். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

தட்டுவன்கொட்டி பொதுநோக்கு மண்டபம் 10 மில்லியன் ரூபா அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சீரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. சீரமைப்புப் பணி ஒப்பந்தக்காரரிடம் வழங்கப்பட்டது. அதன்படி, முன்னைய கட்டடத்தின் ஓடுகள் இறக்கப்பட்டு கட்டடம் சீரமைக்கப்பட்டது. அதற்கான கூரைக்கான மரங்கள் கடையில் கொள்வனவு செய்யப்பட்டன. எனினும் அந்தக்கட்டடத்தில்முன்னர் இருந்த மரங்கள்சிலவும், கடையில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட மரங்களுடன் சேர்க்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. கடையில் கொள்வனவு செய்யப் பட்ட மரங்களில் தரமற்றவையும் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

அவை தரமற்றவை என்ற குற்றச்சாட்டு எழுந்ததால், அவற்றுக்கு வர்ணம் பூசப்பட்டு பொதுநோக்கு மண்டபத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

அந்தக் கட்டடத்தைச் சீரமைக்கும் பணியின்போது முதலில் ஒரு ஒப்பந்தகாரர் மூலமாகக் கூரை வேலைகள் முன்னெடுக்கப்பட்டன. அந்த மண்டபத்துக்குக் கொள்வனவு செய்யப்பட்ட மரங்கள் தரமற்றவை என்பதை, கூரைவேலை செய்த ஒப்பந்தகாரர் கண்டறிந்து கிராம அபிவிருத்திச் சங்கத்துக்குத் தெரிவித்திருந்தார். அது தொடர்பில் பிரதேச செயலரிடம் முன்னர் கேட்டபோது, கூரை மரங்களுக்கு போடப்பட [illegible] பட்டன. அவற்றை நீக்கி தரமான மரம் போடப்பட்டு சீரமைப்பு வேலைகள் மீளத் தொடங்க அனுமதிக்கப்பட்டது என்று தெரிவித்திருந் தார். அதன் பின்னர் முதலில் கூர வேலை செய்த ஒப்பந்தகாரரும் மாற்றப்பட்டு, புதிய ஒப்பந்தகாரர் நியமிக்கப்பட்டார். அதனை நியமிப்பது தமது பணி என்று ஒப்பந்தம் வழங்கிய தரப்பினர் தெரிவித்திருந்தனர். எனினும் தரமற்ற மரங்கள்தான் மீண்டும் போடப்பட்டதாக கணக் காய்வுத் திணைக்களத்தினருக்கு அறிவிக்கப்பட்டது. அதனடிப் படையில் அவர்கள் அந்த மண்டபத்துக்குச் சென்றபோது மரங்கள் அனைத்தும் கூரையில் ஏற்றப்பட்டுவிட்டன. அவற்றின் தரம் தொடர்பில் சந்தேகம் இருந்ததனால் அனைத்து மரங்களையும் கீழே இறக்குமாறு அவர்கள் பணித்தனர்.

அதன்படி கீழே இறக்கிப் பரிசோதித்தபோது 50க்கும் மேற்பட்ட மரங்களில் 30க்கும் மேற்பட்ட மரங்கள் தரமில்லாதவை என்பதை கணக்காய்வுத் திணைக்கள விசாரணைக் குழுவினர் கண்டறிந்தனர். அவற்றை நீக்குமாறும் தரமான மரங்களைப் போடுமாறும் அவர்கள் பணித்துச் சென்றனர். (வ-4)

# மாணவர்கள் படுகொலை; சம்பவ இடத்தில் நேற்றும் விசாரணை

யாழ்ப்பாணம், ஒக். 28

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட சம்பவ இடத்தில் நேற்றும் விசாரணை மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

அந்தப் பகுதியில் சம்பவம் இடம்பெற்றதும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. நேற்றுமுன்தினமும் தடயவியல் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். இந்நிலையில் நேற்றும் அங்கு விசாரணை நடத்தப்பட்டது. புலனாய்வுப் பிரிவினர் அங்கு விசாரணை மேற்கொண்டு, அந்த இடத்தை அண்மித்த வீடுகளிலும் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர்களான நடராசா கஜன், பவுண்ராஜ் சுலக்சன் ஆகிய இருவர் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு சுட்டுக் கொல்லப்பட்டனர். (வ-4,106)

# மாணவர்களுக்கு போட்டிகள்

தென்மராட்சி, ஒக்.28

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி மாணவர்களுக்கிடையிலான போட்டிகள் நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் நடைபெறும் என்று பொது நூலக நூலகர் அறிவித்தார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானைகளை அடக்க 600 கி.மீ. மின் வேலி

## வவுனியாவில் அமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 28

யானைகளின் அட்டகாசத்தை கட்டுப்படுத்துவதற்கு வவுனியா மாவட்டத்தில் 600 கிலோ மீற்றருக்கு மின்சார வேலி அமைப்பதற்கு அரசிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. முதற்கட்டம் 2 மில்லியன் ரூபா நிதி கிடைத் துள்ளது.

இவ்வாறு வவுனியா மாவட்டச் செயலாளர்எம்.பி.றோகணபுஸ்ப குமார தெரிவித்தார்.

வவுனியா நெடுங்கேணி சந்தைக்குள் நேற்றுமுன்தினம் இரவு நுழைந்த காட்டு யானைகள் சந்தையில் இருந்த மரக்கறிகளை சூறையாடின. கடைகளுக்குள் நுழைந்த யானைகள் மரக்கறி களை எடுத்து உண்டதுடன் சந்தையின் முன்பகுதியையும் நாசம் செய்தன.

> “பல நாள்களாக இரவு வேளைகளில் யானைகள் நெடுங்கேணி பகுதிகளில் நடமாடுகின்றன. பல அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன.”

பல நாள்களாக இரவு வேளைகளில் யானைகள் நெடுங்கேணி பகுதிகளில் நடமாடுகின்றன. பல அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன. இதனால் மனிதர்கள் இரவு வேளைகளில் நடமாடுவதற்கு அச்சமாக உள்ளது. யானைகளை கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் மின்சார வேலிகளை அமைத்துத் தர வேண்டும்- என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

“சேமமடு பகுதி மக்கள் விடுத்த கோரிக்கைக்கு இணங்க அந்த பகுதியிலேயே மின்சார வேலி அமைக்கப்படவுள்ளது. நெடுங்கேணிப் பகுதியில் காட்டு யானைகளை கட்டுப்படுத்துவதற்கான மின்சார வேலிகளை அடுத்த கட்ட கட்டட நிதி ஒதுக்கீட்டில் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது'' - என்று வவுனியா மாவட்டச் செயலாளர் தெரிவித்தார். (ந-21,7)

## நீதிமன்றில் உடற் சோர்வு நீக்கியவருக்கு மறியலில்

சாவகச்சேரி, ஒக். 28

நீதிமன்ற அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் நடந்து கொண்ட கொடிகாமம் வாசியை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்று உத்தரவிடப்பட்டது.

நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் வழக்கு விடயமாக மனுத் தாக்கல் (மோசன்) செய்து விட்டு காத்திருந்தவர் திடீரென எழுந்து இரு கைகளையும் நிமிர்த்தி உடல் சோர்வைச் சத்தத்துடன் நீக்க முற்பட்டார்.

குறித்தநபரின் திடீர் நடவடிக்கை நீதிமன்ற அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தியது என்று அவர் மீது வழக்குத் தாக்கல் செய்ய நீதிமன்றப் பொலிஸார் முற்பட்டனர். எனினும் அவர் அளவுக்கதிகமான மதுபோதையில் காணப்பட்டதையடுத்து சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று மது பரிசோதனை செய்த பின்னர் மீண்டும் பொலிஸாரால் நீதிமன்றில் முற்படுத்தப் பட்டார்.

மதுபோதையில் நீதிமன்ற அமைதிக்குப்பங்கம் விளைவித்தார் என பொலிஸார் தாக்கல் செய்த வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த நபரை நவம்பர் பத்தாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை குடிவெறுப்பு சிகிச்சைநிலையத்தில் சிகிச்சை வழங்கவும் உத்தரவிட்டார்.

ஓட்டோ சாரதியான இவர் கொடிகாமம் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்து தொடர்பாக பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு செலுத்துவதற்கான கால தவணை முடிவடைந்ததால், நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்து வழக்கு அழைக்கப்படும்போது பணம் செலுத்துவதற்கு நீதிமன்றுக்கு வந்திருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

### முத்தரிப்புத்துறை தாக்குதல் விவகாரம்

## சந்தேகநபர்களுக்கு நேற்று பிணை வழங்கியது நீதிமன்று



மன்னார், ஒக்.28

மன்னார், முத்தரிப்புத்துறைக் கிராமத்தில் கடற்படைச் சிப்பாய்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 6 சந்தேகநபர்கள் உட்பட 9 பேரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர் என்று அவர்களின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ஜெபநேசன் லோகு தெரிவித்தார்.

முத்தரிப்புத்துறை கிராமத்தில் கடந்த 18 ஆம் திகதி இரவு கடற்படைச் சிப்பாய்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட குறித்த கிராமத்தைச் சேர்ந்த 6 பேர் மூன்றாவது தடவையாக நேற்று வியாழக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

குறித்த 6 சந்தேகநபர்களும் மன்னார் நீதிவான் ஏ.ஜீ.அலெக்ஸராஜாவின் உத்தரவுக்கு அமைவாக அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர். 5 சாட்சிகள் அடையாள அணிவகுப்பில் அடையாளம் காண வந்திருந்தனர்.

4 சந்தேகநபர்கள் வெவ்வேறு சாட்சியங்களால் அடையாளம் காணப்பட்டனர். 2 சந்தேகநபர்கள் 5 சாட்சிகளாலும் அடையாளம் காணப்பட்டனர்.

அடையாள அணிவகுப்பு நடைபெற முன்னர், சாட்சி ஒருவர் வைத்தியசாலையில் உள்ளார் என்றும், அவர் வைத்தியசாலையில் இருந்து சிகிச்சை பெற்று வந்த பின்னரே இந்த அடையாள அணி வகுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் சிலாபத்துறை பொலிஸாரால், பாதிக்கப்பட்ட கடற்படைச் சிப்பாய்கள் சார்பாக முன்னிலையான சட்டத்தரணியாலும் மன்றில் தெரிவிக்கப்பட்டது.

குறித்த ஆட்சேபனைக்கு சந்தேகநபர்கள் சார்பான சட்டத்தரணிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இரண்டாவது தடவையாக அடையாள அணிவகுப்பு நடைபெறவுள்ளமையால் மன்றில் முன்னிலையான 5 சாட்சியங்களை வைத்து குறித்த அடையாள அணிவகுப்பு நடத்தப்பட வேண்டும் என மன்றின் கவனத் துக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது.

கைது செய்யப்பட்ட 6 சந்தேகநபர்களுடன் மேலும் 3 சந்தேகநபர்கள் திறந்த நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டு பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. ஒவ்வெறு சந்தேகநபர்களும் தலா ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் குறித்த 9 சந்தேகநபர்களும் சிலாபத்துறை பொலிஸ் நிலையத்துக்குச் சென்று கையொப்பமிடவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது.

6 சந்தேகநபர்களும் விளக்கமறியலில் இருந்தபோது சிறைச்சாலையினுள் வைத்து புகைப்படம் எடுக்கப்பட்டமை மற்றும் அவர்களுக்கு உரிய முறையில் உணவுகள் வழங்கப்படாமை தொடர்பில் நீதிமன்றில் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அந்தச் சம்பவங்கள் தொடர்பில் உரிய விசாரனை நடத்தப்பட வேண்டும் என்று நீதிவான் உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

சந்தேகநபர்கள் சார்பாக மூத்த சட்டத்தரணி அன்ரன் புனித நாயகம், சட்டத்தரணி அர்யுன் ஆகியோர் முன்னிலையாகினர். வழக்கு விசாரணை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது எனவும் சட்டத்தரணி எஸ்.ஜெபநேசன் லோகு தெரிவித்தார். (ந-56)

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

University of Jaffna will entertain applications up to **09.11.2016** from suitably qualified persons for the under mentioned posts.

1. **Posts of Temporary Lecturer/Temporary Instructor in Art & Design**
2. **Posts of Visiting Lecturer/ Visiting Instructor in Drama & Theatre Arts**
3. **Posts of Visiting Demonstrator in Spatial Information System (SIS) and Remote Sensing (Planning)**

**Qualification for Visiting Lecturer**

a) A special degree in relevant field/subject and a Postgraduate degree (M.Phil/Ph.D) in relevant field/subject **OR**

b) First or second class special degree in relevant field/subject with at least five years teaching experience

**Qualification for Visiting Demonstrator**

A special degree in the field Planning

Application form each position may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, SriLanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form at People`s Bank, University Branch or at the Shroffs counter of the University of Jaffna.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order for Rs.100/-drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order for Rs.100/-to the applications forms drawn in favour of the Bursar, University of Jaffna.

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA**
**27.10.2016**

(c/23025) (13.1821)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் தலைமைக் குடும்ப மாணவர் விலகலே அதிகம்

## புதுக்குடியிருப்பில் நடத்தப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக்.28

புதுக்குடியிருப்பில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த, பணிப் பெண் வேலைக்காகச் சென்ற பெண்களின் குடும்பங்களைச் சேர்ந்த சிறார்களே பாடசாலை செல்லாத மாணவர்களாக அதிகம் இனங்காணப்பட்டனர். புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம், பொலிஸ் திணைக்களம், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் இணைந்து மேற்கொண்ட ஆய்வில் இந்த விடயம் கண்டறியப்பட்டது.

> புதுக்குடியிருப்பில் பாடசாலைக்குத் தொடர்ச்சியாக வராத மாணவர்களை மீள இணைக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களை உடனடியாகப் பாடசாலைகளில் இணைக்கும் முயற்சி எடுக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பில் பாடசாலைக்குத் தொடர்ச்சியாக வராத மாணவர்களை மீள இணைக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களை உடனடியாகப் பாடசாலைகளில் இணைக்கும் முயற்சி எடுக்கப்பட்டது. அதன்போது கணவனை இழந்த அல்லது கணவரால் கைவிடப்பட்ட பெண்களின் குடும்பங்கள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்ற பெண்களின் பிள்ளைகளே அதிகம் பாடசாலையில் இருந்து இடைவிலகியவர்களாகக் காணப்பட்டனர்.

இரு குடும்பங்களில் ஆறு பிள்ளைகள் பாடசாலை செல்லாது இருப்பதும், ஒரு பாடசாலையில் 65க்கும் மேற்பட்ட மாணவர்கள் தொடர்ச்சியாக வரவு குறைவாக உள்ளமையும் இதன்போது இனங்காணப்பட்டது. நாளாந்தம் கூலி வேலை செய்வதும், அதற்காகச் சிலர் பிள்ளைகளை அழைத்துச் செல்வதும், சிலர் மூத்த பிள்ளையை வீட்டில் விட்டு வேலைக்குச் செல்வதும் இதற்தான முக்கிய காரணங்களாகக் காணப்பட்டன.

"பாடசாலைக்கு ஒழுங்காக வருகை தராத மாணவர்கள், இடைவிலகுகின்ற மாணவர்கள் தொடர்பான விவரங்கள் அதிபர்கள், கிராம சேவகர்கள் ஊடாகக் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மாணவர்களுக்குக் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களை மீண்டும் பாடசாலையில் இணைத்து கல்வியைத் தொடர வழியேற்படுத்தப்படுகின்றது. இது தொடர்பாக தொடர்ச்சியான கண்காணிப்பை மேற்கொண்டுள்ளோம்"- என்று முல்லைத்தீவு மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் தெரிவித்தார்.

(ற-21,7)

# வவுனியா நகர சபை ஊழியர் குடும்பத்துடன் போராட்டம்

## வடக்கு உள்ளூராட்சி சபையின் ஆணையார், அதிகாரிகளால் அநீதி என்கிறார்



யாழ்ப்பாணம், ஒக்.28

வடக்கு மாகாண உள்ளூராட்சி சபையின் ஆணையாளராலும், அதிகாரிகளாலும் அநீதி இழைக்கப்பட்டது என்று தெரிவித்து வவுனியா நகர சபை ஊழியர் ஒருவர் தனது குடும்பத்தினருடன் சேர்ந்து உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தினார்.

நேற்று வடக்கு மாகாண சபையின் அமர்வு நடைபெற்ற நிலையில் மாகாண சபைக் கட்டடத் தொகுதிக்கு முன்பாக அவர் போராட்டம் நடத்தினார்.

"எனக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாகப் பல தரப்பினரிடம் முறையிட்டேன். அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனக்கு நீதி கிடைக்க வேண்டும்"- என்று போராட்டத்தில் ஈடுபட்டவர் தெரிவித்தார்.

" குற்றத்தில் ஈடுபட்டேன் என்று என் மீது பழி சுமத்தப்பட்டது. நான் 2015ஆம் ஆண்டு மோட்டார் போக் குவரத்து விதிகள் தொடர்பான குற்றத் துக்கு இலக்கானேன். அதற்குரிய தண் டப் பணத்தைச் செலுத்தினேன் அதன் பின்னர் நான் பணியில் ஈடுபட்டேன். வவுனியா நகர சபையில் மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட சம்பள அளவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டும் என நடத்தப்பட்ட போராட்டங்களில் சக தொழிலாளர்களுடன் பங்கேற்றேன். அதற்காக எம்மைத் தாக்கிய சம்பவங்களும் நடந்தன.

கடந்த ஆண்டு ஐப்பசி மாதமளவில் எனக்குப் பணித் தடை விதிக்கப்பட்டது. நான் போக்குவரத்து சார்ந்த குற்றத்தில் ஈடுபட்டதால் என் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. குறித்த சம்பவம் நடந்து 3 மாதங்களின் பின்னர் நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனது விடயம் குறித்து பொதுச் சேவை ஆணைக்குழுவிடம் தெரிவிக்க வேண்டும் என்று வடக்கு மாகாண சபையினர் எனக்கு அறிவுறுத்தினர். அதன்படி கடந்த சித்திரை மாதம் பொதுச் சேவை ஆணைக்குழுவுக்குச் சம்பவம் தொடர்பில் பிரதி ஒன்றை அனுப்பினேன். இது வரை அதற்கு எந்தப் பதிலும் வழங்கப்படவில்லை - என்றும் அவர் குறிப்பிட்டார்.

போராட்டத்தில் ஈடுபட்டவரை வடக்கு மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்கள் சந்தித்துப் பேசினர். அதன் பின்னரும் குறித்த ஊழியர் போராட்டத்தைத் தொடர்ந்தார். (ற-21,8,9,415)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## இம்மனுவல் றோசாயிறோ திருச்செல்வம்

(இளைப்பாறிய ஆசிரியரும், ஊடகவியலாளரும்)

அன்னையின் மடியில்
02.07.1934

ஆண்டவன் அழைப்பில்
28.09.2016

உங்கள் சுவாசம் – எங்கள்
உயிர் மூச்சில் கலந்திருக்கின்றது
உருவம் மறைந்த பின்னும்
உங்கள் உணர்வுகள் என்றும் எம்முடன் இரண்டறக் கலந்து
உயிர்ப்புடன் தான் இருக்கின்றது.
உண்மை உழைப்பால் – எமை
உயர்த்தி ஏற்றம் பெற வைத்தீர்கள்
உத்தமராய், உயர்ந்த பண்பினால்
உலகை வென்று வலம் வந்தீர்கள்
உற்றவரும் மற்றவரும்
உவகை பொங்கி போற்ற நின்றீர்கள் – இனி
உள்ளங்களில் ஒளிக்கீற்றாய் – எம்
உயிராக இருப்பீர்கள்
உயிர் பிரியும் நொடி வரைக்கும் – என்றும்
உங்கள் இனிய நினைவுகளில் வாழ்ந்திருப்போம் – சேர்ந்திங்கு..

இல.16, ஆசீர்வாதம் லேன்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(C 23022)
(14,17,18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரோதங்கள் பேசுவதை விடுத்து ஒன்றுபட்டு இருப்பதே நலம்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் லிங்கநாதன் அறிவுரை

வவுனியா, ஒக்.28

குரோதங்கள் பேசி நாம் சுமார் அறுபது ஆண்டுகளைக் கடந்து விட்டோம். இனிவரும் காலங்களில் நாம் ஒன்றுமையாக இருந்து எமது எதிர்காலச் சந்ததிக்கு நல்லது செய்யவேண்டும். தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பெறவேண்டுமானால் இருசமூகங்களுக்குமிடையேபுரிந்துணர்வுஅவசியம்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன்.

வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலத்தின் 60 ஆவது ஆண்டு விழா நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது. அதில் கலந்துகொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

மிக நெருக்கடியாக காலகட்டத்தில் தமிழ் பேசும் மக்களாகிய நாம் உள்ளோம். இரு சமூகங்களின் உரிமைகளைப் பெற வேண்டுமானால் தமிழ், முஸ்லிம் மக்களிடையே நிரந்தரமான புரிந்துணர்வு இருக்க வேண்டும்.

முஸ்லிம் பாடசாலைகள் என்றால் முஸ்லிம் மதத்தினரைத் தவிர அங்கு வேறு மதங்கள் இருக்காது என்ற நிலைப்பாடு எனக்குள் இருந்தது. மொழியில் நாங்கள் ஒன்றாக இருந்தாலும் மதத்தால் வேறுபட்டவர்கள். ஆனால் இங்கே இந்த பாடசாலையிலே இந்து மதம், கிறிஸ்தவ மதம், இந்து ஆசிரியர், கிறிஸ்தவ ஆசிரியர்கள், என்று பார்கின்றபொழுது உண்மையிலேயே நான் திகைத்து விட்டேன். இது உண்மையிலே ஒரு முன்னுதாரணமாகச் சொல்லக்கூடிய விடயம். இப்படியாகத்தான் நாங்கள் வளரவேண்டும். குரோதங்கள் கதைத்து கதைத்து கிட்டத்தட்ட அறுபது ஆண்டுகளைக் கடந்துவிட்டோம். இனிவரும் கால்ங்களிலே நாங்கள் ஒற்றுமையாக இருந்து எங்களுடைய எதிர்காலச் சந்ததிக்கு நல்லது செய்யவேண்டும். அதற்கு எங்களுடைய முழு ஒத்துழைப்பையும் நாங்கள் வழங்குவோம் - என்றார். (ற-21)

# சவாலுக்கு முகம் கொடுத்து சேவை செய்ய எவருமில்லை

## அரச முகாமைத்துவ உதவியாளர்கள் சங்க நிகழ்வில் யாழ். மாநகர ஆணையாளர் கவலை



யாழ்ப்பாணம், ஒக்.28

முகாமைத்துவ உதவியாளர்கள் புதிய விடயங்களை அறிவதற்கான துணிவை படிப்படியாக இழந்துவிட்டனர். சவால்களுக்கு முகம்கொடுத்து சேவை செய்வதற்கு யாரும் முன்வருவதில்லை.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன்.

மத்திய - மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர்கள் சங்கத்தின் 14ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் நேற்று யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் ஜெயசங்கர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

மத்திய, மாகாண அரச முகாமைத் துவ உதவியாளர்கள் சங்கம் கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச்சேவையாற்றுகின்றது. உரிமைகளை வெல்வதற்கு இங்கு மட்டுமல்ல பல நாடுகளில் தொழிற் சங்கங்களின் முக்கியத்துவம் பெரியளவில் உணரப்படுகின்றது. தற்போது அனைவரும் புதிய விடயங்களை அறிவதற்கான துணிவைப் படிப்படியாக இழந்துள்ளோம். சவாலுக்கு முகம் கொடுத்து சேவை செய்வதற்கு யாரும் முன்வருவதில்லை. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும் - என்றார்.

நல்லூர் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஆ.சத்தியமூர்த்தி, மத்திய, மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவரும் யாழ். மாநகர சபை ஆலோசகருமான இரத்தினசிங்கம், சேவையிலுள்ள முகாமைத்துவ உதவியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மத்திய மகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் பொருளாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற பத்மினி லூயில், யாழ். மாநகர சபை ஆணையாளர், நல்லூர் பிரதேச நிர்வாக உத்தியோகத்தர் ஆ.சத்தியமூர்த்தி, யாழ். மாநகர சபை ஆலோசகர் இரத்தினசிங்கம் ஆகியோர் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். (ற-7)

# தரம் பிரிக்கப்படாத கழிவு சேகரிப்பது நிறுத்தப்படும்

## யாழ். மாநகர சபை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.28

எதிர்வரும் கார்த்திகை மாதம் முதல் தரம் பிரிக்கப்படாத கழிவுப் பொருள்கள் யாழ். மாநகர சபையால் சேகரிக்கப்படாது.

இவ்வாறு யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.வகீசன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இலங்கையில்உள்ளஅனைத்து மாநகர சபைகளாலும் திண்மக் கழிவுகளை ஒழுங்கான முறையில் முகாமைத்துவம் செய்வதன் ஊடாக சுற்றுச்சூழலை மேம்படுத்தி எதிர்கால சந்ததியினரின் சிறந்த சுகாதார வாழ்வை ஏற்படுத்த முடியும். அதற்கு யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். வீடுகள், கடைகள், தேநீர்சாலைகள், உணவு விடுதிகள், ஆலயங்கள், பாடசாலைகள், அரச திணைக்களங்கள், தனியார்நிறுவனங்கள், மருத்துவ மனைகள், தொழிற்சாலைகள் மற்றும் பொது இடங்களில் சேரும் திண்மக் கழிவுகளை தரம் பிரித்து பிளாஸ்ரிக், பொலித்தின், காட்போட், கண்ணாடி, பழுதடைந்த இலத்திரனியல் சாதனங்கள் இவை அனைத்தையும் வேறாகவும், உக்கக்கூடிய கழிவுகளை வேறாக்கியும் யாழ். மாநகர சபையின் கழிவகற்றும் வாகனத்திடம் ஒப்படைக்க வேண்டும். - என்றுள்ளது. (ற-21,7)

# உருத்திரபுரத்தில் எலும்புக் கூடு மீட்பு



யாழ்ப்பாணம், ஓக்.28

கிளிநொச்சி உருத்திரபுரத்தில் பற்றைகள் நிறைந்த காட்டுப் பகுதியில் மனித எலும்பு கூடு ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

"உருத்திரபுரம் நீவில் பிரதேசத்தில் பற்றைக்காட்டுப் பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலம் காணப்படுகின்றது என்று ஒருவர் தகவல் வழங்கினார். அங்கு சென்ற பொலிசார் குறித்த எலும்புக் கூட்டை மீட்டனர். அந்தப் பகுதி பற்றைக் காடாவும், ஆள்கள் நடமாட்டம் அற்றதாகவும் உள்ளது. சடலத்தை அடையாளம் காண முடியவில்லை. சம்பவம் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன"- என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-21,6,34)

# கால்நடைகளை கட்டுப்படுத்த கோரிக்கை

கிளிநொச்சி பளை பிரதேசத்தில் பிரதான வீதிகளில் அதிகளவான கால் நடைகள் இரவு வேளையில் நடமாடுவதால் வீதி விபத்துக்கள் ஏற்படுவது அதிகரித்துள்ளது. இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

ஏ-9 வீதியினூடாக அதிகளவான வாகனங்கள் பயணம் செய்கின்றன. கட்டாக் காலிகளாகத் திரியும் கால் நடைகள் அதிகமாக இரவிலேயே வீதிகளில் நடமாடுகின்றன. இதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. மாடு வளர்ப்பாளர்களின் அவதானம் இன்மையே இதற்கான காரணம். விபத்துக்கள் மூலம் உயிர்ச் சேதங்கள் ஏற்படுகின்றன. வாழ்வாதார மாடுகளும் உயிரிழக்கின்றன. இதைத் தடுப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக துண்டறிக்கைகள் மூலம் அறிவுறுத்த உள்ளோம். உரியவர்கள் கவனமெடுக்கவேண்டும். அறிவுறுத்த லின் பின்னரும் மாடுகள் கட்டாக்காலி களாக வீதிகளில்இரவுநேரங்களில்நடமாடினால்அவை பிடிக்கப்படும்- என்று பளை பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார். (ற-6)

# ஓமந்தையில் அமைய வேண்டும் பொருளாதார வலயம்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. ஜனாதிபதிக்குக் கடிதம்

வவுனியா, ஒக்.28

பொருளாதார யத்தை ஓமந் தையிலேயே அமைப்பது என்று வவு னியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இரு தடவைகள் தீர்மானிக்கப் பட்டது. அந்தத் தீர்மானங்களை ஜனாதிபதி நடைமுறைப் படுத்தவேண்டும்.

இவ்வாறு தெரிவித்து வன்னி மாட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஜனாதிபதி, பிரதமர், வடக்கு முதலமைச்சர் ஆகியோருக்குக்கடிதம்அனுப்பியுள்ளார். நேற்றுமுன்தினம் புதன்கிழமை அவர் அனுப்பியுள்ளகடிதத்தில்தெரிவிக்கப்பட்டதாவது:

2016ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 24ஆம் திகதி நடைபெற்ற வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பொருளாதார மத்திய நிலையத்தை 2010ஆம் ஆண்டு மாவட்டஒருங்கிணைப்புக்குழுவில்தீர்மானிக்கப்பட்ட ஓமந்தையில் உள்ள 20 ஏக்கர் காணியில் அமைக்கவேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சார்ள்ஸ் நிர்மலநாதன், எஸ்.சிவமோகன் ஆகியோரும் அன்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளாவிட்டாலும் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா எழுத்து மூலமும் சம்மதத்தைத் தெரிவித்திருந்தனர். அவர்களுடன் வவுனியா மாவட்ட மாகாண சபை உறுப்பினர்களான சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், ஜி.ரி.லிங்கநாதன், தியாகராசா, மயூரன் ஆகியோரும், கூட்டத்தில் கலந்து கொள்ளாதபோதும் மாகாண சபை உறுப்பினர் இ. இந்திரராசா எழுத்து மூலமும் தங்களது சம்மதத்தைத் தெரிவித்திருந்தனர். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தானும் மதவு வைத்தகுளத்தில் ஒதுக்கப்பட்ட காணி போதியதாக இல்லாததை சுட்டிக்காட்டியதுடன், ஓமந்தையில் அமைவதை எதிர்க்கவில்லை.

2010ஆம் ஆண்டு 06ஆம் மாதம் 15 ஆம் திகதியிலும், 2016ஆம் ஆண்டு ஐப்பசிமாதம்24ஆம்திகதியிலும்வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களின் தீர்மானத்தின்படியும், வடமாகாண முதலமைச்சரின் வாக் கெடுப்பின்படியும், பெரும்பாலான விவசாயிகள், பொது அமைப்புக்கள், பொருளாதார நிபுணர்கள், பேராசியர்களின் விருப்பமும் ஓமந்தையாக இருப்பதால் மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களைக் கவனத்தில் கொண்டு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு பணிப்புரை வழங்கும்படி கோருகின்றேன். ஆட்சி மாற்றத்தின் பிற்பாடு எமது மக்களின் இந்த சிறிய கோரிக்கையைக்கூட கடந்த பல மாதங்களாக கொழும்பு அரசு நிறைவேற்றவில்லை எனக் கடுமையான அழுத்தங்களை எமக்குத் தந்துள்ள அதேவேளை, புதிய நல்லாட்சி அரசு மீதும் நம்பிக்கையிழந்து வருகின் றனர் என்பதையும் தாங்கள் கவ னத்தில் எடுத்துச் செயற்படும்படி கேட்டுக் கொள்கின்றேன் - என்றுள்ளது. (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பொலிஸாரின் நிதானம் கடற்படையினரிடம் இல்லாமல்போனமை வருத்தம்

மன்னாரில் கடற்படையினருக்கும் மீனவர்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல், நிதானமிழந்து செல்வது பட்டவர்த்தனமாகத் தெரிகிறது. தமக்கு எதிராகச் செயற்பட்டுவிட்டார்கள் என்பதனால் மீனவர்களைப் பழிவாங்கும் வகையில் கடற்படையினர் நடந்து கொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள் என்பது அரச இயந்திரத்தின் மோசமான அத்துமீறலாகப் பதிவாகியிருக்கிறது.

இதேபோன்றதொரு பெரும் முரண்பாடு பொலிஸாருக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இடையே யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டபோது - மக்கள் கொந்தளித்தபோது - பொலிஸார் காட்டிய நிதானத்தை, பக்குவத்தைக் கடற்படையினர் வெளிக்காட்டத் தவறியிருப்பது கவலைக்குரியது.

இன ரீதியில் சிங்களவர்களை மட்டுமே கொண்டிருக்கக்கூடிய இலங்கைப் படைகளின் தமிழ் மக்களுடனான அணுகுமுறைகள் இனக் குரோத உணர்வின் அடிப்படையில் அமையாமல் இருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. அதற்கான போதிய அறிவும் பயிற்சியும் படையினருக்கு அதிகளவில் வழங்கப்படவேண்டியிருக்கிறது என்பதையே மன்னார்ச் சம்பவம் சுட்டிக்காட்டி நிற்கிறது.

கிராமத்திற்குள் இரவு நேரத்தில் நுழைந்த இனந்தெரியாதவர்களைப் பிடித்த பொதுமக்கள் பொலிஸாரிடம் ஒப்படைத்ததைத் தொடர்ந்தே கடற்படையினருடனான முரண்பாடு ஆரம்பமாகியுள்ளது. கிராமத்தில் இரவு நேரத்தில் ஏற்கனவே பல திருட்டுக்கள் நடந்ததால் மிரண்டிருந்த கிராமவாசிகள், உள்ளே நுழைந்த அடையாளம் தெரியாதவர்கள் மீது சந்தேகம் கொண்டமை நியாயத்திற்கு அப்பாற்பட்டதன்று. அவர்கள் கடற்படையினராக இருக்கலாம் என்று ஊகிப்பதற்கும் கிராமத்தவர்களுக்கு முகாந்திரம் ஏதுமில்லை.

அப்படியிருக்க, கோபத்தில் நடந்துகொள்வது போன்று - பழிவாங்கும் விதத்தில் - மீனவர்களின் படகுகளைத் திடீரெனச் சோதனையிடுவதும், அவர்களைக் கைது செய்வதும், கடற்படை முகாமுக்குக் கொண்டு சென்று அலைக்கழிப்பதும் ஏற்புடையவை அல்ல. இவையும் அதிகார வரன்முறை மீறல்களே!

கிராமத்தவர்களில் எவராவது சட்டத்தைத் தமது கைகளில் எடுத்துக்கொண்டு பாரதூரமாகச் செயற்பட்டிருந்தார்கள் என்றால், அவர்களுக்கு எதிராகச் சிவில் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க கடற்படைக்குச் சக்தி இருக்கிறது. அதனை அவர்கள் செய்துமிருக்கிறார்கள். கடற்படையினரின் முறைப்பாட்டின் அடிப்படையில் 6 மீனவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் நேற்று வரையும் வைக்கப்பட்டிருந்தனர்.

சிவில் சட்டம் தனது கடமையைச் செய்து கொண்டிருக்கும்போதே, மக்களை தமது அதிகாரப் பலத்தின் மூலம் அடக்கும் வகையில் கடற்படையினர் நடந்து கொண்டிருப்பது கண்டிக்கத்தக்கது. சட்டத்தில் இடமிருக்கிறது என்று கூறிக்கொண்டு திடீரென மக்களை மிரட்டவும், அடிமைப்படுத்தவும், அதிகாரத்தைப் பயன்படுத்தவும் எவர் முனைந்தாலும் அது தவறே! மன்னார் சம்பவத்தில் நடந்திருப்பது அதுவே!

எனவே, இந்த விடயத்தில் அரசு உடனடியாகத் தலையிட்டு, பழிவாங்கும் விதத்தில் நடந்துகொண்ட கடற்படை அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும். யாழ். பல்கலைக்கழக மாணவர்களைச் சுட்டுக்கொன்று தமது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்திய பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுத்ததைப் போன்றே கடற்படையின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

# இலவுகாத்த கிளியின் நிலையில் இலங்கைத் தமிழர்கள்

சேரலாதன்

**இலங்கையின் முதலாவது பிரதமரான டி.எஸ். சேனநாயக்க தமிழர்களின் பூர்வீகமான பூமியாகிய கிழக்கு மாகாணத்தில் பெருமெடுப்பிலான சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தினார்.**





இலங்கையில் பல ஆண்டுகளாக நீடித்து வருகின்ற இனப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்குவதில் நல்லாட்சி அரசும் மெத்தனப் போக்குடன் செயற்படுவதாகப் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நாடு 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம்திகதி ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டது. ஆனால் சிறுபான்மை இனத்தவர்கள் தமது சுதந்திரத்தை இழந்த நாள் அன்றேயாகும். அந்நியர்கள் நாட்டின் வளங்களைச் சுரண்டிப் பணம் திரட்டுவதிலேயே குறியாக இருந்தனரே தவிர, இனரீதியான வேறுபாடுகளைக் காட்டவில்லை. அதேவேளை படித்தவர்களுக்கும் திறமைசாலிகளுக்கும் நிர்வாகத்தில் முக்கிய பொறுப்புக் களை வழங்கினர். இதனால் இயற்கையிலேயே திறமைசாலிகளாக விளங்கிய தமிழர்கள் ஏனைய இனத்த வரைப் பின்தள்ளிவிட்டு முக்கிய நிர்வாகப்பொறுப்புக்களை வகிக்க முடிந்தது.

ஆனால் நாடு சுதந்திரம் அடைந்ததன் பின்னர் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. பெரும்பான்மையின மக்களுக்கு சகல விடயங்களிலும் முன்னுரிமை வழங்கப்பட்டது. மொழியிலும் பாகுபாடு காட்டப்பட்டது. ஏனையவர்கள் சிங்களத்தைக் கற்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கையின் முதலாவது பிரதமரான டி.எஸ். சேனநாயக்க தமிழர்களின் பூர்வீகமான பூமியாகிய கிழக்கு மாகாணத்தில் பெருமெடுப்பிலான சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தினார். கிழக்கு மாகாணத்தில்பெரும்பான்மையினத்தவராக வாழ்ந்த தமிழர்கள் சிறுபான்மையினர் என்ற இழிநிலைக்குத் தள்ளப்படுவதற்கு இதுவே காரணமாக அமைந்து விட்டது.

சுதந்திரத்துக்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரங்கள், மூன்று தசாப்த காலத்துக்கும் மேலாக இடம்பெற்ற போர் ஆகியவை இன அழிப்பையே பிரதானமான நோக்கமாகக் கொண்டிருந்தன. இறுதிப்போரின்போது தமிழர்கள் திட்டமிடப்பட்ட வகையில் அழிக்கப்பட்டனர். அவர்களது சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன.

### மகிந்தவின் தப்புக் கணக்கு அவருக்கே பாதகமாக அமைந்தது

இதற்கெல்லாம் காரணமானவரென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மீது குற்றச்சாட்டுக்கள் கிளம்பின. ஆனால் பெரும்பான்மையின மக்கள் மத்தியில் ஒரு போரை வென்று காட்டிய வெற்றி வீரனாகவே அவர் கொண்டாடப்பட்டு வந்தார். இதன் விளைவாகவே தமது இரண்டாவது பதவிக்காலம் முடிவதற்கு முன்பாக அவர் மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார். ஆனால் எவருமே எதிர்பாராத வகையில் அந்தத் தேர்தலில் மோசமான தோல்வியைத் தழுவிக் கொண்டார். எளிமையானவர், நேர்மையானவர் என்று பேசப்பட்ட மைத்திரிபால சிறிசேன தேர்தலில் வெற்றியைப் பெற்றுக் கொண்டார். இவரது வெற்றிக்குதமிழ் மற்றும் முஸ்லிம் இனத்தவர்களின் வாக்குகளே உதவின. இவை கிடைக்காதுவிட்டால் மகிந்தவே மீண்டும் வெற்றி பெற்றிருப்பார் என்பதில் சந்தேகமே இல்லை.

### ஜனாதிபதி மைத்திரிபால குறித்த தமிழ் மக்களது எதிர்பார்ப்பு ஏமாற்றம் அளிக்கிறது


புதிய ஜனாதிபதி தொடர்பான எதிர்பார்ப்பு தமிழர்கள் மத்தியில் அதிகளவு காணப்பட்டது. போரினால் இடம் பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்வு, காணாமல் போனவர்கள் விவகாரம், பல ஆண்டுகளாக சிறைகளிலும், தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பரிதாப நிலை, தமிழர் பகுதிகளில் இடம் பெறுகின்ற சிங்களக் குடியேற்றங்கள், தமிழர்களின் பூர்வீக இடங்களில் திடீர், திடீரென முளைத்துக் கொண்டிருக்கின்ற புத்த விகாரைகள், இனவாதிகளால் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற இன விரோதச் செயற்பாடுகள், தென்பகுதி மீனவர்களின் அடாவடித்தனம் இவற்றுக்கெல்லாம் மைத்திரி தலைமையிலான அரசு உடனடித் தீர்வை வழங்கும் என்பதே பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்பாகவும் காணப்பட்டது. இதைவிட இறுதிப் போரின்போது போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில் சம்பந்தப்பட்டவர்கள் விடயத்தில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் அரசு செயற்படும் என்ற எதிர்பார்ப்பும் காணப்பட்டது. ஆனால் இது வரை மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களில் எதுவுமே தீர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை. முன்னைய ஆட்சிக் காலத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மற்றும் மோசடிக் குற்றச்சாட்டுக்களின் மீதும் உரிய நடவடிக்கைகள் துரிதமாக இடம்பெறுவதாகத் தெரியவில்லை. மாறாக அண்மையில் ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்கள், அவர் மீதான நம்பிக்கையைச் சிதைத்து விட்டது மட்டுமல்லாது, மகிந்த அணியினருக்கு வாய்ப்பாகவும் அமைந்து விட்டது. தற்போதைய ஜனாதிபதியை மகிந்தவுடன் ஒப்பிட்டுப் பேசுமளவுக்கு நிலைமை மோசமாகி விட்டது.


இந்த நிலையில் தமிழர்கள், தற்போதைய நல்லாட்சி அரசு தமது பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தருமென எதிர்பார்ப்பது இலவு காத்த கிளிக்கு ஒப்பான தெனக் கூறுவதில் தவறொன்றுமில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களமூலம் மவ்பிம
தமிழில் வீ.எஸ்.ரீ





# அரசியல் சதுரங்க விளையாட்டில் காய் நகர்த்தல்களுக்குக் குறைவில்லை

2001 ஆம் ஆண்டில் நாடாளுமன்ற அதிகாரம் சுதந்திரக் கட்சியிடமிருந்து ஐ.தே.கட்சியின் கைகளுக்கு மாறியது. இதனால் பெரிதும் பாதிப்புக்கு உள்ளானவர் லக்ஸ்மன் கதிர்காமரே. எதிரணி அரசியலுக்குப் பழக்கப்படாத அவருக்கு, விடுதலைப் புலிகளாலும், அச்சுறுத்தல் இருந்து வந்தது. சிங்களம் பேசத் தெரிந்திராத அவர், 2001 தேர்தலில் சுதந்திரக் கட்சியின் தோல்விக்குப் பின்னர் எதிர்க்கட்சி உறுப்பினராகச் செயற்பட நேர்ந்தது. ரணிலைச் சந்தித்த அவர், ரணிலுக்கு ஜனாதிபதி சந்திரிகாவால் இடை யூறேதும் ஏற்படுத்தப்படாத விதத்தில் தாம் சந்திரிகாவைச் சமாளிப்பதாக வாக்குறுதி வழங்கினார். அதற்குப் பதிலாக தமக்குப் போக்குவரத்துப் பாதுகாப்பு, மற்றும் உத்தியோகபூர்வ இல்லத்தைத் தொடர்ந்து வழங்குமாறும் ரணிலைக் கேட்டுக் கொண்டார். ரணிலும் கதிர் காமரது கோரிக்கையைஏற்றுக் கொண்டார்.

**கதிர்காமரது திட்டமிட்ட திருகுதாளங்கள்**

சில மாதங்கள் கழிந்த நிலையில், ரணிலின் ஆட்சிக்கு எதிரான ஊடகவியலாளர்களைத் தமது உத்தியோகபூர்வ இல்லத்துக்கு வரவழைத்த கதிர்காமர், ரணிலின் போர்நிறுத்த உடன்படிக்கை காரணமாக திருகோணமலையில் விடுதலைப்புலிகள் தமது முகாம்களைப் பலப்படுத்தி வருவது குறித்து, நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்துமாறு அவர்களைக் கேட்டுக்கொண்டார். ரணிலின் அரசுக்கும் இந்திய அரசுக்குமிடையே முரண்படு நிலையை உருவாக்கிவைக்கும் நோக்கில், அவ்வேளையில் இலங்கையில் இருந்த இந்தியத் தூதுவர் நிருபன் சென்னைக்கூட கதிர்காமர் அழைத்துப் பேசியிருந்தார். ரணிலின் அரசு அமெரிக்காவுக்குச் சார்பாக நடப்பதால் இந்தியாவுக்கு ஏற்படக்கூடிய பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து இந்திய அரசுக்கு கதிர்காமர் கோள்மூட்டினார். இத்தனைக்கும் கதிர் காமரது இத்தகைய செயற்பாடுகள் குறித்து ரணில் சந்தேகம் கொள்ளவில்லை.

அந்த வேளையில் இந்தியாவில் ஆட்சி அதிகாரத்தில் இருந்த பா.ஜ.க.கட்சியின் தலைவரும், பிரதமருமான வாஜ்பாயுடன் ரணிலுக்கு கடும் நட்பு நிலவி வந்தது. அவர் களிடையேயான நட்பை இலேசில் நாசப்படுத்த இயலா தென்பதைக் கதிர்காமர் நன்கறிந்திருந்தார். அதேவேளை இந்தியத்தூதுவரும் ரணிலின் அரசு, அமெரிக்க சார்பாகச் செயற்படுவது குறித்து ரணில் மீது ஆத்திரம் கொண்டிருந்தார். இந்தியத் தூதுவரின் அதிருப்தியை கதிர்காமர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். அதுமட்டுமன்றி முப்படைத் தளபதிகளையும் சந்தித்து ரணிலின் அரசுக்கு எதிராக அவர்களைத் தூண்டிவிடவும் கதிர்காமர் தவறவில்லை. ரணிலின் அரசைக் கவிழ்க்க, இந்தியாவுக்கும் ஜே.வி.பி. தரப்புக் கும் இடையே தொடர்புகளை ஏற்படுத்தி வைத்த உவரும் கதிர் காமரே.

இந்தவிதம் பலதரப்புக்களையும் ஒன்றிணைத்து ரணிலின் அரசைக் கவிழ்த்துவிட கதிர்காமர் சதி செய்தமை புதிய அரசில் தமக்குப் பிரதமர் பதவியை எதிர்பார்த்தேயாகும். சந்திரிகா ரணிலின் அரசின் மூன்று அமைச்சுப் பொறுப்புக்களைத் தாம் பறித் தெடுத்துக் கொள்வதற்கு முன்னர், மங்கள சமரவீர முன்னெடுத்த 'பொறுத்தது போதும்' என்ற ஆர்ப்பாட்டத்திலும், கதிர்காமரது பங்கு கணிசமானது. ரணிலின் அரசைக் கவிழ்த்துவிட்டு மங்கள மற்றும் ஜே.வி.பி தரப்பினர் கதிர்காமரைப் பிரதமராக்கி புதிய அரசொன்றை அமைக்க முயல்வதாக அந்த வேளையில் மகிந்த ராஜபக்ச ரணிலை எச்சரித்திருந்தார். ரணில் தலைமையிலான அரசின் மூன்று அமைச்சுக்களைக் கைப்பற்ற சந்திரி காவுக்கு ஆலோசனை வழங்கியவர் கதிர்காமரே. பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்க சந்திரிக்கா வுக்கு ஆலோசனை வழங்கியவரும் கதிர்காமர்தான். அந்தவேளையில் கதிர்காமர் எப்படியாவது பிரதமர் பதவியைத் தாமே அடையவேண்டுமென்ற முனைப்பில் இருந்தார்.

2004ஆம் ஆண்டு பெப்ரவரியில் ஜனாதிபதி சந்திரிகா நாடாளுமன்றத்தைக் கலைத்தார். கதிர்காமர் இடைக் கால அமைச்சரவையில் ஊடகத்துறை அமைச்சராகப் பதவிஏற்றார். கதிர்காமரது இந்த அரசியல் சித்து விளையாட்டுக்கள் குறித்து அந்த வேளையில் தான் ரணிலுக்குப் புரிந்திருக்கும்.

**சிங்களத் தலைமைகளால் ஏமாற்றப்பட்ட கதிர்காமர்**

கதிர்காமருக்குப் பின்னர் ஒருபோதிலும் பிரதமர் பதவி கிட்டவில்லை. கதிர்காமருக்குப் பிரதமர் பதவியை வழங்காது மகிந்தவுக்கு அந்தப் பதவியை வழங்க சந்திரிகாவை அந்த வேளையில் உடன்பட வைத்தவர் அந்த வேளையில் சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறசேனவே.

இந்த அரசியல் சுத்துமாத்துக்களெல்லாம் ரணிலுக்கு இப்போது நினைவிருக்குமோ தெரியாது. நினைவிருந்தால் அதை அவர் மைத்திரிபாலவுக்கும் தெரிவித்தாக வேண்டும். ஏனெனில் மைத்திரிபாலவின் சகோதரரது மகனின் திருமண நிகழ்வில் மைத்திரிபாலவின் சகோதரர் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவை மைத்திரியும் ரணிலும் அமர்ந்திருந்த மேசைக்கு அழைத்து வரும் புகைப்படத்தைக் கண்ணுற்ற நல்லாட்சி அரசுக்கு வாக்களித்தவர்களது நெஞ்சிலிருந்து பெருமூச்சொன்று உருவாகியிருந்திருக்கும் என்பதனாலாகும். அவன்காட் விவகாரத்தில் கோத்தபாய விசாரணை களுக்கு முகம் கொடுக்கும் இன்றைய நிலையில் சீனா வின் பாதுகாப்பு மாநாடொன்றில் கலந்து கொள்ளச் செல்ல நீதிமன்றம் அவருக்கு அனுமதியளித்திருக்கும் நிலையில், கோத்தபாயவுடன் சுமுக உறவைஏற்படுத்தி அதன்மூலம் எதையோ நிறைவேற்றிக்கொள்ள மைத்திரிபால ரணில் தரப்பு முயல்கிறதா என்ற சந்தேகம் நல்லாட்சி அரசின் ஆதரவாளர்கள் மனதில் ஏற்படுவதில் தவறேதும் இல்லையே!

## வீடில்லா ஏழைகளுக்கு இந்தத் தடவையும் வீட்டு வசதி வாய்ப்பு மறுக்கப்படுவதேன்?

மேற்படி விடயமானது மாதகலில் உண்மையாகியுள்ளது. மாதகலில் குடிசை வீட்டிலும், இரவல் வீட்டிலும் வசிக்கும் இரண்டு குடும்பங்களுக்கு (மிக ஏழைகள்) இந்திய வீட்டுத்திட் த்திலும் வீட்டு வசதி மறுக் கப்பட்டுள்ளது. முன்னர் பல கட்டங்களில் வீட்டுத்திட்டம் பணக்காரர்களுக்கும், வசதியானோருக்கும், வீடுகள்உள்ளோருக்கும் வழங்கப்பட்டு, சொகுசு வீடுகளும், ஆள்களற்ற வீடுகளும் என ஏழைகளின் வாய்ப்புகள் பறிக்கப்பட்டுக் கட்டப்பட்டன என்பது வடமாகாணம் முழுவதும் தெரிந்த உண்மையே. எனினும் தற்போது எமது பிரதேசத்தில் வீடுகளற்ற மக்களுக்கு, வறியோருக்கு வீடுகளை வழங்க முன்வந்துள்ளமை வரவேற்கத்தக்கது. சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு நன்றி. எனினும் இத்தடவைகூட வீடு வழங்கவேண்டிய வறியகுடும்பம் இரண்டுக்கு வாய்ப்பு வழங்கப்படவே இல்லை. உண்மையில் வீடு பெறத் தகுதி உடையோர் இவர்கள் தான் ஐயா. எனினும் (ஜே/150) முன்னைய கிராம அலுவலர் பிரிவில் சிலர் மாதகலில் வசதி படைத்தோருக்கே முன்னுரிமை அளித்தனர். அந்தத் தவறை மீண்டும் இப்பொழுதும் விடாதீர்கள்.

மாதகல் வடக்கிலுள்ள குடும்பம் இரண்டு (தாய், மகன் என்போரின் குடும்பம்) நான்கு உறுப்பினர்களுடன் உள்ளோர், குடிசை வாசிகள். வீடு கேட்டதற்கு, நீங்கள் குடும்பத்தில்இருவர் மாத்திரமே உள்ளீர்கள். உங்களுக்கு இப்போது இல்லை; பிறகு பார்ப்போம்; இதுதான் சம்பந்தப்பட்ட தரப்பினர் கூறிய விளக்கம். ஆக, ஏழைகள் இருவர் என்பதால் வீடு வழங்க முடியாது. அவற்றை வீடுகளுள்ள பணக்காரருக்கு வழங்கலாம். இது தானா உங்கள் நிர்வாகம்? முன்னையோர் விட்ட தவறுகளை நீங்களும் விடாதீர்கள் கெஞ்சிக் கேட்கின்றோம். மேற்படி வீட்டுத்திட்டத்தில் வீடற்ற மாதகல் ஏழைக்குடும்பங்களையும் உடனே இனங்கண்டு அவர்களையும் திட்டத்தில் உள்வாங்குமாறு தயவு கூர்ந்து கேட்டுக்கொள்கின்றோம். இது மாதகல் கிராம அலுவலர்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆகியோருக்கான அன்பு வேண்டுகோள்.

ஏழை பங்காளன். மாதகல்.

## மோட்டார் சைக்கிளில் வலம் வரும் வழிப்பறிக் கோஷ்டிகள்

சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பண்பாளர்கள் நிலையைப் பின் நோக்கிப் பார்ப்போம். அன்று, இங்கே வாழ்ந்தவர்கள் ஏறக்குறைய அனைவருமே ஒழுக்கம் நிறைந்தவர்களாக இருந்தனர். பிறர் பொருளை விரும்பாதவர்கள், கடின உழைப்பால் வாழ்ந்தவர்கள். கொலை, களவு, வாள்வெட்டு, பாலியல் பலாத்காரம், போதைப் பொருள் பாவனை போன்றவைகளில் ஈடுபடாதவர்கள். பாதகச் செயல்களைச் செய்ய அஞ்சியவர்கள். ஏன் விடுதலைப்புலிகள் ஆட்சிக் காலத்திலும் இவை எவையும் எம் மத்தியில் இல்லாது இருந்தனவே? சேர்.பொன் இராமநாதன் வாழ்ந்த யாழ்ப்பாணம் எங்கே? இன்றைய யாழ்ப்பாணம் எங்கே?

இன்று அரச பொலிஸ்படை இருந்தும் எமது பெண்கள் காமுகர்களால் குதறப்பட்டனர், படுகொலைகள், விபத்து மரணம், களவு, வீடுஉடைப்பு என்பவையெல்லாம் தலைவிரித்துத் தாண்டவமாடுகின்றதே!

மிக அண்மையில் நடந்த ஒரு விடயம் இது. அவர் புலம் பெயர்ந்து வெளிநாடொன்றில் வாழ்ந்தவர். ஆசையோடு யாழ்ப்பாணம் வந்தார். வந்தவர் வீதியில் சென்றபோது அவருக்குத் நேர்ந்த கதி பரிதாபத்துக்கு உரியது. மோட்டார் சைக்கிளில் வலம் வந்த ஒருவர் இவரை குறுக்கறுத்து மறித்த இவரிடமிருந்த பணத்தைப் பறித்துச் சென்றுள்ளார். அச்சம் காரணமாக அவர் தாம் வாழ்ந்த நாட்டுக்குத் திரும்பியமை எம்மை வெட்கித் தலை குனிய வைத்தது. ஐயகோ, இன்று யாழ்ப்பாணம் எங்கே செல்கிறது?

க.கருணாகரன்.
யாழ்ப்பாணம்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மீண்டும் அதிர்ந்தது இத்தாலி உரோமிலும் தாக்கம் உணர்வு

ரோம், ஒக். 28
இத்தாலியில் நேற்றுமுன்தினம் குறுகிய நேர இடைவெளியில் இரு நிலநடுக்கங்கள் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தகவல் வெளியிட்டது.
கடந்த ஓகஸ்ட் மாதம் நிலநடுக்கம் ஏற்பட்ட பொரூகியா, பெசராட்டா பகுதிகளிலேயே மீண்டும் நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. முதலாவது அதிர்வு ரிச்டர் அளவு கோலில் 5.5 எனவும், இரண்டாவது அதிர்வு 6.1 எனவும் பதிவானது. இரண்டாவது அதிர்வில் வீடுகள் அதிகளவில் சேதமடைந்ததாகச் சொல்லப்படுகிறது. சேத விவரங்கள் தொடர்பான அறிக்கை இன்னமும் வெளியிடப்படவில்லை. முன்னதாக ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற அதிர்வில் 300 பேர் உயிரிழந்தனர். (ம-எ)

## தினமும் எட்டு அகதிகள் கடல் பயணத்தில் சாவு



டமஸ்கஸ், ஒக்.28
மத்தியதரைக்கடலைக் கடக்கும் அகதிகளில் தினமும் 8 பேர் உயிரிழப்பதாக பன்னாட்டு ஊடகமான சி.என்.என். நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.
சிரியா, ஈராக், ஆப்கானிஸ்தான் பகுதிகளில் நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போர் காரணமாகவும், நைஜீரியா, எத்தியோப்பியாவில் நிலவும் வறட்சி காரணமாகவும் அங்கிருக்கும் பல மக்கள் ஐரோப்பிய நாடுகளை நோக்கி மத்திய தரைக் கடலின் வழியாக அகதிகளாகப் பயணிக்கின்றனர்.
கடந்த 73 வாரங்கள் (கிட்டத்தட்ட 500 நாள்கள்) கருத்தில் கொள்ளப்பட்டு இந்த ஆய்வு நடத்தப்பட்டது. 3 ஆயிரத்து 800 பேர் உயிரிழந்துள்ளனர். அதாவது நாள் ஒன்றுக்கு 8 பேர் வீதம் உயிரிழக்கின்றனர்.
குறித்த நாடுகளில் இருந்து ஐரோப்பிய நாடுகளை நோக்கி எதிர் வரும் காலங்களில் இன்னும் அதிகமான அகதிகள் பயணிக் கலாம் எனக் கருதப்படும் நிலையில் உயிரிழப்புக்களும் அதிகரிக்கும் என அச்சம் வெளியிடப்பட்டது. (ம-எ)

# தனது சொந்தக் க ட்ரம்புக்கு வலுக்கி

## ஹிலாரிக்கு பெருகும் பேராதர

அமெரிக்கத் தேர்தல் நெருங்கும் நிலையில் தனது சொந்தக் கட்சியிலேயே செல்வாக்கை இழந்துள்ளார் ட்ரம்ப். இதனால் ஹிலாரிக்கான வாய்ப்பு மேலும் அதிகரித்துள்ளதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
உலகமே எதிர்பார்த்துக் காத்திருக்கும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் அடுத்த மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அந்த நாட்டின் இருபெரும் கட்சிகளில் குடியரசுக் கட்சியின் வேட்பாளராக டொனால்ட் ட்ரம்பும், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக ஹிலாரி கிளிங்டனும் உள்ளனர். ஆரம்பத்தில் ஹிலாரிக்கு நிகரான ஆதிக்கத்தை ட்ரம்ப் செலுத்தினாலும் அவர் படிப்படியாக தனது செல்வாக்கை இழந்து தற்போது சொந்தக் கட்சிக்குள்ளேயே எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளார். இதனால் அவர் தோல்வியின் விளிம்பில் உள்ளார் என்று அமெரிக்க ஊடகங்கள் தெரிவிக்கின்றன.
அமெரிக்காவின் ஜனாதிபதியாக ரொனால்ட் ரீகன் பதவி வகித்த காலத்தில் இருந்து பல்வேறு பொறுப்புகளை வகித்து வந்த குடியரசுக் கட்சித் தலைவரான காலின் பவெல், இந்தத் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளரான ஹிலாரி கிளிங்டனுக்கு ஆதரவாக வாக்களிக்கப் போவதாக அறிவித்துள்ளார். அமெரிக்காவின் ஜனாதிபதியாக ட்ரம்ப் தகுதியற்றவர். ட்ரம்பின் அயலுறவுக் கொள்கைகள் அர்த்தமற்றவை. அரசியல் முதிர்ச்சியற்றவையாக அவரது சிந்த னைகளும், கருத் அமைந்துள்ளன.



## சீனாவில் ஹலோ கிட்டி உணவகம்



பீஜிங், ஒக். 28
சீனாவின் ஷங்காய் நகரில் ஹலோ கிட்டி கார்ட்டூன் கதாபாத்திரத்தின் உணவு விடுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
பாத்திரங்கள், கதிரை, இருக்கைகள் உட்பட உணவுகளும் ஹலோ கிட்டி வடிவத்தில் பரிமாறப்படுகிறன. முன்னதாக கடந்த வருடத்தில் திறக்கப்பட்ட ஹலோ கிட்டி உணவு விடுதிகள் சில மக்களின் வரவேற்பைப் பெற்றதை அடுத்து இந்த விடுதி ஷங்காய் நகரில் திறக்கப்பட்டுள்ளது.
ஹலோ கிட்டி கார்டூன் கதாபாத்திரங்கள் 1974ஆம் ஆண்டு வெளியாகி பெரும் வரவேற்பைப் பெற்றன. குறித்த கதாபாத்திரத்தின் பெயரில் சீனாவில் பூங்காக்கள் பலவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-எ)



## தொழில் தொடங்க ஏற்ற நாடாக நியூசிலாந்து

2017ஆம் ஆண்டு தொழில் தொடங்க ஏற்ற நாடுகள் பட்டியலில் நியூசிலாந்து முதலிடத்தில் உள்ளதாக உலக வங்கி தனது ஆய்வின் அடிப்படையில் அறிவித்தது.
உலக வங்கியின் குறித்த ஆய்வில் கடந்த பத்து வருடங்களாக சிங்கப்பூர் முதலிடத்தில் இருந்தது. தற்போது அதன் தொடர் ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டுவந்து நியூசிலாந்து முதலிடம் பிடித்தது. தொழில் தொடங்க நினைப்பவர்களுக்கு சட்டச் சிக்கல்கள் குறைவு. குறுகிய காலத்தில் தொழில் தொடங்கலாம் போன்ற காரணங்களால் நியூசிலாந்துக்கு முதலிடம் கொடுத்ததாக உலக வங்கி தெரிவித்தது. இரண்டு முதல் ஐந்து வரையிலான இடங்களில் முறையே சிங்கப்பூர், டென்மார்க், ஹொங்கொங், தென் கொரியா ஆகிய நாடுகள் உள்ளன. (ம-எ)



## 100 மடங்கு அழிகின்றன

லண்டன், ஒக். 28
1970 ஆம் ஆண்டு தொடக்கம் 20 வரையிலான 40 வருடங்கள கருத்தில் கொண்டு மேற்கொள்ளப் ஆய்வில் முன்னைய காலத்தை வ நூறு மடங்கு விரைவாக வன வில குகள் அழிவடைந்து வருகின்றன உலக வனத்துறை மேற்கொண் ஆய்வொன்றில் அறியப்பட்டது.
அதிகரித்து வரும் சனத்தொ வெப்பமயமாதல். பொருளாதார தேவைகளுக்காகவும், இடப் றாக்குறையை நிவர்த்தி செய்ய காடுகள் அழிக்கப்படுதல், வேட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கட்சியிலேயே ...றது எதிர்ப்பு

## ...ரவு




...ந்துக்களும், பேச்சுக்களும்
...ன. சில கருத்துக்கள் முட்டாள்

தனமானவையாகப் படுகின்றன. அமெரிக்காவின் உறுதித் தன்மையை கட்டியெழுப்ப ஹிலாரியே பொருத்தமானவர். அவரிடம் ஏராளமான அனுபவங்களும் உள்ளன என பவெல் தெரிவித்தார். பவெலின் கருத்து ட்ரம்புக்கு விழுந்த பலத்த அடியாக அமைந்துள்ளது.

பெண்கள் தொடர்பாக ட்ரம்ப் விரும்பத் தகாத கருத்துக்களைப் பகிர்ந்திருந்தார்.

செல்வந்தராக இருந்தால் எவ்வாறான பெண்களையும் வலையில் வீழ்த்திவிடலாம் என அவர் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் தெரிவித்தமை ஜனாதிபதித் தேர்தலில் ஒரு துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தப்படுகிறது. பெண்களின் ஒட்டுமொத்த எதிர்ப்பையும் அவர் சம்பாதித்துள்ளார். குடியரசுக் கட்சியின் பெண் அதிகாரியொருவர் ட்ரம்பின் கருத்துக்குக் கடும் கண்டனத்தை வெளியிட்டதுடன் ஹிலாரிக்கு ஆதரவாக வாக்களிக்கப்போவதாக அறிவித்துள்ளார்.

இவை அனைத்தும் ஒன்றுசேர்ந்து ட்ரம்பின் தோல்வியை கிட்டத்தட்ட உறுதிசெய்துள்ளன. (ம-எ)



அரிய மரபணு நிலை காரணமாக ஒன்று நீலம் மற்றொன்று சிவப்பு நிற கண்களுடன் இரட்டை பூனைகள் ரஷ்யாவின் செயின்ட் பீற்றர்ஸ்பேர்க்கிஸ் பிறந்துள்ளன. பன்னாட்டு ஊடகங்களின் கவனத்தைப் பெற்ற அவை சமூக வலைத்தளங்களிலும் விரைவாகப் பரவி வருகின்றன. (ம-எ)

# விலையுயர்ந்த சிப்ஸ்

ஸ்ரொக்கோம், ஒக். 28



பிரிவெறி என்ற நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட சிப்ஸ் உலகின் விலையுயர்ந்த சிப்ஸ் என்ற சிறப்பைப் பெற்றது.

ஒரு பெட்டியில் 5 சீவல்களே காணப்படும். ஒரு பெட்டி இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 6 ஆயிரம் பெறுமதி உடையதாகும். அதாவது ஒரு சீவல் ஆயிரத்து 200 ரூபா பெறு மதியுடையது. முதல் வெளியீடாக 100 பெட்டிகள் விற்பனைக்கு அறிமுகமாகியுள்ளன. இந்த சிப்சில் 5 வகையான விலையுயர்ந்த காளான்கள் மூலப் பொருள்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. உலகின் அதிக பெறுமதியுடைய ரெபிள் காளானும் அவற்றில் ஒன்று. இதனாலேயே சிப்ஸ் இவ்வாறு அதிக விலையுடையது எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-எ)

# பாகிஸ்தான் தூதரக அதிகாரி டெல்லியில் நேற்றுக் கைது

டெல்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் பணியாற்றும் முகமது அக்தர் என்ற அதிகாரி இந்திய இராணுவ இரகசியங்களை உளவு பார்த்தார் எனக் குற்றஞ் சாட்டப்பட்டு டெல்லி குற்றப்பிரிவு பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

முகமது அக்தரின் நடவடிக்கைகள் தொடர்பான இரகசியத் தகவல் கிடைத்தது. இதையடுத்து அவரது செயற்பாடுகளை கடந்த ஒரு வார காலமாக உளவுத்துறை கண்காணித்து வந்தது. இதில் அவர் மீதான சந்தேகம் உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து முகமது அக்தர் கைது செய்யப்பட்டார். அவரிடம் இந்திய இராணுவத் தகவல்கள் அடங்கிய ஆவணங்கள் இருந்தன என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)



# ...த விரைவாக ...ன விலங்குகள்

...2010 ...ளை ...ப்பட்ட ...விட ...லங் ...ன ...ண்ட ...கை, ...ரத் ...ப்பற் ...வும் ...ட்டை


யாடப்படுதல் என்பன வனவிலங்குகளின் இந்த அழிவுக்குக் காரணம். 2020ஆம் ஆண்டு, 1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் உலக அளவில் இருந்த வனவிலங்குகளில் மூன்றில் இரண்டு பங்கு அழிவடைந்திருக்கும். உதாரணமாக கடந்த இரு தசாப்த காலத்துக்கு முன்னர் ஆபிரிக்க யானைகளின் எண்ணிக்கை நான்கு லட்சமாக இருந்தது. தற்போது அந்த எண்ணிக்கை ஒரு லட்சமாக குறைவடைந்துள்ளது என அந்த அறிக்கை மேலும் குறிப்பிட்டது. (ம-எ)

# சிரியாவில் வான் தாக்குதல் ஏழு பள்ளிச் சிறார்கள் சாவு

சிரியாவின் பாடசாலையொன்றின் அருகில் மேற்கொள்ளப்பட்ட வான் தாக்குதலில் பாடசாலைச் சிறுவர்கள் ஏழு பேர் உள்ளடங்கலாக 22 பேர் சாவடைந்தனர்.

சிரிய ஜனாதிபதிக்கு எதிராக கிளர்ச்சிக் குழுவைக் குறிவைத்து இட்லிப் நகரின் ஹாஸ் கிராமத்தில் நேற்றைய தினம் தாக்குதல் நடத்தப்பட்டது. குறித்த தாக்குதலில் 7 பள்ளிச் சிறுவர்கள் உள்ளடங்கலாக 22 பேர் பரிதாபமாகச் சாவடைந்தனர். இந்தத் தாக்குதலை நடத்தியது ரஷ்யப் படைகளா? அல்லது சிரியப் படைகளா? என்பது உறுதியாகத் தெரியவில்லை. எவரும் பொறுப்புக் கூறவுமில்லை.

ஹாஸ் கிராமத்தில் தாக்குதல் தொடங்கியதும் பள்ளிக்கு விடுமுறை விடப்பட்டு மாணவர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். மாணவர்கள் புறப்பட்டுச் சென்றபோது ஒரு குண்டு பள்ளி முன்பாக வந்து விழுந்தது. இதனாலேயே இந்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டன என சிரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)



# அணுவாயுதத்தை... கைவிடுவதற்கு முயலாது வடகொரியா

## அமெரிக்கா தெரிவிப்...

அணுவாயுதங்களைக் கைவி... வதற்கு வடகொரியா ஒருபோது... முனைப்புக் காட்டாது என அ... ரிக்க உளவுத் துறைத் தலை... ஜேம்ஸ் தெரி வித்தார்.


அமெரிக்காவின் அயலுற... துறையின் கூட்டத்தில் கல... கொண்டு உரையாற்றுகை... லேயே அவர் இவ்வாறு தெ... வித்தார்.

வடகொரியர்களின் மனப்பே... கில் மாற்றம் ஏற்படாது எ... தைத் நான் தெளிவாக உண... துள்ளேன். உலகம் குறி... வடகொரியாவின் பார்வை... வேறாக உள்ளது. வடகொரி... கள் மனநிலைப் பிறழ்வு ஏற்... நிலையில் இருக்கின்றன... அணு ஆயுதங்களைக் கை... அவர்களை ஒப்புக்கொள்... வைப்பது கடினம் என ஜேம்... மேலும் தெரிவித்தார்.

(ம...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லக்கினத்தில் பிறந்தவர்களுக்கான பலன்கள்




## கன்னி லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு

இவர்கள் சற்று அடக்கமாகவே இருப்பார்கள். எதிலும் திறமைசாலியாக விளங்குவார்கள். எடுத்த காரியத்தை முடிக்கும் ஆற்றலும் விவேகமும் இருக்கும். நல்ல நடத்தையுள்ளவர்களாகவும் விளங்குவார்கள்.
கன்னி லக்கினத்திற்கு சந்திரனும், சனியும் சுபர்கள். செவ்வாய், குரு, பாவிகள். புதனும், சுக்கிரனும் யோகக்காரர்கள். புதனும், சுக்கிரனும் கூடி வலிமை பெற்றிருந்தால் நல்ல யோகத்தைக் கொடுப்பார்கள். சந்திரன், செவ்வாய், குரு இவர்கள் மாரக ஸ்தானத்தில் இருந்தால் மரணத்துக்குச் சமமான கண்டத்தைக் கொடுப்பார்கள். இவர்கள் திறமைசாலிகள் என்று பெயர் எடுத்து புகழுடன் விளங்குவார்கள்.
இவர்கள் மிக எளிதில் பணக்காரர் ஆகிவிடுவர். நிறைய நட்பு வட்டமும், நிறைய யோசனைகளும், சாதூரியமும் நிறைந்தவர்களாக விளங்குவார்கள். பத்திரிகையாளர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள் நிறையப் பேர் இந்த லக்கினத்தைச் சார்ந்தவர்கள். புதன், சுக்கிரன் நன்றாக இவர்கள் ஜாதகத்தில் அமைந்திருந்தால் வாழ்நாள் முழுக்க யோகம்தான்.

## துலாம் லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு

துலாம் என்றால் தராசு. தராசு போல் பேசுவார்கள். வியாபாரத்தில் சாமர்த்தியம் புத்திசாலித்தனம், செல்வம் சேர்ப்பதில் கவனம், எதிலும் முன்ஜாக்கிரதை இருக்கும். செல்வங்கள் சேரும். வாழ்க்கையில் சுகங்கள் அனுபவிக்கவும் வாய்ப்புண்டு. ஆயுள் நீண்டது என்றே கூறவேண்டும்.
துலா லக்கினத்திற்கு புதன், சுக்கிரன், சனி மூவரும் சுபர்கள். சூரியன், செவ்வாய், குரு பாவிகள். சந்திரனும், புதனும், யோகக்காரர்கள். சந்திரனும், புதனும் கூடியிருந்தால் நல்ல யோகத்தைக் கொடுப்பார்கள். சூரியன், குரு மாரகாதிபர்கள். அங்காரகன் தோசம் உடையவன்.
துலாம் லக்கினத்தார் பெண்கள் விடயத்தில் கொஞ்சம் பலவீனம் என்றே சொல்லலாம். பெண்களாக இருப்பின் ஆண்களால் பல பிரச்சினைகளைச் சந்திப்பர். காரணம் இவர்கள் அழகானவர்கள். அழகாகப் பேசுவார்கள். தங்களை அலங்கரித்துக்கொள்வதற்காகவே பெரும் செலவுகளில் ஈடுபடுவார்கள். சுற்றுலா, ஆடம்பரத்தில் அதிக விருப்பம் கொண்டவர்கள். இரண்டாம் அதிபதி செவ்வாய் என்பதால் கோபம் வந்தால் எதிரிகளைத் தாக்கவும் செய்வார்கள். அவர்களுடன் பழகுவதை முற்றிலும் தவிர்த்துவிடுவார்கள். இவர்கள் ஒருவரைப் பார்த்தவுடன் எளிதில் எடைபோடக்கூடியவர்கள் என்பதால்தான். நுணுக்கமான அறிவு நிறைந்தவர்கள். உணவைச் சுவையாக அன்பாகப் பரிமாற வேண்டும் என்பதில் முக்கியத்துவம் காட்டுவார்கள். ரசனை அதிகம் நிறைந்தவர்கள். இப்படி இருந்தால் நல்லாயிருக்கும் என அழகாக எடுத்து சொல்வார்கள்.
இவர்களில் பெரும்பாலானவர்கள் வியாபாரிகளாகவும், சட்ட நுணுக்கம் தெரிந்த வழக்கறிஞர்களாகவும், நடிகர்களாகவும் கலைத்துறையில் சாதிப்பவர்களாகவும் இருப்பார்கள்.

**நாளை**
ஐப்பசி-13
சனிக்கிழமை -29.10.2016
திதி: சதுர்த்தசி மு.இ. 09.07
நட்சத்திரம்: அத்தம் கா.07.31
ராகுகாலம்:
09.03-10.33 வரை
சுபநேரம்:
03.03-04.33 வரை
தீபாவளி

# நீங்கள் எல்லாம் மக்கள் பிரதிநிதிகளா?

பொருளாதார வலயம் வடக்கு மாகாணத்திற்கு ஏதோ பொருந்தாப் பொருத்தம் போல் இழுபட்டுக் கொண்டேயிருக்கின்றது. இந்த ஆண்டு ஆரம்பத்தில் பேசத் தொடங்கிய விடயம் இன்னமும் பேசு பொருளாகவே இருந்து கொண்டிருப்பது ஆகப் பிந்திய காலக் கொடுமை. அரசியல் தலைமைகளின் ஆளுமையற்ற செயற்பாட்டினால், வடக்கு மக்களுக்குப் பொருளாதார மத்திய நிலையம் கிடைக்காமல் போய் விடப்போகப் போகின்றது என்றே அஞ்ச வேண்டியிக்கிறது.
பொருளாதார வலயத்தை அமைப்பதற்கான இடத் தெரிவு ஆரம்பத்திலிருந்தே சர்ச்சைக்குரியதாக இருந்தது. ஓமந்தையில் அதை அமைப்பதற்கு வன்னி மாவட்ட பிரதிநிதிகள் இணங்கியிருந்தனர். நிதி ஒதுக்கீடு செய்யும் கிராமிய பொருளாதார அமைச்சு, அதை ஓமந்தையில் அமைப்பதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. வவுனியா நகரில் இருந்து 2 கிலோ மீற்றர் தூரத்தினுள் இடம் வழங்கப்படவேண்டும் என்ற நிபந்தனையை விதித்தது.
இதன் பின்னர் வன்னி மாவட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு இடையில் பிளவு ஏற்பட்டது. ஓமந்தையிலேயே அமைக்கப்பட வேண்டும் என்று ஒரு தரப்பினரும், கொழும்பு அரசின் நிபந்தனைக்கு அமைவாக நகரில் இருந்து 2 கிலோ மீற்றரினுள் உள்ள தாண்டிக் குளத்தில் அமைக்கப்படவேண்டும் என்று இன்னொரு தரப்பினரும் வலியுறுத்தினர்.
இழுபட்டுச் சென்ற இந்த விடயத்தில், மக்கள் பிரதிநிதிகளுக்கு இடையில் வாக்கெடுப்பும் நடத்தப்பட்டது. ஓமந்தையில் அமைக்கவேண்டும் என்று மக்கள் பிரதிநிதிகளில் அதிகமானோர் விரும்பினர் என்று வாக்கெடுப்பை நடத்திய வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அறிவித்தார்.
கொழும்பு அரசு தனது நிபந்தனையை மீறி ஓமந்தையில் அமைப்பதற்கு அனுமதி வழங்கவில்லை. நீண்ட இழுபறியின் பின்னர் வவுனியா மாவட்டத்தில் ஓரிடத்திலும், முல்லைத் தீவு மாவட்டத்திலுள்ள மாங்குளத்திலும் பொருளாதார வலயங்கள் அமைப்பதற்கு நிதி ஒதுக்குவதாக கொழும்பு அரசு தெரிவித்தது. இதன்போது வவுனியாவில் எங்கே அமைக்கப்படவேண்டும் என்பதை முதலமைச்சருடன் கலந்தாலோசித்து கொழும்பு அரசு தீர்மானித்தது.
வவுனியா மதகுவைத்த குளத்தில் பொருளாதார வலயம் அமைப்பதற்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சம்மதம் தெரிவித்திருந்தார். மற்றையதை மாங்குளத்தில் அமைப்பதற்கும் அவர் இணக்கம் தெரிவித்திருந்தார். ஜூலை மாதம் இந்தச் சம்மதம் முதலமைச்சரினால் வழங்கப்பட்டிருந்தது.
முதலமைச்சரின் இணக்கத்தின் அடிப்படையில் வவுனியா மதகுவைத்த குளத்திலும், மாங்குளத்திலும் பொருளாதார வலயங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகின. மதகுவைத்த குளத்தில் அடிக்கல் நடுவதற்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை நாள் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.




இதன் பின்னர் திடீரென விழித்துக் கொண்ட சில மக்கள் பிரதிநிதிகள், மீளவும் குழப்பத் தொடங்கினர். மதகுவைத்த குளத்தில் பொருளாதார வலயம் அமைக்க முடியாது, ஓமந்தையில் தான் அமைக்க வேண்டும், இதனை மாவட்ட ஒருங்கிணைப் புக் குழுக் கூட்டத்தில் முடிவு எடுப்போம் என்று, பிரச்சினையை ஆரம்பித்த இடத்துக்கே மீண்டும் கொண்டு வந்தனர்.
மக்கள் பிரதிநிதிகளின் தாளத்துக்கு ஏற்ப கொழும்பு அரசும் அடிக்கல் நடும் நிகழ்வை ஒத்தி வைத்தது. தமிழர் பிரதேசத்தில் பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்படாமல் விடுமாக இருந்தால் அதனை இலகுவாக சிங்களப் பிரதேசத்துக்கு நகர்த்த முடியும். அதனால், அடிக்கல் நடும் நிகழ்வை ஒத்தி வைக்கக் கேட்ட தமிழ் பிரதிநிதிகளின் கோரிக்கைக்கு உடனடியாகவே கொழும்பு செவி சாய்த்தது.
மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பொருளாதார வலயம் தொடர்பில் முரண்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இறுதியில் மீண்டும் குழப்பமான முடிவுக்கு வந்தனர். ஓமந்தையில் அமைப்பது என்றும் அதற்கான காணிகள் வழங் கப்படா விட்டால், தாண்டிக்குளத்தில் அமைப்பது என்றும் முடிவெடுத்தனர்.
ஒக்ரோபர் மாதம் முடிவடைந்து விட்டது. வருடம் முடிவதற்கு இன்னும் எஞ்சியிருப்பது இரண்டு மாதங்கள் மட்டும்தான். அந்த இரண்டு மாதத்தில் பெரும்பான்மையான நாள்கள் மழையுடன் மல்லுக்கட்டுவதில் போய்விடும். எஞ்சி இருக்கின்ற நாள்களில் 100 மில்லியனைச் செலவு செய்து பொருளாதார வலயம் அமைப்பது என்பது குதிரைக்குக் கொம்பு முளைப்பதைப் போன்றது.
ஆக மொத்தத்தில் தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய பொருளாதார மத்திய நிலையத்தை தங்கள் ஈகோ அரசியலால், கிடைக்கவிடாமல் செய்த வரலாற்றுப் பெருமை மாத்திரம், தமிழ் மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களைச் சென்றடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவர் அஜந்தா கேசவராஜ்

# குணப்படுத்தக்கூடிய நோய் பாரிசவாதம்

பாரிசவாத நோயானது மருத்துவ ரீதியில் குணப்படுத்தக் கூடிய நோயாக இருப்பதாலும் பாரிசவாத நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதாலும் இந்த நோய் பற்றிய தகவல்களை அனைவரும் அறிந்திருத்தல் அவசியமாகும். பெரும்பாலும் தங்களுக்குப் பாரிசவாத நோய் ஏற்படும் போதோ அல்லது தமது குடும்பத்தினருக்கு ஏற்படும் பொழுதோ மட்டுமே இந்த நோய் பற்றி அறிந்து கொள்வதில் பலர் ஆர்வம் செலுத்துகின்றனர். பொதுவாக நோக்குமிடத்து இந்த நோய் பற்றிய விழிப்புணர்வுமிகவும்குறைவாகவே உள்ள காரணத்தினால் தகுந்த நேரத்தில் சிகிச்சை வழங்கப் படாத நிலை இன்னமும் காணப்படுகின்றது. எனவே இந்த நோய் தொடர்பாக ஏற்கனவே அறிந்திருப்பின் நோய் ஏற்படும் சந்தர்ப்பங்களில் உருவாகக் கூடிய பதற்ற நிலையைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

**பாரிசவாதம் என்றால் என்ன?**

நமது மூளையின் சில பகுதிகளுக்குரிய குருதி வழங்கலில் இடையூறு ஏற்படுவதால் உருவாகும் நிலையே பாரிசவாதமாகும். இந்தநிலைதிடீரென உருவாவதால் இதனை மூளையில்ஏற்படும்விபத்து எனவும் அழைப்பர்.

**பாரிசவாதம் ஏன் ஏற்படுகின்றது?**

மூளைக்குக் குருதியை வழங்குகின்ற குருதிக் குழாயில் அடைப்பு ஏற்படுதல், மூளையில் உள்ள குருதிக் கலன்களில் வெடிப்பு காரணமாக குருதிப் பெருக்கு ஏற்படுதல் ஆகிய இரு காரணிகளிலும் மிகவும் பொதுவான காரணியாக குருதிக் குழாயில் ஏற்படும் அடைப்புக் காரணமாக மூளையிலுள்ள குறிப்பிட்ட ஒரு பகுதிக்குக் குருதியைக் கொண்டு செல்லும் குருதிக் குழாயில் ஏற்படும் தடை காரணமாகவே இது உருவாகின்றது. குருதிக் குழாயின் சுவரில் கொழுப்புப் படிவதனால் குருதிக் குழாயின் உள்விட்டம் படிப் படியாகக் குறைவடைந்து செல்கின்றது. இவ்வாறு ஏற்படும் பொழுது ஒரு சமயத்தில் குருதியோட்டத்தில் தாமதம் ஏற்பட்டு இதன் விளைவாக குருதியுறைவும் ஏற்படும். இதனைக் குருதியடைப்பு என்பர். இதேபோன்ற நிகழ்வு இருதய நாடிகளில் ஏற்படும் பொழுது இதனை மாரடைப்பு என்று நாம் அழைக்கின்றோம்.

இதை விட சில சந்தர்ப்பங்களில் இருதயம் மற்றும் இருதயத்திலிருந்து வெளியேறும் பெரிய குருதிக் குழாய்களில் பல்வேறு காரணங்களினால் குருதிக் கட்டிகளும் உருவாகலாம். இக்கட்டிகள் பொதுக் குருதிச் சுற்றோட்டத்தில்கலந்து மூளைக்குரிய நாடிகளினூடாகச் செல்லும் பொழுது குருதிக் குழாய்களிலேயே தங்கி விடுவதனால் திடீரென குருதிச் சுற்றோட்டம் தடைப்படுகின்றது. மேலும் சில சந்தர்ப்பங்களில் மூளை நாடிகள் வெடித்து குருதிப் பெருக்கும் ஏற்படலாம். இதன் காரணமாக மூளையின் தொழிற்பாட்டில் திடீர் முடக்க நிலை ஏற்பட்டு பாரிசவாதத்தின் குணங்குறிகள் ஏற்படுகின்றன. குருதிப்போக்கின் காரணமாக ஏற்படும் பாரிசவாதமானது குருதியுறைவினால் ஏற்படும் பாரிசவாதத்தைவிட தீவிரமானதும் ஆபத்தானதுமாகும். அதிர்ஷ்டவசமாக ஏறத்தாழ 15வீதமானவர்கள் மாத்திரமே இந்தக் காரணத்தினால் நோய்வாய்ப்படுகின்றனர். உயர்குருதியமுக்கம் இதற்கொரு முதன்மைக் காரணியாக அமைகின்றது. உயர்குருதியமுக்கநோயாளிகள் அதற்குரிய மருந்துகளை ஒழுங்காக எடுக்காதவிடத்து குருதியமுக்கம்கட்டுப்பாடின்றிஉயர்வடைந்து குருதிக் குழாய் வெடிப்பினை ஏற்படுத்துகின்றது.

ஆகவே பாரிசவாதத்துக்குரிய மேற்கூறிய இருகாரணிகளையும்வேறுபடுத்தல்போன்ற பரிசோதனைகள் பயன்படுத்தப் படுகின்றன. தற்காலிக பாரிசவாதத்திற்கு உட் பட்டவராயினும் சிகிச்சை அவசியம். ஏனெனில் இவர்களில் 10 வீதமானோர் அடுத்த ஒரு வார காலத்தினுள்ளும் 20 வீதமானோர் ஒரு மாத காலத்தினுள்ளும் 50 வீதமானோர் ஒரு வருட காலத்தினுள்ளும் நிரந்தர மற்றும் பாரதூரமான பாரிசவாத நோய்க்கு உள்ளாவதற்கு வாய்ப்புக்கள் உண்டு.




**தற்காலிக பாரிசவாதம் என்றால் என்ன?**

தற்காலிக பாரிசவாதம் என்பது பாரிசவாதத்திற்குரிய குணங்குறிகள் ஏற்பட்டு 24 மணித்தியாலங்களுக்குள் மீண்டும் இயல்புநிலையை அடைவதைக் குறிக்கும். இதற்கு குருதிக் குழாய்களில் ஏற்படும் நிரந்தரமற்ற குருதியடைப்பு ஒரு காரணமாக அமையலாம்.

இதற்குக் குருதிக் குழாய்களில் ஏற்படும் நிரந்தரமற்ற சுருக்கம் அல்லது குருதிக் குழாய்களில்ஏற்படும் சிறிய குருதிக் கட்டிகள் காரணமாக இருக்கலாம்.

இதன்மூலம் தற்காலிக பார்வையின்மை, பேச்சில் பாதிப்பு மற்றும் உடலின் ஒரு பக்கத்தில் பலவீனம் போன்றவை ஏற்படினும் இதனால் பாரதூரமான இயலாமை ஏற்படுவது மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது. இதற்குரிய குணங்குறிகள் தாற்காலிகமானவையாக இருப்பினும் இவை ஆபத்தான பாரிசவாதம் ஏற்படப் போகின்றது என்பதற்கான பொதுவான ஒரு முன்னெச்சரிக்கையாகவும் விளங்குகின்றது.

**பாரிசவாதம் ஏற்படுவதற்குரிய காரணிகள் யாவை?**

உயர் குருதியமுக்கம், உயர் குருதிக் கொலஸ்திரோல் மட்டம், புகைத்தல், அதிகரித்த உடற்பருமன் மற்றும் நீரிழிவு போன்ற நோய் நிலைகளே பாரிசவாதம் ஏற்படும் சாத்தியக் கூறுகளைஅதிகரிக்கவல்லன.

**பாரிசவாத நோயினை எவ்வாறு இலகுவாக இனங்காணலாம்?**

சடுதியாக பாரிசவாதம் ஏற்படும் நோயாளியைப் பின்வரும் அறிகுறிகளை வைத்து இலகுவாக இனங்கண்டு கொள்ளலாம். இதனை இலகுவாக்குவதற்கு [illegible] டானது பன்னாட்டு ரீதியில் பரிந்துரைக்கப் பட்டுள்ளது. இந்த அறிகுறிகள் பெரும்பாலும் உடலின் ஒரு பக்கத்தில் ஏற்படுகின்றன.

ஒருவரின் முகத்தில் சடுதியாக ஏற்படக் கூடிய சமச்சீரற்ற தன்மை. இதனை அந்த நபரை சிரிக்கவைப்பதன் மூலம் தெளிவாகக் கண்டறிய முடியும்.

ஒருபக்கக் கையில் ஏற்படும் சோர்வுத் தன்மை. நோயாளியின் இரு கைகளையும் மேலே உயர்த்தச்செய்வதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

நோயாளியின் பேச்சு தெளிவற்றுக் காணப்படும் அல்லது பேசுவதில் ஏற்படும் சிரமம். உடனடி மருத்துவ உதவியை நாடல் மேலே குறிப்பிட்ட அறிகுறிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட அறிகுறிகள் ஒருவரில் காணப்படுமாயின் நேர தாமதமின்றி வைத்திய சிகிச்சைக்கு எடுத்துச் செல்லுதல் வேண்டும். சடுதியாக ஏற்படும் பாரிசவாத நோயாளியை இனங்காணுமிடத்து உடனடியாக மருத்துவ உதவியை நாடுதல் அவசியமாகும்.

குறிப்பாக நோய் அறிகுறிகள் ஏற்பட்டு நாலரை மணி நேரத்துக்குள் மருத்துவ சிகிச்சைவழங்கப்படின் நோயாளியின் குணங்குறிகள் முற்று முழுதாகக் குறைவடைவதற்கு வாய்ப்புண்டு.

மாறாக கால தாமதமாகும் பொழுது மூளைக்குச் செல்லும்குருதியின்அளவு மேலும் குறைவடைந்து மூளைக் கலங்கள் இறக்கும் எண்ணிக்கையும் அதிகரித்துவிடும். அத்துடன் நோயாளியுடைய குணங்குறிகளும் நிரந்தரமாகி விடும். எனவே தகுந்த நேரத்தில் நோயாளியை இனங்கண்டு சிகிச்சையளித்தல் மிக அவசியமாகும்.

**பாரிசவாதத்தின் விளைவுகள் என்ன?**

பாரிசவாதத்தினால் ஏற்படும் பாதிப்பு என்பது இந்த நோயால் ஒருவரின் மூளையின் எந்தப் பகுதிபாதிப்புக்குள்ளாகியுள்ளது என்பதில் தங்கியுள்ளது. மூளையில் குறிப்பிட்ட சிலபகுதிகளில்ஏற்படும் சிறிய செயலிழப்புக் கூட பாரியவிளைவுகளை உருவாக்கலாம். அதேவேளை மூளையானதுபெரியளவில் பாதிக்கப்பட்டாலும் அதன் பாதிப்புக்களை அவதானிக்க முடியாமலும் இருக்கலாம். மிகவும் பொதுவான பாதிப்புக்களாவன :

உடலின் ஒரு பக்கம் செயலற்றுப் போதல், உடலின் ஒரு பக்கம் உணர்வற்றுக் காணப்படுதல், பார்வையிழப்பு, தொடர்பாடலில் சிரமம், விழுங்குவதில் சிரமம், அறிவுசார் செயற்பாடுகள், சிந்திக்கும் திறன் இழக்கப்படல், அதிகமாக உணர்ச்சி வசப்படல்.

**பாரிசவாதத்திற்கு சிகிச்சையளிக்க முடியுமா?**

பாரிசவாதத்திற்குரிய சிகிச்சையானது நரம்பியல் நிபுணர் உள்ளடங்கிய விசேட பல்துறை வைத்தியநிபுணர் குழாமினால் வழங்கப்படுகின்றது. இது சார்ந்த வசதிகள் மற்றும் பயிற்றப்பட்டநிபுணர்கள் சேவைகள் என்பவை இலங்கையில் இப்பொழுது வடக்கு உட்பட அனைத்துப் பாகங்களிலும்விஸ்தரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக பாரிசவாதம் இனங்காணப்பட்டு 4.5 மணி நேரத்திற்குள்நோயாளியை உரிய வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று சிகிச்சையளிக்க இடமளிப்பதன் மூலம் இந்நோயின் வீரியத்தை முற்றாகவோ அல்லது இயலுமானவரையோ குறைத்துக் கொள்ளமுடியும்.

பாரிசவாத நோயாளியின் நோய்க்கான காரணி குருதியடைப்பு என வல்லுநரால் இனங்காணப்படுமிடத்து குருதிக் கட்டிகளாக கரைக்கும் ஊசிமருந்துகளை ஏற்றி அடைப்பினைநீக்க முடியும்.

**பாரிசவாத நோய்க்குள்ளானவர் கடைப்பிடிக்க வேண்டியவை யாவை?**

குருதி அமுத்தத்தினைக் கட்டுப்படுத்தல், கொலஸ்ரோல் மற்றும் நீரிழிவினைக் கட்டுப்படுத்தல், முறையான உடற்பயிற்சி உணவுப்பழக்கத்தை மாற்றுவதன் மூலம் உடற் பருமனைக் கட்டுப்படுத்தல், புகைத்தல் பழக்கத்தை முற்றாக நிறுத்துதல், மதுபாவனையைக் குறைத்தல்

**பாரிசவாதம் ஏற்பட்ட ஒருவருக்கு மீண்டும் பாரிசவாதம் ஏற்படுமா?**

ஒருவருக்கு பாரிசவாதம் ஏற்பட்டால் ஒரு வருட காலப்பகுதிக்குள் மீண்டும் பாரிசவாதம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். ஒருவருட காலத்தின் பின்னர் மீண்டும் இன்னொரு பாரிசவாதம் ஏற்படுதல் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. ஆனால் இக்காலப் பகுதியினுள் பாரிசவாதம் ஏற்படுவதற்குரிய மேற்குறிப்பிட்ட காரணிகளைக் கட்டுப்படுத்துவதன் மூலமாகப் பாரிசவாதம் ஏற்படுவதற்கான ஆபத்தினை வெகுவாகக் கட்டுப்படுத்தலாம்.

**பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்ட ஒருவர் மீண்டும் இயல்பு வாழ்க்கையை அடைய முடியுமா?**

மூளையின் சில பகுதிகள் பாரிசவாதத்தினால் பாதிக்கப்படுமிடத்து அந்தப் பகுதிகளுடன்தொடர்புடைய தொழிற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்படுகின்றது. ஆனால் சீரானநரம்பியல் பயிற்சியை மேற்கொண்டு நோயாளியை அவரது இயல்பு வாழ்க்கைக்கு எடுத்துச் செல்ல முற்படும் பொழுது, பாதிக்கப்பட்ட பகுதியுடன் தொடர்பான மூளையின் செயற்பாடுகள் பாதிக்கப்படாத மூளையின் வெவ்வேறு பாகங்களுக்கு இயல்பாகவே மாற்றப்படுவதனால் நோயாளி நல்ல நிலையை அடைய வாய்ப்புக்கள் உள்ளன. ஆகவே பாரிசவாதம் ஏற்பட்டால் ஒருவரால் மீண்டும்முன்னர் போல இயல்பு நிலைக்கு மீள முடியாது என்ற கருத்து தவறானதாகும். நோயாளியை மருத்துவரால் பரிந்துரை செய்யப்பட மூளைப் பயிற்சிகளைத் தவறாது தகுந்த முறையில் மேற்கொள்ள ஊக்குவிப்பதன் மூலம் அவரைத் தன்னிச்சையாக இயங்க இடமளிக்கலாம்.

இதற்குரிய சிகிச்சைகள் பல்வேறு காரணிகளில் தங்கியுள்ளன. பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்ட மூளையின் பகுதி, பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்ட மூளையின் அளவு, பாரிசவாதம் ஏற்பட்டதிலிருந்து மருத்துவச் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்ட காலம், பாரிசவாதம் தவிர்ந்த ஏனைய நோய் நிலைகள் (நீரிழிவு, உயர் குருதியமுக்கம் மற்றும் கொலஸ்ரோல் வியாதிகள்) பாரிசவாதத்தின் தன்மை (குருதிப் பெருக்கு / குருதியுறைவு ) எனவே பாரிசவாதம் பற்றிய அடிப்படை தகவல்களை தெரிந்து கொள்வதன் மூலமும் அவற்றை மற்றையவர்களுடன் பரிமாறிக் கொள்வதன் மூலமும் பாரிசவாத நோயாளிகளைத்தக்க தருணத்தில் தகுந்த மருத்துவரிடம் சிகிச்சைக்கு எடுத்துச் சென்று இந்த நோயினால் ஏற்படக் கூடிய பாரதூரமான விளைவுகளைக் குறைத்துக் கொள்ள முடியும்.

கட்டுரையாளர்:
சிறப்பு நரம்பியல் நிபுணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இன்றைய தினம்

1449 - முதலாம் கிறிஸ்டியன் டென்மார்க்கின் அரசராக முடிசூடினார்.

1492 - புதிய உலகுக்கான முதற் பயணத்தில் கிறிஸ்தோபர் கொலம்பஸ்சினால் கியூபா கண்டுபிடிக்கப்பட்டது.

1886 - நியூயோர்க் துறைமுகத்தில், ஜனாதிபதி குறூவர் கிளீவ்லான்டினால் சுதந்திரச் சிலை அர்ப்பணிக்கப்பட்டது.

1904 - பனாமாவும், உருகுவேயும் இராஜரீக உறவை ஏற்படுத்திக் கொண்டன.

1922 - இத்தாலிய பாஸிஸ்டுகள் பெனிடோ முசோலினி தலைமையில் பேரணியாகச் சென்று, இத்தாலிய அரசைக் கையேற்றனர்.

1948 - சுவிற்சர்லாந்து இரசாயனவியலாளர் போல்முல்லர் டி.டி.ரியைக் கண்டுபிடித்தமைக்காக உடலியல் அல்லது மருத்துவத்துக்கான நோபல் பரிசைப் பெற்றுக்கொண்டார்.

1962 - கியூபாவிலிருந்து, சோவியத் ஏவுகணைகளை அகற்ற சோவியத் பிரதமர் நிகிடா குருஷேவ் உத்தரவிட்டதை அடுத்து, கியூபாவில் ஏவுகணை நெருக்கடி முடிவுக்கு வந்தது.

1995 - அஜெர்பைஜானின் பாக்கு மெற்றோ நிலக்கீழ் ரயில் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 289 பேர் உயிரிழந்ததுடன், 265 பேர் காயமடைந்தனர்.

1992 - வலி.வடக்கு மற்றும் வலி.மேற்கு நோக்கி நள்ளிரவில் அகோர ஷெல் தாக்குதல், கும்மிருட்டில் குடும்பங்கள் சராசரியாக இடம் பெயர்வு.

- கிளாலிப் பகுதியில் மீண்டும் தாக்குதல் மண்ணெண்ணெய் ஏற்றிவந்த படகு தீப்பிடித்துக் கடலில் மூழ்கியது.

2004 - டிசெம்பர் 2006 இலேயே ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவு. ஐ.தே.க. கூறுவது போன்று 2005 டிசெம்பரிலல்ல என மங்கள சமர வீர எதிரணிக்குப் பதிலடி.

- பேச்சு மீண்டும் ஆரம்பிக்கப்படாமல் டோக்கியோ நிதி வழங்கப்படமாட்டாதென தமிழ்க் கூட்டமைப்பிடம் அகாசி உறுதி.

2007 - புலிகளின் விமானங்களைத் தாம் விரைவில் சுட்டு வீழ்த்துவோம் என பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு.

- குடாக்கடலில் தொழில் செய்ய படையினர் அனுமதி; ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை என்ற நிபந்தனையுடன்.

2009 - குண்டு வெடிப்பில், பாகிஸ்தான் பெஷவாரில் 117 பேர் உயிரிழந்ததுடன், 213 பேர் காயமடைந்தனர்.

# நல்வழி காட்டிய சரவணன்

சரவணன் ஓர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த சிறுவன். அவனுக்கு அப்பா கிடையாது. அவர் தினமும் அதிகளவு மது அருந்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இதுவே இளவயதில் அவர் சாவைத் தழுவுவதற்குக் காரணமாக அமைந்துவிட்டது.

அவனது தாயார் காலை வேளையில் இடியப்பம், தோசை, பிட்டு போன்ற பலகாரங்களைத் தயார் செய்து விற்பனை செய்து, அதில் கிடைக்கின்ற சிறு வருமானத்தின் மூலமாக குடும்பச் செலவுகளைச் சமாளித்து வந்தார். அவனது குடும்பத்தில் அவனும், தாயாரும் மட்டுமே இருந்ததால் குடும்பச் செலவுகளைச் சமாளிப்பதற்கு அவர்களால் ஓரளவு முடிந்தது.

எட்டு வயதே நிரம்பிய சரவணன் அதிகாலையில் எழுந்து தாயாருக்கு உதவி செய்வான். பின்னர் பலகாரங்களை அயலில் உள்ள வீடுகளுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்வான். இதனால் வீடுகளில் உள்ளவர்களின் சிரமம் குறைவதுடன் பலகாரத்தையும் அதிகளவு விற்க முடிந்தது.

விற்பனை முடிந்ததும் வீட்டுக்கு ஓடோடி வருவான் சரவணன். பின்னர் அவசர, அவசரமாகக் குளித்துவிட்டு காலை ஆகாரத்தை அருந்திய பின்னர், பாடசாலைக்குச் சென்று விடுவான். அவனது வகுப்பில் அவன் எப்போதுமே முதலாவதாக வருவான். சரவணனின் பொறுப்புணர்வைத் தெரிந்து கொண்ட ஆசிரியர்கள் அவன்மீது எப்போதுமே பாசத்துடன் நடந்து கொள்வார்கள். ஆனால் அவன் பலகார விற்பனையில் ஈடுபடுவதை நையாண்டி செய்வதற்கும் அங்கு சிலர் காணப்பட்டனர். அவர்கள் சரவணைக் கண்டதும் தோசை, இடியப்பம் என உரத்த குரலில் அழைப்பார்கள். சரவணன் இதையெல்லாம் பொருட்படுத்துவதில்லை. படித்துப் பெரிய உத்தியோகம் பார்க்க வேண்டும். அம்மாவை கஷ்டம் ஏதுமின்றிப் பராமரிக்க வேண்டும் என எப்போதுமே அவன் நினைத்துக் கொள்வான்.

இறுதியில் அவன் மருத்துவம் கற்பதற்குத் தெரிவானான். அவனது குடும்ப நிலையைத் தெரிந்து கொண்ட அவனுக்குக் கற்பித்த ஆசிரியர்களும், ஊரிலுள்ள நல்ல மனம் படைத்தவர்களும் அவனது கல்வி மற்றும் பிற தேவைகளுக்குரிய நிதியுதவியை வழங்கினார்கள். சரவணன் நன்றியுடன் அவற்றை ஏற்றுக் கொண்டான்.

இறுதியில் அவன் ஒரு மருத்துவராகி அவனது ஊரிலுள்ள மருத்துவமனையிலேயே கடமைப் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொண்டான். அவனது வருகையின் பின்னர் அந்த மருத்துவமனை சிறப்பாக இயங்கியது. ஊர் மக்கள் அனைவருக்கும் பாரபட்சமின்றி மருத்துவ சேவை வழங்கப்பட்டது. இதனால் அந்த ஊர் மக்கள் அவனைப் பெரிதும் புகழ்ந்து போற்றினார்கள். இதனால் சரவணனின் தாயாருக்குத்தான் அதிக மகிழ்ச்சி. தனது பிள்ளை எவ்வளவோ கஷ்டத்துக்கு மத்தியில் படித்து மருத்துவராகி ஏனையவர்களுக்குச் சேவை செய்வதைப் பார்த்து அந்தத்தாய் ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.



சரவணன் வசதியானதொரு வீட்டில் தனது தாயாரைக் குடியமர்த்தி சகல வசதிகளையும் செய்து கொடுத்தான். தனது தாயார் சிரமப்படக் கூடாது என்பதற்காகசமையல்காரியையும், வேலைக்காரியையும் அவன் நியமித்தான்.

அன்பான பிள்ளைகளே! சரவணனின் உயர்வான குணம் உங்களுக்கும் ஒரு பாடமாக விளங்க வேண்டும். நீங்கள் அவனது வழியில் சென்றால் நிச்சயமாக உயர்வடைய முடியும்.

சு.ரிஷானிகா



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



உதயன் சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாக மூட்டும் வகையில் கச்சிதமான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் வெள்ளிக்கிழமைகளில் இந்தப் பகுதியில் வெளியிடப்படுகின்றன.



த.காருணியா,
தரம் – 1D,
யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம், யாழ்ப்பாணம்

சிறுவர் பக்கத்துக்கான ஆக்கங்கள், ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. editor@uthayan.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அல்லது 361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருணைமலர்**
சிலரை தாமதமாக அறிமுகப்படுத்து வதுதான் வாழ்க்கை; நமக்கிழைக்கும் பெருந்துரோகம்!

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உங்கள் மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் உள்ள இடையூறுகள் விலகும். வருமானம் சீராகும். குடும்பத்தினரின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**இடபம்:** எதிலும் நிதானமாக இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில், மூலதன தேவை அதிகரிக்கும். லாபம் சுமாராக இருக்கும். பெண்கள், வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம்.

**மிதுனம்:** நண்பர்களால் சிரமம் குறுக்கிடலாம். தொழில், வியாபாரத்தில், விடாமுயற்சி அவசியம். லாபம் மிதமாக இருக்கும். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதிகரிக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**கடகம்:** கடந்த கால உழைப்பின் பயனை அடைவீர்கள். உறவினர் செய்த உதவிக்கு மறு உதவி செய்வீர்கள். தொழில், வியாபாரத் தொடர்பால், லாபம் அதிகரிக்கும். ஆரோக்கியம் மேம்படும். ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வீர்கள்.

**சிங்கம்:** சூழ்நிலை உணர்ந்து பேசுவது நல்லது. முக்கிய பணி நிறைவேற்றுவதில், தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரம், மந்தகதியில் இயங்கும், லாபம் சுமாராக கிடைக்கும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமைக்கு வழிவகுக்கும்.

**கன்னி:** பேச்சின் இனிமையால் அனைவரையும் கவர்வீர்கள். நண்பரின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், அதிக லாபம் வரும். கொடுக்கல் வாங்கல் சீராகும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**துலாம்:** உங்களின் நற்செயலை சிலர் குறை சொல்வர். தொழில், வியாபார வளர்ச்சியால், லாபம்பன்மடங்கு உயரும். பணியாளர்கள், சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள், சுற்றுலா செல்ல திட்டமிடுவர்.

**விருச்சிகம்:** பேச்சில் கலகலப்பு மிகுந்திருக்கும். தனித்திறமையால் தொழில், வியாபாரத்தில், முன்னேற்றம் அடைவீர்கள். ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு கடனுதவி கிடைக்கும். பிள்ளைகளின் நலனில் கவனம் தேவை.

**தனுசு:** எதிர்கால வளர்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் நன்மதிப்பை பெறுவர். பிள்ளைகளின் வழியில் சுபவிடயப் பேச்சு நடக்கும்.

**மகரம்:** விரும்பாத நபரைச் சந்திக்க நேரிடலாம். தொழில், வியாபாரத்தில், லாபம் சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமையைச் சந்திப்பர். பெண்கள், சிக்கனத்தின் மூலம் செலவைச் சமாளிப்பர்.

**கும்பம்:** முக்கியமான பணி நிறைவேற தாமதமாகலாம். குடும்பத்தினரின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். தொழில், வியாபாரம், சராசரி அளவில் இருக்கும். உறவினர் வருகையால் திடீர் செலவு ஏற்படும்.

**மீனம்:** நண்பர் வழியில் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், வியத்தகு முன்னேற்றம் உண்டாகும். சேமிக்கும் விதத்தில் லாபம் வரும். ஆரோக்கியம் பலம்பெறும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.



## புருனே இளவரசியின் ஆசையை நிறைவேற்றுவாரா அஜித்?

தமிழ்நாட்டில் அஜித்துக்கு ஏராளமான ரசிகர்கள் உள்ளனர். ஆனால் அண்மையில் புருனே நாட்டின் இளவரசியும் இவருக்கு ரசிகையாக மாறிவிட்டாராம். மன்னராட்சி நடைபெறும் புருனோ நாட்டில், ஒரு விருந்து விழாவில் ஆலுமா டோலுமா பாடல் ஒலிக்க, அந்தப் பாடலை கேட்டு மெய் மறந்தாராம் இளவரசி.

மேலும் தனது மெய்க்காப்பாளர்களிடம் அஜித்தை பற்றி விசாரித்திருக்கிறார். இந்த நிலையில், தற்போது புத்தாண்டு விருந்துக்கு அஜித்தை அழைத்துள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன. இதற்காக விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாம். ரத்தினக் கம்பள வரவேற்பு, வைரங்கள் பதித்த சிம்மாசனம் என பிரமாண்ட வரவேற்புகள் தடபுடலாக செய்யப்பட உள்ளதாம்.

ஆனால், அஜித் கலந்து கொள்வாரா? இளவரசியுடன் விருந்து உண்பாரா? என்பதுதான் தெரியவில்லை என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.




"டாக்டர்...
வர.. வர.. காது சரியாகவே கேட்கமாட்டேங்குது..."
"நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க. ரெண்டே நாளில காய்ச்சல் சரியாயிடும்".

முன்னாடி பைக் ஓட்டிட்டுப் போனவருடைய பேர்ஸ் கீழ விழுந்திடுச்சு. நான் எடுத்துட்டு கிட்டதட்ட மூன்று கிலோ மீற்றர் பின்சென்று அவரு பைக்க நிப்பாடிட்டன்.



நிப்பாட்டி நீங்க நல்லா இருக்கனும் என்று சொல்லிட்டு கிளம்பி வந்துட்டன்...



தீபாவளிக்கு புது உடுப்பு எடுக்கபோகாமல் பிள்ளையாரையே பூட்டி வைத்திருக்கிறாங்கள்.... அட பாவியளா...!

இன்றைய சூழ்நிலையில் தீபாவளிக்கு ஆகுற செலவைப் பார்த்தால்...



அன்றைக்கு நரகாசூரனை கொல்லாமல் மன்னிச்சு விட்டு இருக்கலாம்போல...

டாக்டரவிட எந்தெந்த பொருளில் என்ன என்ன (விற்றமின்) சத்து இருக்கு எண்டு டிஸ்கவரி அலைவரிசையில வாறவருக்குத்தான் அதிகம் தெரியும்.



எதை எடுத்தாலும் இதுல விற்றமின் ஏ. பி. இருக்குது என்கிறார்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | 4 | 6 | 7 | | | |
| | | 3 | | | | | | |
| | | 8 | | | | | 1 | |
| | 7 | | 9 | | | | | 8 |
| 6 | | | | | | | | 2 |
| 1 | | | | | 5 | | 3 | |
| | 4 | | | | | 5 | | |
| | | | | | | 7 | | |
| | | | 8 | 2 | 4 | 3 | | 9 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 2 | 3 | 6 | 7 | 4 | 1 | 8 |
| 4 | 8 | 3 | 1 | 5 | 2 | 7 | 6 | 9 |
| 6 | 7 | 1 | 4 | 9 | 8 | 2 | 3 | 5 |
| 7 | 1 | 8 | 9 | 4 | 5 | 6 | 2 | 3 |
| 9 | 3 | 4 | 2 | 1 | 6 | 8 | 5 | 7 |
| 2 | 6 | 5 | 8 | 7 | 3 | 1 | 9 | 4 |
| 1 | 2 | 9 | 5 | 8 | 4 | 3 | 7 | 6 |
| 3 | 4 | 7 | 6 | 2 | 9 | 5 | 8 | 1 |
| 8 | 5 | 6 | 7 | 3 | 1 | 9 | 4 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க் கரீதியா ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1- வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளை யும் கொண்டது. 3X3ஆக உள்ளேயு 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிற (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட் டங்கள், பகு கள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையா எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டு வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1- இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சி கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீ யில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொரு தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவ மான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றி மாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவி பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காய்கறி பகோடா



### தேவையான பொருள்கள்

விருப்பமான காய்கள் – அரைக்கிலோ
கடலை மாவு – ஒரு கப்
ரவை – அரை கப்
மஞ்சள் தூள் – கால் தேக்கரண்டி
சர்க்கரை – 2 தேக்கரண்டி
மிளகாய்த்தூள் – கால் தேக்கரண்டி
தயிர் – 2 மேசைக்கரண்டி
பெருங்காயம் – ஒரு சிட்டிகை
பச்சைமிளகாய் – 6
இஞ்சி துண்டு – சிறியது
எண்ணெய் – பொரிப்பதற்கு
உப்பு – தேவையான அளவு

### செய்முறை

காய்கறிகளைப் பொடியாக நறுக்கி வேகவைத்து எடுத்துக்கொள்ளவும். கடலைமாவுடன் ரவையை நன்றாகக் கெட்டியாக கலந்து வைத்துக்கொள்ளவும்.

இதனுடன் மஞ்சள் தூள், மிளகாய் தூள், சர்க்கரை, தயிர், பெருங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி, தேவையான அளவு உப்பு சேர்த்து பிசைந்து கொள்ளவும்.

ஒரு தேக்கரண்டி எண்ணெயும் சேர்த்து நன்கு கலந்துகொள்ளவும்.

கலவையில், வேகவைத்த காய்கறிகளைச் சேர்த்து சிறிதளவு தண்ணீர் சேர்த்துப் பிசைந்து கொள்ளவும்.

சட்டியில் எண்ணெய் விட்டுக் காய்ந்ததும் சிறுசிறு உருண்டைகளாகப் போட்டு, மிதமான தீயில் பொரித்து எடுக்கவும். காய்கறி பகோடா தயார்.




பெண்களுக்கான பல வர்ண பாவாடைகள் அறிமுகமாகியுள்ளன. குடை வெட்டுப் பாவாடைகளான இவை நெற், பருத்தி துணிகளில் வடிவமைக்கப் பட்டவை. இவை 500 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.





# வெங்காயத்தின் பயன்கள்



- வெங்காயத்தில் புரதச்சத்துக்கள். தாது உப்புக்கள். விற்றமின்கள் உள்ளன. எனவே இவை உடம்புக்கு ஊட்டச் சத்தைத் தருகின்றன. தூக்கமில்லாமல் கஷ்டப்படும் குழந்தைகளுக்கு சிறிய வெங்காயத்தைத் தண்ணீரில் கொதிக்க வைத்து அந்தச் சாறை இரண்டு கரண்டி சீனி சேர்த்துக்கொடுக்க நல்ல தூக்கம் வரும்.
- சிறு குழந்தைகளுக்கு உண்டாகும் தொண்டைநோ வியாதிக்கு ஒரு சிறிய வெங்காயத்தை தோல் நீக்கி. சிறிது உப்பு சேர்த்து மென்று சாப்பிடக் கொடுக்க வேண்டும். பின்னர் குளிர்ந்த தண்ணீரைக் குடிப்பதன் மூலம் ஓரளவு குணம் ஆகும்.
- வெங்காயத்தைச் சுட்டு. சிறிது மஞ்சள். சிறிது நெய் சேர்த்து. பிசைந்து. மீண்டும் லேசாக சுடவைத்து உடையாத கட்டிகள் மேல் வைத்துக்கட்ட கட்டிகள் உடனே பழுத்து உடையும்.
- வெங்காயச் சாறு சில வயிற்றுக் கோளாறுகளை நீக்கும். இதை மோரில் விட்டுக் குடிக்க இருமல் குறையும்.




## சிகை அலங்காரம்

1, தலைமயிரை ஒன்றாக கூட்டி ஹூல்பாண்ட் போடவும். பின்னர் ஹூல் பாண்ட் போட்ட இடத்தில் சிறிய இடைவெளியை விரலால் ஏற்படுத்தவும்.

2,3, அந்த இடைவெளி வழியாக போணி ரெயிலை உட்புறமாக எடுத்து கீழ் பகுதிக்கு கொண்டு வரவும்.

4, அவ்வாறு கொண்டு வரப்பட்ட தலை முடியின் கீழ் பகுதியில் விரலை வைத்து மேல் பக்கமாக சுருட்டவும்.

5, மேல் பக்கமாக சுருட்டிய முடியை படத்தில் காட்டியவாறு அமைவிடப்படுத்தி கிளிப் செய்யவும்.

6, பின்னர் பூவைத்து அலங்கரிக்கவும்.

# அழகிய போத்தல் மெழுகுதிரி தாங்கி

### தேவையான பொருள்கள்

போத்தல், சம்கி (ஆடை அலங்காரத்துக்குப் பயன்படும் சீக்குன்ஸ்), கம், பெயிண்ட், தூரிகை, மெழுகுதிரி.

### செய்முறை



விருப்பமான அளவுகளில் போத்தல்களைத் தெரிவு செய்து கொள்ளவும். பின்னர் அதை கழுவி சுத்தம் செய்து எடுத்துக் கொள்ளவும்.



போத்தலின் மேல் பகுதியிலிருந்து சுற்றி கம் தடவி சம்கியை ஒட்டிக் கொண்டே வரவும். கழுத்து பகுதியில் படத்தில் இருப்பது போல் விருப்பமான வடிவத்தில் வரைந்து அதன் மேல் சம்கியை ஒட்டவும்.



போத்தலின் அடிப்பகுதியிலும் சம்கியை 5 வரிசைகள் ஒட்டவும்.



போத்தலின் உடல் பகுதி முழுவதும் விரும்பிய நிறத்தில் பெயிண்ட் செய்யவும்.



பெயிண்ட் செய்து முடித்ததும் குறைந்தது 2 அல்லது 3 மணி நேரங்கள் காய வைக்கவும்.



பெயிண்ட் காய்ந்ததும் போத்தலின் உள்ளே சிறிய மெழுவர்த்தியை வைத்து ஏற்றி விடவும். மெழுவர்த்தி வெளிச்சத்தில் போத்தல் அழகாக ஜொலிக்கும். வீட்டை அழகுபடுத்துவதில் இந்த முறையும் ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல் - 2017
# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ் குறிப்பிடப்படும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், கோழி இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடை என்பவற்றை 2017.01.01 ஆம் திகதி தொடக்கம் 2017.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி | :10/11/2016 பி.ப 3.00 மணிவரை |
| கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி | :11/11/2016 பி.ப 2.00 மணி வரை |
| கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி | :11/11/2016 பி.ப 2.30 மணி |
| கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் | :வலி தென்மேற்கு பிரதேச சபை, தலைமைஅலுவலகம் |

01. கேள்விப்பத்திரங்கள் 03 பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி உட்பட 02 பிரதிகளை "செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது அதற்கென தலைமைஅலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதி "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு 2016.11.11 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
02. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
04. ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்பட மாட்டாது.
05. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்துச்செய்யப்படும்.
06. இறைச்சிக்கடைக்கு மாதாந்த வாடகை செலுத்தப்படவேண்டும்.
07. கேள்விப்படிவக் கட்டணம், கேள்வித்தொகை, மாத வாடகை என்பவற்றிற்கு 2% தேசத்தை கட்டியெழுப்பும் வரி (NBT) செலுத்தப்படல் வேண்டும்.
08. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தலுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
09. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
10. ஆனைக்கோட்டைச்சந்தி மாட்டிறைச்சிக்கடை, ஆனைக்கோட்டை சந்தி கோழி இறைச்சிக்கடை என்பவற்றை குத்தகைக்கு எடுப்பவர்கள் இவற்றினை நடாத்துவதற்குரிய இடத்தினை தாங்களே தெரிவு செய்தல் வேண்டும்.
11. மாதவாடகை யாவும் விலை மதிப்பீட்டு திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடப்படும்.
12. சந்தைச் சுற்றாடலிருந்து 500m சுற்று வட்டாரத்தில் மீன், மரக்கறி, இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
13. துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்புடன் சந்தையை குத்தகைக்கு பெறுபவர்கள் துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்புக் கட்டணமாக ரூபா 5.00 இனையும் மோட்டார் சைக்கிள் பாதுகாப்புக்கட்டணமாக ரூபா 10.00 இனையும் அறவிடலாம். மேலதிகமாக எவ்வித கட்டணங்களையும் அறவிடலாகாது.
14. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 18.11.2016 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.
15. கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை தலைமைஅலுவலகத்திலும் உபஅலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
16. கேள்விப்பத்திரங்களை தலைமைஅலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## 2017 ஆம் ஆண்டிற்கான கேள்வி அட்டவணை

| இல | சந்தைகள் துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையங்களுடன், இறைச்சிக் கடைகள், கோழி இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடை விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் NBT தவிர | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை NBT தவிர | மாதாந்த வாடகை NBT தவிர |
|---|---|---|---|---|---|
| | மானிப்பாய் பட்டின உபஅலுவலகம் | | | | |
| 1 | மானிப்பாய் மீன் சந்தை (புதிய கட்டடத் தொகுதி) | 1,000.00 | 10,000.00 | 1 000,000.00 | |
| 2 | மானிப்பாய் மரக்கறிச் சந்தை (பழைய மீன் சந்தைக் கட்டடம் தவிர) | 1,000.00 | 5,000.00 | 600,000.00 | |
| 3 | மானிப்பாய் பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை(புதிய கட்டடத் தொகுதி) | 1,000.00 | 10.000.00 | 636,020.00 | 600.00 |
| 4 | மானிப்பாய் பொதுச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை(புதிய கட்டடத் தொகுதி) | 1,000.00 | 5,000.00 | 136,100.00 | 600.00 |
| 5 | மானிப்பாய் பொதுச் சந்தை கோழி இறைச்சிக்கடை (புதிய கட்டடத் தொகுதி) | 1,000.00 | 5.000.00 | 582,450.00 | 600.00 |
| | மானிப்பாய் கிராம உபஅலுவலகம் | 1,000.00 | | | |
| 1 | காக்கைதீவுப 'பொதுச்சந்தைக்கான' துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 5000.00 | 300.000.00 | |
| 2 | நவாலி பிரசாத் சந்தை | 1.000.00 | 5000.00 | 291,278.00 | |
| 3 | நவாலி பிரசாத் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5000.00 | 134.200.00 | 400.00 |
| 4 | நவாலி பிரசாத் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 44,165.00 | 300.00 |
| 5 | சாவற்கட்டு சந்தை | 1,000.00 | 5000.00 | 252,175.00 | |
| 6 | ஆனைக்கோட்டை மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 5000.00 | 374,074.00 | |
| 7 | ஆனைக்கோட்டை கோழி இறைச்சிக் கடை | 500.00 | 1500.00 | 72.270.00 | |
| | பண்டத்தரிப்பு பட்டின உபஅலுவலகம் | | | | |
| 1 | பண்டத்தரிப்பு பொதுச் சந்தை | 1,000.00 | 15,000.00 | 1717,100.00 | |
| 2 | பண்டத்தரிப்பு பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1.000.00 | 5.000.00 | 247390.00 | 1.500.00 |
| 3 | பண்டத்தரிப்பு பொதுச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 5.000.00 | 508,310.00 | 1,500.00 |
| 4 | பண்டத்தரிப்பு பொதுச் சந்தை கருவாட்டுக்கடை | 500.00 | 1.000.00 | 20.000.00 | 1,500.00 |
| 5 | பண்டத்தரிப்பு சாந்தை சந்தை | 1,000.00 | 5.000.00 | 305,635.00 | |
| | பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகம் | | | | |
| 1 | மாகியப்பிட்டி பொதுச் சந்தை | 1000.00 | 5000.00 | 216,711.00 | |
| 2 | மாகியப்பிட்டி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 82,610.00 | 250.00 |
| 3 | மாகியப்பிட்டி சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 71,687.00 | 250.00 |
| 4 | இளவாலை பொதுச் சந்தை | 1000.00 | 5000.00 | 211,750.00 | |
| 5 | இளவாலை பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 193.402.00 | |
| 6 | இளவாலை பொதுச்சந்தை கோழிஇறைச்சிக்கடை | 1000.00 | 1500.00 | 107,555.00 | |
| 7 | மாதகல் பொதுச் சந்தை | 1000.00 | 5000.00 | 198,115.00 | |
| 8 | மாதகல் பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 70.521.00 | 250.00 |
| 9 | மாதகல் பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 72,050.00 | 250.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.கு.சற்குணராசா
செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்
28.10.2016

# முஸ்லிம் மக்களுடைய வீடமைப்பு குறித்த பிரேரணை நிறைவேற்றம்

## வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில்

யாழ்ப்பாணம், ஒக்.28

பொம்மை வெளிப்பகுதியில் உள்ள தனியாருடைய வயல் காணிகளை மேட்டு நிலங்களாக மாற்றி முஸ்லிம் மக்களினுடைய வீடுகளை அமைப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்வினால் நேற்று மாகாணசபையில் முன்மொழியப்பட்ட பிரேரணை எந்தவிதமான எதிர்ப்பும் இன்றி வழிமொழியப்பட்டது.

யாழ்ப்பாணம், பொம்மைவெளி, பரச்சேரிப் பகுதியில் உள்ள தனியாருக்குச் சொந்தமான நெற்பரப்புக் காணிகளை மேட்டுக் காணிகளாக மாற்றி முஸ்லிம் மக்கள் வீடு அமைப்பதற்கு கமநல சேவைத் திணைக்களங்கள், மற்றும் மாவட்ட செயலாளர் ஆகியோர் அனுமதி அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வடமாகாணசபைஉறுப்பினர்அஸ்வின் நேற்று நடைபெற்ற மாகாண சபையின் 64ஆவது அமர்வில் மாகாண சபையில் பிரேரணையாக முன்மொழிந் தார். அஸ்வினுடைய பிரேரணை சபையில் கருத்திற்காக விடப்பட்டது.

வடக்கில் இருக்க கூடிய முஸ்லிம் மக்கள் மீள் குடியேறத் தகுதியானவர்கள். அவர்களின் குடும்பங்கள் அவர்களின் நிலங்களில் மீள் குடியேறுவதை மனப் பூர்வமாக ஏற்றுக் கொள்கின்றோம். அந்த மக்களின் காணிகளை தற்பொழுது மேல் நீதிமன்ற நீதிபதிகளாக இருக்கின்றவர்கள் முன்பு சட்டத்தரணிகளாக இருந்த காலப் பகுதியில் போலி உறுதி முடித்து அவற்றை விற்றார்கள். அவர்கள் எங்களை மறியலில் போட்டாலும் பரவாயில்லை. அவர்கள் இப்போது பதவியில் இல்லை என்றும் நினைகின்றேன். முஸ்லிம் சமூகம் தமது சொந்தக் காணியில் மீள் குடியேறுவதற்கு எவ்வித பிரச்சினைகளும் இல்லை. புதிதாக திட்டமிட்டுக் குடியேற்றப்பட்டவர்களைத்தான் நாங்கள் எதிர்க்கின்றோம். அவர்கள் தாங்கள் சொந்தமாக காணிகள் வாங்கி குடியிருப்பதை நாம் எதிர்க்கவில்லை- பிரேரணை தொடர்பில் சிவாஜிலிங்கம் கருத்துரைத் தார்.

முன்னைய காலப்பகுதியில் நெற்பரப்புக் காணிப்பகுதிகளில் கட்டடங்களைக் கட்டி இருக்கின்றனர். போரின் காரணமாக அழிவடைந்த கட்டடங்களை மீண்டும் கட்டியெழுப்ப முடியாத நிலையில் அவர்கள் இருக்கின்றனர். அதற்கான வயல் பரப்புக் காணிகள் சம்பந்தமாக ஒரு பொதுவான மூலோபாயங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக சொல்லப் போனால் யாழ்ப்பாண நகரமே ஒரு நெற்பரப்புக் காணியாகும். ஆனால் பின்னர் அவை திணைக்களங்களால் ஆராயப்பட்டு கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. அஸ்வின் கொண்டு வந்த பிரேரணையின் படி அந்த நிலங்களையும் மீளாய்வு செய்ய வேண்டிய தேவை உள்ளது. அண்மையில் ஜனாதிபதி நெற்செய்கைக் காணிகள் ஒன்றும் வீணடிக்கப் பட முடியாது என்று தெரிவித்திருக்கின்றார். உறுதிகளில் நெற்பரப்புக் காணிகள் என இருந்தால் அனுமதி வழங்கப்படாது- என்று மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன் தெரிவித்தார்.

அந்தக் காணிகளில் நீண்ட காலமாக விவசாய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப் படவில்லை. அவர்களின் உறுதிகளில் நெற்பரப்புக் காணிகள் என உள்ளதால் அவர்களால் கட்டுமாணப்பணிகள் எதனையும் மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது. வர்கள் அங்கு குடியேறுவதற்கு ஒரு தீர்வு காணப்படும் பட்சத்தில் முஸ்லிம் மக்களின் வாழ்க்கைக்கு ஒரு வழிவகுக்கும்- என்று உறுப்பினர் ஆனோல்ட் கருத்துரைத்தார்.

உவர்நீர் நிலப்பகுதிப் பிரச்சினை மாகாணம் முழுவதும் இருக்கின்றது. முல்லைத்தீவுப் பகுதியிலும் இந்தப் பிரச்சினை காணப்படுகின்றது. பிரேரணையில் அதையும் உள்ளடக்குவது சிறந்த விடயம் என நான் நினைகின்றேன்- என்று து.ரவிகரன் கருத்துத் தெரிவித்தார்.

இறுதியில் கருத்துத் தெரிவித்த அவைத் தலைவர், இது தனியார் காணிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளே எனவும் பிரேரணைகளை விளங்கிக் கொள்ளுமாறும் தெரிவித்ததுடன் பிரேரணையை நிறைவேற்றுமாறு கோரினார். பிரேரணை மாகாண சபை உறுப்பினர் சர்வேஸ்வரனால் வழிமொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டது. (ற-21,8)

# அறிவுறுத்தலை மீறும் வர்த்தகர் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.28

தீபாவளிப் பண்டிகைக்கான அறிவித்தல்களை மீறி வியாபாரத்தில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கு எதிராகப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கரைச்சிப் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் நிரந்தரமாக வியாபாரம் செய்யும் வர்த்தர்களின் நலன் கருதி கடந்த 20ஆம் திகதி முதல் எதிர்வரும் 31ஆம் திகதி வரையான காலப் பகுதியில், நடமாடும் வர்த்தகர்களின் வியாபாரத்தை முற்றாகத் தடை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அறிவித்தலை மீறிச் செயற்படும் வர்த்தகர்கள் மீது பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும்.

பண்டிகைக்கால பொருள்களின் வர்த்தக செயற்பாடுகளுடன் தொடர்பற்ற வியாபாரச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற வர்த்தகர்கள் வியாபாரச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு கரைச்சி பிரதேச சபையின் முன்னனுமதியைப் பெற்றே மேற்கொள்ள முடியும் என்பதை அறியத்தருகின்றேன் என்றார். (ற-10)

# பொருத்தமற்ற ஆடை அணிந்து வந்த நாடாளுமன்ற உறுப்பினர்

கொழும்பு, ஒக். 28

சபைக்கு பொருத்தமற்ற நிறத்திலான ஆடையை அணிந்து வந்த பதுளை மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்அரவிந்தகுமார் சபை உதவியாளரால் அறிவுறுத்தப்பட்டதன் பின்னர் சில நிமிடங்களில் சபையிலிருந்து வெளியேறினார்.

நாடாளுமன்றம் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் கூடியது.

இதன் போது மனு சமர்ப்பித் தலையடுத்து வாய்மூல விடைக்கான கேள்வி நேரம் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது சபைக்குள் பிரசன்னமானார் நாடாளுமன்றஉறுப்பினர்அரவிந்தகுமார். அவர் செவ்விளநீர் (ஒரேஞ்) நிறத்திலான மேற்சட்டையையும், கறுப்பு நிறத்திலான சாரத்தையும் அணிந்தவாறு சபைக்குள் வந்து தனது ஆசனத்தில் அமர்ந்தார். இதனை அவதானித்த சபை உதவியாளர் ஒருவர் அவரிடம் ஏதோ கூறினார். சில நிமிடங்களிலேயே அவர் சபையிலிருந்து வெளியேறினார்.

நாடாளுமன்ற சம்பிரதாயத்துக் கமைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோட்சூட், வேட்டி, சாரம், முழுக்கை குர்தா ஆகியவற்றை அணியலாம். குர்தாவின் மேற்சட்டையின் பொத்தான்கள் கழுத்துவரை போடப்பட்டிருக்க வேண்டும். கையின் பொத்தான்களும் போடப்பட்டிருக்க வேண்டும் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சேலை அணிந்து கொண்டே சபைக்குள் பிரவேசிக்க வேண்டும். (ற-5)

# வடக்கு-கிழக்குக் கடலில் படைத்தரப்பினர் கெடுபிடி

## சபையில் எடுத்துரைத்தார் ஹக்கீம்

வடக்கு – கிழக்குக் கடற்பகுதிகளில் படைத் தரப்பினரால் மேற்கொள்ளப்படும் கெடுபிடிகள் தளர்த்தப்படல் வேண்டும். இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீரவிடம் நேற்றுச் சபையில் கோரிக்கை விடுத்தார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது,

போரினால் வடக்கு – கிழக்கு மீனவர்களின் மீன்பிடித் தொழில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தாலும் தற்போது ஓரளவு முன்னேற்றமடைந்து வருகின்றது. அந்தப் பிரதேசக் கடற் பகுதிகளில் படைத் தரப்பினரால் மேற்கொள்ளப்படும் பாதுகாப்புக் கெடுபிடிகளால் மீனவர்கள் அசௌகரியத்துக்கு முகம்கொடுக்க வேண்டிய சூழலில் இருக்கின்றனர்.

மீனவர்களின் பாதிப்பு தொடர்பில் உதாசீனம் செய்யாமல் பாதுகாப்புக் கெடுபிடிகளை உடனடியாகத் தளர்த்த வேண்டும். இந்தக் கடற் பகுதிகளில் சில மீன் பிடி உபகரணங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்திலும் மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு குறிப்பிட்ட காலத்துக்கேனும் நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்கவேண்டும் – என்றார். (து-5)

# ஆங்கில டிப்ளோமாதாரிகள் திருமலையில் ஆர்ப்பாட்டம்



திருமலை, ஒக். 28

கிழக்குமாகாணஆங்கிலஉயர்தேசியடிப்ளோமாதாரிகள் நேற்றுக் காலை மாகாண சபைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தங்களுக்கு ஏனைய மாகாணங்களைப் போல நேர்முகப்பரீட்சை மூலம் ஆங்கில ஆசிரியர் நியமனத்தை வழங்குமாறு கோரியே இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடமத்திய மாகாண ஆங்கில உயர் தேசிய டிப்ளோமாதாரர்கள் 74 பேருக்கு ஆங்கில ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டதாகவும், கிழக்கு மாகாணத்தில் 652 ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டினர்.

கிழக்கு மாகாணசபை அமர்வுக்கு வருகை தந்த மட்டக்களப்பு மாவட்ட மாகாணசபை உறுப்பினர் கிருஸ்ணபிள்ளை மாணவர்களுடன் கலந்துரையாடியதுடன், முதலமைச்சர், மாகாண அமைச்சர்களுடன் பேசி சிறந்த தீர்வைப் பெற்றுத் தருவதாகவும் வாக்குறுதியளித்தார். (து-45)

# இலங்கை—இந்திய மீனவர் பேச்சு அடுத்த வாரம் புதுடில்லியில்

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பேச்சு எதிர்வரும் 5ஆம் திகதி புதுடில்லியில் நடைபெறவுள்ளது. இதனை கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அத்துடன் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்களின் படகுகள் எதுவும் மீள ஒப்படைக்கப்படமாட்டாது என்று அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளை அங்கீகரிப்பது குறித்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடுவதற்கு எதிர்வரும் 5 ஆம் திகதி இந்தியா செல்லவுள்ளோம். இந்தப் பயணத்தின்போது மீனவர் பிரச்சினையை இராஜதந்திர ரீதியில் தீர்க்க முடியுயா என்பது குறித்து பிரதானமாக ஆராய்வோம் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (து-5)

# மஞ்சள் கடவையில் இளைஞரை மோதித் தள்ளியது பொலிஸ் ஜீப்

## மட்டக்களப்பு நகரில் நேற்றுக் கொடூரம்



மட்டக்களப்பு, ஒக். 28

மட்டக்களப்பு நகரில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்லடிப் பாலத்துக்கு அருகில், கிழக்கு பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு முன்பாக இந்த விபத்து இடம்பெற்றது.

வீதிமஞ்சள்கடவையில்பயணியொருவருக்கு வழிவிட்டு தரித்துநின்ற மோட்டார் சைக்கிள் மீது பொலி[illegible] விபத்து இட[illegible]

இது குறித்து மட்டக்களப்பு பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டனர். (து-46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனந்தி....

போட்டி யிட்ட திருமதி அனந்தி சசிதரன் தோல்விய டைந்தார். வடக்கு மாகாண சபையின் கடந்த மூன்றாண்டு காலத்தில் முதன் முறையாக நேற்றைய தினமே சபை உறுப்பினர்களிடையே வாக்கெடுப்பு நடத்தப்பட்டு மேற்படி முடிவு பெறப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் வ.கமலேஸ்வரனுக்கு ஆதரவாக 18 வாக்குகளும், யாழ்ப்பாண மாவட்ட மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனுக்கு ஆதரவாக 13 வாக்குகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் நடுநிலைமை வகித்ததுடன், ஆளும் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர் பசுபதிப்பிள்ளை வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெகநாதன் இந்த மாதம் முதலாம் திகதி உயிரிழந்திருந்தார். அவரது வெற்றிடத்தை நிரப்புவதற்கு, புதிய பிரதி அவைத் தலைவர் தெரிவு 64 ஆவது மாகாண சபை அமர்வில் நடைபெறும் என்று நிகழ்ச்சி நிரலில் அறிவிக்கப்பட்டிருந்தது. முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தான் நாட்டில் இல்லாத நேரத்தில் தெரிவு நடத்தவேண்டாம் என்று அறிவித்திருந்தார்.

மாகாண சபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் வடக்கு மாகாண சபையின் விதியின் படி பிரதி அவைத் தலைவர் வெற்றிடம் ஏற்பட்டால் அடுத்த அமர்வில் நிரப்பப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் 64 ஆவது அமர்வில் பிரதி அவைத் தலைவர் தேர்வு நடைபெறும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

நேற்றுக் காலை சபை நடவடிக்கைக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட குழு உறுப்பினர்களான சி.வி.கே.சிவஞானம், ஜெயதிலக, லிங்கநாதன், ஜனோபர் இன்றைய (நேற்று) அமர்வில் புதிய பிரதி அவைத் தலைவர் தேர்வு நடைபெறவேண்டும் என்று வலியுறுத்தினர். எம்.கே.சிவாஜிலிங்கம், க.சர்வேஸ்வரன் இருவரும் இதனை ஒத்தி வைக்கவேண்டும் என்று குறிப்பிட்டனர். இறுதியில், நேற்றைய அமர்வில் புதிய பிரதி அவைத் தலைவர் தெரிவு நடைபெறும் என்று முடிவெடுக்கப்பட்டது.

புதிய பிரதி அவைத் தலைவர் தெரிவு தொடர்பில் சபை அமர்வில் கடுமையான வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன. சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் வ.கமலேஸ்வரனின் பெயரை முன்மொழிய இ.ஆனோல்ட் அதனை வழிமொழிந்தார். உடனேயே ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் திருமதி அனந்தி சசிதரனின் பெயரை முன்மொழிய க.சர்வேஸ்வரன் அதனை வழிமொழிந்தார்.

பிரதி அவைத் தலைவர் தேர்வுக்கு இருவர் போட்டியிட்டதால் வாக்கெடுப்பு நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. சபை தேநீர் இடைவேளைக்காக ஒத்தி வைக்கப்பட்டது. மீண்டும் சபை கூடியதும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் வாக்குச் சீட்டு வழங்கப்பட்டது. அவைத் தலைவர் முன்பாகச் செங்கோல் அமைந்துள்ள பீடத்தில் வாக்குப் பெட்டி வைக்கப்பட்டு, உறுப்பினர்கள் வாக்களித்தனர். வாக்கு எண்ணும் பணிகள், பேரவைச் செயலகச் செயலாளரினாலும் உறுப்பினர்களாலும் மேற்கொள்ளப்பட்டன. இதனை அமைச்சர் பா.டெனீஸ்வரன், ஜனோவர் ஆகியோர் கண்காணித்தனர்.

இதன் பின்னர் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதில் கமலேஸ்வரனுக்கு ஆதரவாக 18 வாக்குகளும், திருமதி அனந்தி சசிதரனுக்கு ஆதரவாக 13 வாக்குகளும் கிடைக்கப் பெற்றன. புதிய பிரதி அவைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட வ.கமலேஸ்வரன், அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானத்தின் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் மேற்கொண்டு பிரதி அவைத் தலைவர் ஆசனத்தில் அமர்ந்தார்.

'எனக்கு முன்பு இந்த ஆசனத்தில் அமர்ந்திருந்த அன்ரனி ஜெகநாதனின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன். சபையின் ஆளும்கட்சி எதிர்க்கட்சியிலுள்ள அனைவருடனும் நான் ஒன்று சேர்ந்து சேவை ஆற்றுவேன்' என்று புதிய பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன் தெரிவித்தார்.

அதன் பின்னர் உரையாற்றிய ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், எனக்கு 35 ஆண்டுகளாக கமலேஸ்வரனைத் தெரியும். அவர் முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்தவர். அந்தப் பிரதேசம் போரால் பாதிக்கப்பட்ட பிரதேசம். அந்தப் பிரதேசத்துக்கு உரிய ஒருவருக்குக் கூட அமைச்சுப் பொறுப்பு எதுவும் வழங்கப்படவில்லை. முல்லைத்தீவு மாவட்டத்துக்கு என்று அமைச்சு வழங்குவதாக இருந்தால் அதை கமலேஸ்வரனுக்கு வழங்குவதை நாம் ஆதரிக்கத் தயாராக இருக்கின்றோம். நாம் அனைவரும் ஒற்றுமையாக இருந்து எமக்குரிய தீர்வுகளைப் பெறவேண்டும் – என்றார்.

'இன்றைய முடிவை ஜனநாயக ரீதியான முடிவாக நான் கருதுகின்றேன். வாக்கெடுப்பு நடை பெறுவதற்கு முன்னர் இங்கு கூச்சலிட்ட சிலருக்கு இதனூடாகத் தகுந்த பதில் வழங்கப்பட்டுள்ளது' என்று பதில் முதலமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார். (த-5-8-101)

## மலையகத்தில்...

கலைக்கழக மாணவர்கள் இருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இந்தச் சம்பவத்தைக் கண்டித்து நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் என்பன நடைபெற்று வருகின்றன. வடக்கில் முழு அடைப்புப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மலையகத்தில் நேற்றைய தினம் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. லிந்துலை ஹென்போல்ட் தோட்டத்தில் பொதுமக்கள், சிவில் அமைப்பினர் இணைந்து தோட்ட ஆலயச் சுற்றாடலில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உயிரிழந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு எமது உணர்வுபூர்வமான அஞ்சலிகள், அப்பாவி மக்களைத்துன்புறுத்தும்பொலிஸாரின் அடாவடிதனத்துக்கு அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் போன்ற சுலோகங்களை ஏந்தியவாறும், அஞ்சலிக்காக மெழுகுவர்த்தியை வைத்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் ஒரு மணித்தியாலயம் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

(த-5-43)

# மரண அறிவித்தல்

## திருமதி நகுலேஸ்வரி அம்மா கார்த்திகேயக்குருக்கள்



**தோற்றம்** 17.01.1932 **மறைவு** 27.10.2016

கீரிமலை நகுலேஸ்வரத்தைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரி அம்மா கார்த்திகேயக்குருக்கள் நேற்று (27.10.2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வடகோவை காலஞ்சென்ற சிவஸ்ரீ வை.மு.கார்த்திகேயக்குருக்கள் கணேசஐயரின் அன்பு மனைவியும் கீரிமலை நகுலேஸ்வர ஆதீனத்தைச் சார்ந்த காலஞ்சென்றவர்களான சாந்தா சிவஸ்ரீ கு.சபாரட்ணக்குருக்கள்-கோமதி அம்மா (கேரளா) தம்பதிகளின் ஜேஷ்ட புத்திரியும் காலஞ் சென்ற சுப்பிரமணியசர்மா மற்றும் பகவதி அம்மா, சுந்தரமூர்த்திசர்மா, இராஜேஸ்வரி அம்மா, காலஞ்சென்ற பாலகிருஷ்ணகுருக்கள், சரோஜினிதேவி, நாராயணக்குருக்கள் சிவசர்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான சிவஸ்ரீ வை.மு.குமாரசாமிக் குருக்கள் (சித்தன்கேணி), சிவஸ்ரீ வை.மு.வைரவநாதக் குருக்கள் (ஆவரங்கால்), சிவஸ்ரீ வை.மு.பரமசாமிக் குருக்கள் (வடகோவை), சிவஸ்ரீ பு.புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் பிரம்மஸ்ரீ கா.சந்திரசேகரசர்மா, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் கௌரிமாலதி, சுப்பிரமணிய ஐயர் ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவஸ்ரீ சாந்தரூபக்குருக்கள், ஸ்ரீ கௌரி, பிரம்மஸ்ரீ விசாகேசசர்மா, ஹம்சத்வனி, மயூரத்வனி, பிரம்மஸ்ரீ வரதராஜசர்மா, பிரம்மஸ்ரீ விக்னராஜசர்மா, ஸ்ரீ விஜயதேவி, இராமநாதசர்மா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் பிரஹர்ஷிதா, ஹரிஹராத்மஜன், கிஷோமியா ஆகியோரின் பூட்டியும் அவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கோப்பாயில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஸ்ரீ லக்ஷ்மிவாசா
பருத்தித்துறை வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்:
பிரம்மஸ்ரீ
கா.சந்திரசேகரசர்மா
(கீரிமலை ஐயா மகன்)

021 2230044, 077 0072036, 077 8019106

(J 5704) (16.19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## அமிர்தலிங்கம் கருணாகரன்

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட அமிர்தலிங்கம் கரணாகரன் 25.10.2016 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் அமிர்தலிங்கம்-மங்கையற்கரசி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு திருமதி விசாகப்பெருமாள் தம்பதிகளின் அன்பு மருமகனும் திருமதி சுமதியின் பாசமிகு கணவரும் ஹரீந்திரா, கார்த்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி சுபத்திரா (திருச்சி), பாஸ்கரன் (ஆஸ் திரேலியா), பிரபாகரன் (மும்பை), திருமதி பிரியதர்சினி (மட் டக்களப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஞானச் சந்திரன், மதிவதனி, வசந்தி, கௌரிகாந்தன் அகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (31.10.2016) திங்கட்கிழமை கனடாவவில் நடைபெறும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: செ.அமிர்தலிங்கம்
(இளைப்பாறிய தபாலதிபர், கந்தரோடை)

(ஜே.5700) (16.19)

## இரத்தினம் சரஸ்வதி



தையிட்டி தெற்கு, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சரஸ்வதி நேற்று (27.10.2016) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற இரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற நிர்மலா மற்றும் சறோஜாதேவி (ஆசிரியர்-யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை), சிவானந்தன் (சுவிஸ்),தர்மவதி (சுவிஸ்), காலஞ்சென்ற செந்தமிழ் செல்வி ஆகியோரின் அன்புத் தாயும் கௌரிதாவினி (சுவிஸ்),யோகலிங்கம் (சுவிஸ்), தேவகுமார் (அசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ் சென்றவர்களான வல்லிபுரம், மு.சின்னம்மா ஆகியோரின் சகோதரியும் , கஜானி (சுவிஸ்), சாரங்கன் (சுவிஸ்), சாருகன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2016) வெள்ளிக்கிழமை பி.ப 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்

தகவல்
குடும்பத்தினர்.

(ஜே.5701) (16.19)

## திருமதி இந்திராதேவி இராமச்சந்திரன்



**மண்ணில்** 04.05.1941

**விண்ணில்** 25.10.2016

யாழ். ஐயனார் கோயில் வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கொழும்பு, டென்மார்க், கனடா ஆகிய நாடுகளில் வாழ்ந்தவரும் டென்மார்க் அன்ரி என செல்லமாக அழைக்கப்படும் திருமதி இந்திராதேவி ராமச்சந்திரன் 25.10.2016 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா - அன்னலக்ஷ்மி தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சின்னையா - சிவசோதி தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற இராமச்சந்திரன் அவர்களின் அன்பு மனைவியும் தில்லைநாயகி, சரஸ்வதி காலஞ் சென்றவர்களான ஆலாலசுந்தரம், சீதாலக்ஷ்மி மற்றும் சாந்தலக்ஷ்மி ஆகியோரின் அன்புச்சகோதரியும் தில்லைநாயகி, இராஜமணி, இந்திராதேவி காலஞ்சென்றவர்களான ஜேம்ஸ், தம்பிராஜா, தம்பித்துரை ஆகியோரின் அன்புமைத்துனியும் கௌரி (டென்மார்க்), இரவீந்திரன் (டென்மார்க்), சந்திரகுமார் (நிறஞ்சன் - லண்டன்) ,ஸ்ரீபிரியா (லண்டன்) ,சிவகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் உருத்திரதீசன் (டென்மார்க்), சியாமளா (டென்மார்க்), பிரகலதா,ஈஸ்வரி (லண்டன்), கோகுலவாணி (கனடா), நிறஞ்சன் (லண்டன்) ஆகி யோரின் பாசமிகு மாமியும் அபிஷிலா, ரிஷிபன், பிரிஷிலா, ஜஸ்விகா, அஞ்சனா, மதுஷன், அனுராம், அபீஷா, அபீஷ், அஞ்சலா, அக்ஷயா ஆகியோரின் அன்புப்பாட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.10.2016 திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யாழ்ப்பாணம்.

தகவல் :
உருத்திரதீசன் ( மருமகன் - நேதாஜி)
077 3695922

(ஜே/5693)(19.20)

# 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
28 . 03 . 1951

மறைவு
29 . 10 . 2001

## அமரர் சண்முகராசா சற்குணானந்த ஸ்ரீஸ்கந்தராஜா (குரும்பசிட்டி)

(போட்டோ ஸ்ரீ)

**திதி: திரயோதசி**

15 ஆண்டுகள் மறைந்து போனாலும் ---
அன்போடும் பாசத்தோடும் எம்மோடு இணைந்து பண்புடன் வாழ்ந்த
எம் இனிய அப்பாவே! நீங்கள் எம்மை விட்டு மறைந்து போனாலும்
உங்களைப் போல் காட்சிகளைப் படமாக்கப்
பேர் சொல்லி பெருமையுடன் நாங்கள் தொடரும் பணிகளிலும்
பார் அப்பா உங்களின் பாதையில் தான் நடக்கிறோம்
உங்கள் நினைவுகள் என்றும் மாறாது

போட்டோ ஸ்ரீ
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

மனைவி,
பிள்ளைகள்

## நேற்று...

னுப்பினர். இதனையடுத்து வடக்கு மாகாண ஆளுநர் நேற்று மாணவர்களுக்கு தமிழ்மொழியில் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, யாழ். பல்கலைக்கழக கலைப் பீட மாணவர் ஒன்றியத் தலைவருக்கு நேற்று முன்தினம் சிங்கள மொழியில் கடிதம் அனுப்பி வைத்தார். அந்தக் கடித்தில் எழுதப்பட்டிருப்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்றும், இலங்கையில் சிங்களமும், தமிழும் அரச கரும மொழியாக இருக்கின்றன என்பதை ஆங்கிலத்தில் குறிப்பிட்டு,ஆளுநருக்கே அதனைத் திருப்பி அனுப்பினர் மாணவர்கள். இதனையடுத்து வடக்கு மாகாண ஆளுநர் கூரே தமிழ் மொழியில் மாணவர்களுக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளார். பல்கலைக்கழக மாணவர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டமையைக் கண்டித்து கடந்த திங்கட்கிழமை, பல்கலைக் கழக மாணவர்களினால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தின் முடிவில் ஜனாதிபதிக்கும், பிரதமருக்குமான மனு, யாழ். மாவட்டச் செயலர் மற்றும் ஆளுநரின் செயலர் ஊடாக அனுப்புவதற்குக் கையளிக்கப்பட்டது. (த-5)

## கொலையுண்ட....

கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், மாணவர் படுகொலைக்கு அஞ்சலி செலுத்த அழைப்பு விடுத்தார்.

வடக்கு மாகாண சபையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபா பீடத்தின் நடுவே ஒன்று கூடி 2 நிமிட அக வணக்கம் செலுத்தப்பட்டது.

'படுகொலை செய்யப்பட்ட ஒவ்வொரு மாணவனின் குடும்பத்துக்கும் 10 மில்லியன் ரூபா இழப்பீடு வழங்கப்படவேண்டும்;' என்று ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் வலியுறுத்தினார். மற்றொரு ஆளும் கட்சி உறுப்பினரான இ.ஆனோல்ட், இழப்பீடு மாத்திரம் போதாது. அவர்களுக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்படவேண்டும். நியாயமான விசாரணை நடத்தப்படவேண்டும். இல்லையெனில் அரச இயந்திரத்தை முடக்கும் வகையில் போராட்டம் நடத்தவேண்டி வரும் - என்றார்.

கிழக்கு மாகாண சபையின் 65 ஆவது அமர்வுநேற்று இடம்பெற்றது. கொல்லப்பட்ட மாணவர்களுக்கு 2 நிமிட அக வணக்கம் செலுத்தப் பட்டது. மாகாண சபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனினால், மாணவர் படுகொலையைக் கண்டித்து முன்வைக்கப்பட்ட அவசர பிரேரணையை ஆளும் மற்றும் எதிர்க்கட்சியினர் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். முதலமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் தமது அனுதாபங்களைதெரிவித்தனர். (த-5-37-49)

## உடலில்...

கான சிகிச்சையும் வழங்கப்படவுள்ளன. பாதிக்கப்பட்டுள்ளவர்கள் உடனடியாக வைத்தியசாலைக்குச் சென்று பரி சோதனைகளை மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சகாதார அமைச்சின் செயலாள்ர் சி.திருவாகரன் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. யாழ்.போதனா வைத்தியசாலையிலும், மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டப் பொது வைத்தியசாலைகளிலும் சிகிச்சையை பெற்றுக்கொள்ளலாம் என்று செயலாளர் திருவாகரன் மேலும் தெரிவித்தார்.

போர் நடைபெற்ற காலங்களில் காயங்களுக்குள்ளான பொதுமக்கள் பலர் உடலில் இன்னமும் உலோகத்துண்டுடன் இருக்கின்றனர். அது பற்றி நாடாளுமன்றில் சுட்டிக்காட்டப்பட்டது. அதனையடுத்து, மருத்துவமனைகளில் தேவையான மருத்துவ சிகிச்சை வழங்கப்படும் என்று நாடாளுமன்றில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.(வ-4,7)

# மரண அறிவித்தல்

## சோதிலிங்கம் தங்கவேலாயுதம் (தங்கண்ணா)

(முன்னாள் வல்வை நகரசபை ஊழியர்)



பிறப்பு
**08.01.1944**

இறப்பு
**23.10.2016**

வல்வெட்டித்துறை, நெடியகாட்டைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட சோதிலிங்கம் தங்கவேலாயுதம் (தங்கண்ணா) கடந்த 23.10.2016 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோதிலிங்கம் - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற மாயவன் - விஜயலட்சுமி தம்பதிகளின் மருமகனும் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் ஜெயகுமார், ராஜ்குமார், நித்திய குமார், காலஞ்சென்ற கஜன், சுதாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் வசந்தி, சந்திரகலா, சர்மிளா, தேவகி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆகாஷ், ரம்யா, வித்யா, லோகேஸ், ரஜி, சஜீவ், அஜய், லக்ஷன், சச்சின், தனுஜா, மீரா ஆகியோரின் பாசமிகு பேரனும் சந்திரகாந்தி, ஏகாம்பரம் ஆகியோரின் சகோதரரும் சுசிலாதேவி, வசந்தாதேவி, குமரேஸ்வரராஜா, லக்ஷ்மிதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2016) வெள்ளிக்கிழமை மு.ப 9.00 - நண்பகல் 12.00 Tooting & Mitcham Community Sports Club, Imperial Fields, Bishopsford Rd, Morden SM4 6BF, United Kingdom இல் நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக South London Crematorium, Rowan Rd, Streatham, London 5JG,United Kingdom இற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C / 25997)
(14.17.18.21)

தகவல்
**குடும்பத்தினர்.**

ஜெயம் : 0044 754 5 70 4929
சுதா : 0044 773 800 7993
ராசி : 0044 782 477 1072
செல்வம்: 0044 772 765 6772

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார்...

யோகிப்பதாகவும், கடற்படையினரின் அடாவடி நாளுக்குள் நாள் அதிகரித்துச் செல்வதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

71 மீனவர்கள் நேற்றுக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். பல மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினரின் தலையீட்டை அடுத்து அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினமும் 7 படகுகளைக் கைப்பற்றிய கடற்படையினர் 14 மீனவர்களைக் கைது செய்திருந்தனர். இந்த நிலையில் நேற்றைய தினம் 13 படகுகளைக் கைப்பற்றியதுடன் 71 மீனவர்களைக் கைது செய்த சம்பவத்தினால் அந்தப் பகுதி மக்களிடத்தில் பதற்றமான அச்சமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

மன்னார் -முத்தரிப்புத்துறைக் கடற்பரப்பில் நேற்றுக் காலை ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சிலாவத்துறைக் கடற்படையினர் அங்கு மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்களிடம் சோதனை மேற்கொண்டனர். இதன்போது காப்புறுதிப் பற்றுச்சீட்டு மற்றும் அடையாள அட்டைப் பிரதி ஆகியன இல்லை என்று தெரிவித்து 71 மீனவர்களைக் கைது செய்தனர்.

நறுவிலிக்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த 60 மீனவர்கள் 9 படகுகளுடனும், வங்காலை பிரதேசத்தைச் சேர்ந்த 4 மீனவர்கள் ஒரு படகுடனும், சிலாவத்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்த 7 மீனவர்கள் 3 படகுகளுடனும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். தமது முகாமில் படகுகளையும், மீனவர்களையும் கடற்படையினர் தடுத்து வைத்திருந்தனர்.

இந்த விடயத்தில் தலையிட்ட மன்னார் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினர், உடனடியாகக் கடற்படையினருடன் கலந்துரையாடி மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் விடுவித்தனர்.

'காப்புறுதிப் பற்றுச்சீட்டு மற்றும் அடையாள அட்டைப் பிரதி ஆகியன இல்லாமல் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபடும் மீனவர்களைக் கைது செய்வதற்கு மன்னார் மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் ஆதரவுடன் கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர். சோதனை நடவடிக்கையில் ஆவணங்கள் இல்லாத 71 மீனவர்கள் இனம் காணப்பட்டனர். அவர்களைக் கைது செய்யவில்லை. எச்சரிப்பதற்காகவே அழைத்து செல்லப்பட்டார்கள். மீண்டும் இவ்வாறு ஆவணங்கள் இன்றி கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டால் கைது செய்யப் படுவார்கள்' என்று கடற்படைப் பேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி தெரிவித்தார்.

'மீனவர்கள் கைது குறித்து எமக்குத் தெரியவந்தவுடன் அதை விசாரிப்பதற்காக இரண்டு அதிகாரிகள் சென்றார்கள். காப்புறுதிப் பற்றுச்சீட்டு இல்லை என்பதற்காகவே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். தற்போது மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். கடற்படையினருக்குக் காப்புறுதிப் பற்றுச்சீட்டைப் பரிசோதனை செய்வதற்கு அதிகாரம் இல்லை. அது கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் வேலை. இது தொடர்பாகக் கலந்துரையாடல் ஒன்று இன்று(நேற்று) கடற்படையினருடன் இடம் பெறவுள்ளது' என்று பிரதிப் பணிப்பாளர் என்.மிராண்டா தெரிவித்தார்.

கடந்த 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு முத்தரிப்புத்துறைக் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றினுள் செல்ல முற்பட்ட ஒருவரை மக்கள் பிடித்து தாக்கியபோது தாக்குதலுக்கு உள்ளான நபர் கடற்படைச் சிப்பாய் என்று தெரிய வந்தது. இதனால் கடற்படையினருக்கும், முத்தரிப்புத்துறை கிராம மக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்களைக் கடற்படையினர் தொடர்ச்சியாகக் கைது செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-5-21)

## ஆவா...

உருவாக்கினார் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவரை ஆதாரம் காட்டி இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

போர் முடிவுக்கு வந்த பின்னர், நன்கு திட்ட மிட்டு ஒருங்கிணைக்கப்பட்ட அடிப்படையில் இந்தக் குழு உருவாக்கப்பட்டது. யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டதையடுத்து, நடத்தப்பட்ட விசாரணைகளிலேயே பொலிஸார் இதனைக் கண்டுபிடித்துள்ளனர். இந்தக் கண்டுபிடிப்பு தொடர்பாக ஊடகங்களிடம் எதையும் கூறவேண்டாம் என்று அரசியல் அதிகார மட்டத்தில் இருந்து பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆங்கில ஊடகத்துக்குக் கருத்து வெளியிட்ட முன்னாள் உயர்மட்ட இராணுவ அதிகாரி ஒருவர், போருக்குப் பின்னர் வடக்கில் பல குழுக்கள் செயற்பட்டன என்று குறிப்பிட்டுள்ளார்.

தென்னிந்தியத் திரைப்படப் பாணியில் இந்தக் குழுக்களைச் சேர்ந்த இளைஞர்கள் வாள்கள், கத்திகளுடன், உந்துருளிகளில் திரிந்தனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

2013ஆம் ஆண்டு இத்தகைய குழுவொன்றினால், பொலிஸார் ஒருவரின் கை வெட்டப்பட்டது. யாழ்ப்பாணத்தில் போருக்கு முன்னரும் கூட இதுபோன்ற குழுக்கள் செயற்பட்டன. விடுதலைப் புலிகள் இருந்தபோது, இத்த கைய குழுக்கள் ஏதும் இருக்கவில்லை, என்றும் இரா ணுவ அதிகாரி ஆங்கில ஊடகத்திடம் தெரிவித்துள்ளார். (த-5)

## யாழில்...

கும் திட்ட முன்மொழிவு ஒன்றை, தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான பணியகம், இந்தியத் தூதரகத்திடம் கையளித்திருந்தது.

இந்தத் திட்ட முன்மொழிவின் அடிப்படையில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் 3 ஆயிரம் மழைநீர் சேகரிப்புத் தொட்டிகளை அமைப்பதற்கு 300 மில்லியன் ரூபாவை வழங்க இந்தியா முன்வந்துள்ளது.

இது தொடர்பாக இந்திய-இலங்கை அரசுகளுக்கு இடையில் விரைவில் புரிந்துணர்வு உடன்பாடு கையெழுத்திடப்படவுள்ளது.

இதற்கு அமைச்சரவையின் ஒப்புதலைக் கோரும் பத்திரத்தை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைத்திருந்தார். அந்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (த-5)

## இந்திய...

வித்தார்.

மன்னார் - சிலாவத்துறை அரிப்பு பிரதேசத்தில் நேற்று முன்தினம் குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். சிலாவத் துறை முத்தரிப் புத்துறைப் பிரதேசத்தில் அண்மையில் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட னர் என்ற சந்தேகத்தில் கடற்படைச் சிப்பாய்கள் இருவரைப் பிடித்து மக்கள் அதிகாரிகளிடம் ஒப்படைத் திருந்தனர். அந்தக் கொள்ளைச் சம்பவத்துடன் குறித்த இந்திய பிரஜைகள் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அவர்களைக் கைது செய்த போதே அவர்களிடம் இருந்து போதைப் பொருள் கள் மீட்கப்பட்டன. கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களிடம் மேலதிக விசாரணைகள் நடத்தப்படுகின்றன – என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-21)

## ஆவாவை...

கொழும்பில்நேற்று நடைபெற்றஊடகவியலாளர் சந்திப்பின் போதே அந்த அமைப்பின் பொதுச் செயலர் இத்தேகந்த சத்தா திஸ்ஸதேரர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

ஆவா குழுவின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்தவோ, அந்தக் குழுவின் உறுப்பினர்களைக் கைது செய்யவோ பொலிஸார் தவறியுள்ளனர். பொலிஸாரின் நடவடிக்கைகளை நாம் நிறைவேற்றப் போகின்றோம்.

பொலிஸாருக்கு இரு வாரங்கள் கால அவகாசம் வழங்குகின்றோம். அதற்குள் பொலிஸார் 'ஆவா' குழுவைக் கட்டுப் படுத்தத் தவறும் பட்சத்தில் நாம் 'வாணா' என்ற ஒரு புதிய குழுவை உருவாக்குவோம். அப்படி உருவாக்கினால் பொலிஸாருக்கு குறித்த இரு குழுக்களையும் கட்டுப்படுத்த நேரிடும் – என்றார். (த-5)

## விக்கிக்கு...

னால் அவருக்கு உரிய பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கோரி வடக்கு மாகாண சபையின் 63 ஆவது அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானம் தொடர்பில் வாக்குமூலம் பெற்றுக் கொள்வதற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தைக் கொழும்புக்கு வருமாறு முதலில் அழைத்துள்ளனர். பின்னர் யாழ்ப்பாணத்துக்கு வந்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர், அவைத் தலைவரிடம் வாக்குமூலத்தைப் பெற்றுக் கொண்டனர். (த-5)

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி பொன்னையா



தோற்றம் : 16.09.1932
மறைவு : 27.10.2016

கல்வியங்காடு G.P.S வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி பொன்னையா 27.10.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் பொன்னையாவின் அன்பு மனைவியும் தம்பித்துரை (ஓய்வு பெற்ற ஆசிரியர்), காலஞ்சென்றவர்களான பவளம்மா, பிள்ளையம்மா மற்றும் நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரமேஸ்வரன், செல்வராணி, இராயேஸ்வரி, மகேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் கனகையா (கொழும்பு ஸ்ரீ விஸ்ணு வர்த்தக நிலைய உரிமையாளர்), தர்மராசா(V.T கட்டட ஒப்பந்தகாரர்), குமாரமூர்த்தி (தயா ஸ்ரோர்ஸ் கல்வியங்காடு) ஆகியோரின் மாமியாரும் வினோதன், விஜிதன், கஜிதன்(கொலண்ட்), தயாரூபன் (கிராமசேவையாளர்), தர்சன், சுதன், கேமா (சுவிஸ்), சுமித்திரா(லண்டன்), சுயந்தன் (N.D.B. Bank), சுயானி(கொழும்பு மொரட்டுவ பல்கலைக்கழக பொறியியல் மாணவி), தர்சிகா (கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (27.10.2016) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

G.P.S. வீதி,
கல்வியங்காடு

(C23009)
(12.18)

தகவல்:
குடும்பத்தினர்

077 425 5003, 021 223 0296

## மரண அறிவித்தல்



### திருமதி தவமணி இராமலிங்கம்

இல.14, மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட திருமதி தவமணி இராமலிங்கம் நேற்று (27.10.2016) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் தவப்புதல்வியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் பாசமிகு மனைவியும் இரகுநாதன், புனிதவதி, விஜயநாதன், கலாவதி, செல்வநாதன், திலகவதி, இரவீந்திரநாதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான துரைஐயா, செல்வராஜா ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்ற பாலசுப்ரமணியத்தின் உடன் பிறவாச் சகோதரியும் யோகராஜா, மனோராணி, சுதாமதி, இந்திரபாலன், புவனா ஆகியோரின் பாசமிகு மாமியும் பிரஷாந், பிந்துஜா, சந்திரிகா, ஜனனிகா, லாவன்ஜன், விதுசனா, அரன், இந்துஜா, ஷாருஜா, விபுஷன், வினோஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

" கலா பவனம் "
14, மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(J/5691),
(14,17)

தகவல்:
குடும்பத்தினர்.

021 221 9501

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்து முன்னேற்றம்

பிரெஞ்சுப்பூப்பந்தாட்டத் தொடரில் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார் இந்திய பூப்பந்தாட்ட வீராங்கனையான பி.வி.சிந்து.

பாரிஸ் நகரில் தொடர் நடைபெற்று வருகிறது. பெண்கள் ஒற்றையர் பிரிவில் முதல் சுற்று ஆட்டத்தில் ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்ற இந்திய வீராங்கனை பி.வி.சிந்து ஹொங்கொங் வீராங்கனை ஜிப் புய் ஜின்னை எதிர்கொண்டார்.

மூன்று செற் களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 21:9 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய சிந்து தனது ஆதிக்கத்தை தொடர்ந்தும் நிலைப்படுத்தி இரண்டாவது செற்றையும் 29:27 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார். இதனால் மூன்றாவது செற் றுக்கு வேலை வைக்காமல் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். (ம)



# பன்னாட்டு டெஸ்ட் தரவரிசை; சிமித் தொடர்ந்தும் ஆதிக்கம்



பன்னாட்டு டெஸ்ட் அரங்கில் துடுப்பாட்ட வீரர்களுக்கான புதிய தரப்படுத்தல் நேற்று வெளியிடப்பட்டது. ஆஸ்திரேலிய அணித் தலைவரான சிமித் தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளார்.

பாகிஸ்தானுக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் முடிவடைந்ததைத் தொடர்ந்தே இந்தத் தரப்படுத்தல் வெளியானது. புதிய துடுப் பாட்டத் தரப்படுத்தலின்படி பாகிஸ்தான் அணியின் அனுபவ வீரரான யுனிஸ் கான் முன்னேற்றம் கண்டு இரண்டாவது இடத்தைப் பிடித்தார். தீவுகளுக்கு எதிரான இரண்டாவது ஆட்டத்தில் சதம் பெற்றதைத் தொடர்ந்தே ஐந் தாவது இடத்திலிருந்த அவர் இந்த முன் னேற்றம் கண்டார். ஆஸ்திரேலிய அணித் தலைவரான சிமித் முதலிடத்தில் உள்ளார்.

இலங்கை அணித்தலைவர் மத்தியூஸ் 15ஆவது இடத்தை இந்திய வீரர் புஜாராவுடன் பகிர்ந் துள்ளார். இலங்கை வீரர் ஒருவரின் ஆகச் சிறந்த அடைவு மட்டமாக இதுவே உள்ளது. சந்திமல்லுக்கு 18ஆவது இடம் கிடைத்தது.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதல் பத்து இடங்களிலுள்ள வீரர்கள் விவரம் – சிமித், யுனிஸ் கான், ரூட், அம்லா, வில்லியம்சன், ரகானே, வோஜஸ், வில்லியர்ஸ், டேவிட் வோர்ணர், மிஸ்பா உல் ஹக். (ம)

# ஆர்சனல் அபாரம்

ஈ.எப்.எல். கிண்ணத்துக்கான தொடரில் காலிறுதிக்குத் தகுதி பெற்றது ஆர்சனல்.

ஆர்சனல், ரீடிங் அணிகளுக்கு இடையிலான காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில், 2:0 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் வெற்றி பெற்று காலிறுதிக் குத் தகுதி பெற்றது. ஆர்சனல் சார்பாக பெறப் பட்ட இரண்டு கோல்களையும் அலெக்ஸ் சம்பர் லின் பெற்றார்.

92அணிகள் பங்கு பற்றும் இந்தத் தொடரில் வெற்றி பெறும் அணி, ஐரோப்பிய கால் பந்தாட்ட சங்கங் களின் கூட்டமைப் பினால் நடத்தப் படும் ஐரோப்பியா லீக்குக்குத் தகுதி பெறும் என்பது குறிப்பிடத்தக் கது. (ம)

# ஆட்டம் நாளை ஆரம்பம் கேரத் மீது எதிர்பார்ப்பு

சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட் தொடரில் நாளை களமிறங்குகிறது இலங்கை அணி.

இரண்டு ஆட்டங்கள் கொண்ட தொடருக்காக இலங்கை அணி சிம்பாப்வேக் குச் சென்றுள்ளது. முதலாவது ஆட்டம் ஹராரேயில் நாளையும் இரண் டாவது ஆட்டம் அதே மைதானத்தில் அடுத்த மாதம் 6ஆம் திகதியும் நடை பெறவுள்ளன. தொடரில் இரு ஆட்டங்கள் என்பதால் நாளை ஆரம்பமா கும் ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி தொடரை இழக்க வாய்ப்பில்லை. மத்தியூஸ், சந்திமல் இல்லாமல் சிம்பாப்வேக்குச் சென்றுள்ளது இலங்கை அணி. சிம்பாப்வே சொந்த மண் பலத்துடன் இலங்கையை எதிர்கொள் கிறது. இவை காரணமாக இந்த ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை அணியின் அனுபவ வீரராக கேரத் உள்ளார். அவரே குறித்த தொடரில் இலங்கையை வழிநடத்துகிறார். ஒரு பந்துவீச்சாளராக ஏராள மான வெற்றிகளைத் தேடித்தந்த கேரத், ஒரு தலைவராக எதைச் சாதிக் கப்போகிறார் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். (ம)






# காலிறுதியில் லிவர்பூல்

ஈ.எப்.எல். கிண்ணத்துக்கான தொடரில் காலிறுதிக்குத் தகுதி பெற்றது லிவர்பூல்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் லிவர்பூலை எதிர்த்து, டொட்டென்ஹாம் மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற லிவர்பூல் காலிறுதிக் குத் தகுதி பெற்றது. லிவர்பூல் சார்பாக பதி வான இரு கோல்களையும் டானியல் ஸ்டரிஜ் பெற்றார். டொட்டென்ஹாம் சார்பாக பெறப் பட்ட கோலினை, ஜன்சென் பதிவுசெய்தார். வழக்கமாகக் களமிறங்கும் அணியிலிருந்து ஆறு மாற்றங்கள் செய்யப்பட்டே இந்த ஆட்டத்தில் லிவர்பூல் களமிறங்கியது. (ம)

# வாழ்வா சாவா நிலையில் இந்தியா – நியூசிலாந்து

இந்தியா–நியூசிலாந்து அணிகளுக்கு இடை யிலான ஐந்தாவதும் இறுதியானதுமான ஒருநாள் ஆட்டம் நாளை நடைபெற வுள்ளது.

முடிவடைந்த முதல் நான்கு ஆட்டங்களில் இரு அணிகளும் தலா இரண்டு வெற்றி களுடன் உள்ளன. முதலாவதிலும், மூன்றாவதிலும் இந்தியாவும், இரண்டாவதி லும், நான்காவதிலும் நியூசிலாந்தும் வெற்றிபெற்றன. இதனால் நாளை விசா கப்பட்டினத்தில் பகலிரவு ஆட்டமாக நடை பெறவுள்ள இறுதியாட்டத்தில் வெற்றி பெறும் அணியே தொடரைக் கைப்பற்றும். நியூசிலாந்து அணி டெஸ்ட் தொடரை 0:3 என்ற அடிப்படையில் இழந்தது. இதனால் அந்த அணி குறைந்த பட்சம் ஒருநாள் தொடரையாவது கைப்பற்ற வேண்டும் என்ற கௌரவச் சிக்கல் உள்ளது. இந்தி யாவைப் பொறுத்தவரை டெஸ்ட் தொடரை கோக்லி முழுவதுமாகக் கைப்பற்றினார். இதனால் ஒருநாள் தொடரைக் கைப்பற்றவேண் டிய அவசியம் டோனிக்கு உள்ளது. (ம)



# யுவியாக நடிப்பதற்கு ரன்பீருக்கு விருப்பம்

இந்திய அணியின் சகல துறை வீரரான யுவராஜின் வாழ்க்கையை மையமாக வைத்து திரைப்படம் எடுக்கப்பட்டால் அந்தப் படத்தில் நடிக்கத் தான் தயாராக இருப்பதாக ரன்பீர் கபூர் தெரிவித்தார்.


இந்திய அணியின் தலைவராக இருக்கும் டோனி யின் வாழ்க்கையை மையமாக வைத்து எடுக்கப்பட்ட எம்.எஸ்.டோனி தி அன்ரோல்ட் ஸ்ரோறி படத்துக்கு பெரும் வரவேற்புக் கிடைத்தது. இதனையடுத்து யுவராஜின் வாழ்க்கையை மையமாக வைத்தும் படம் வெளியாகலாம் என்ற தகவல்கள் கசிந் துள்ளன. இந்த நிலையிலேயே ரன்பீர் தனது விருப்பத்தைத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறந்த சகலதுறை வீரராக உருவெடுப்பார் ஸ்ரோக்ஸ்

உலகில் தோன்றிய மிகச்சிறந்த சகலதுறை வீரர்களுள் ஒருவராக இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் பென் ஸ்ரோக்ஸ் உருவெடுப்பார் என அந்த அணியின் பயிற்சியாளர் பெய்லிஸ் தெரிவித்தார்.
பங்களாதேஷ் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் பென் ஸ்டோக்ஸ் வெளிப்படுத்திய திறமை வெளிப்பாட்டைத் தொடர்ந்தே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார். சிட்டகொங்கில் இடம்பெற்ற ஆட்டத்தில் (பங்களாதேஷுக்கு எதிரான முதல் டெஸ்ட்) 6 இலக்குகளைக் கைப்பற்றிய ஸ்ரோக்ஸ், துடுப்பாட்டத்தில் 103 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இதன் காரணமாக, ஆட்ட நாயகன் விருதையும் வென்றிருந்தார். ஒரு சகலதுறை வீரருக்கான சிறந்த வெளிப்பாடுகள் ஸ்ரோக்ஸிடம் உள்ளன. உலகில் தோன்றிய மிகச்சிறந்த சகலதுறை வீரர்களுள் ஒருவராக அவர் வர முடியும். அவரது கிரிக்கெட் வாழ்வில், அவர் இன்னமும் இளமையாகவே உள்ளார். இன்னும் காலம் செல்ல, அவரை இன்னும் சிறப்பாகக் கணிக்கக்கூடியதாக இருக்கும். இந்திய உபகண்டத்தில், சுழற்பந்து வீச்சை எதிர்கொண்டு துடுப்பெடுத்தாடுவதில் அவர் கண்டுள்ள முன்னேற்றங்கள், உயர் ரகமானவை. இந்தியாவுக்கு எதிராக ஆரம்பமாகவுள்ள டெஸ்ட் தொடரில் ஸ்ரோக்ஸின் மீது அதிக எதிர்பார்ப்பு நிலவுகிறது என பெய்லிஸ் மேலும் தெரிவித்தார். (ம)





# முருகுசாவை வெளியேற்றினார் நடப்புச் சம்பியன் ரட்வன்ஸ்கா

சிங்கப்பூர் ரென்னிஸ் தொடரிலிருந்து முருகுசாவை வெளியேற்றினார் குறித்த தொடரின் நடப்புச் சம்பியனான ரட்வன்ஸ்கா.
பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதல் எட்டு இடத்தில் உள்ள வீராங்கனைகளுக்கு மட்டுமாக ஆண்டின் இறுதிப் பகுதியில் தொடரொன்று நடத்தப்படுவது வழமை. சிங்கப்பூரில் குறித்த தொடர் நடைபெறும். நடப்பு வருடத்துக்கான தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் நடப்புச் சம்பியனான போலந்து வீராங்கனை ரட்வன்ஸ்காவை எதிர்த்து ஸ்பெய்ன் வீராங்கனை முருகுசா மோதினார்.
மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் ரட்வன்ஸ்கா. அடுத்த செற்றிலும் அவர் தனது ஆதிக்கத்தைத் தொடர்ந்தார். 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இரண்டாவது செற் ரட்வன்ஸ்காவின் வசமாக முடிவில் அவர் 2:0 என்ற நேர் செற் வெற்றியைப் பெற்றார்.
இந்தத் தோல்வி லீக் சுற்றில் முருகுசாவின் இரண்டாவது தோல்வியாகும். எனவே அவர் அரையிறுதிக்குத் தகுதிபெறுவதற்கான வாய்ப்பைப் பறிகொடுத்தார். ரட்வன்ஸ்கா தனது அடுத்த ஆட்டத்தில் பிளிஸ்கோவாவை எதிர்கொள்ளவுள்ளார். இந்த ஆட்டத்தில் வெற்றிபெறுபவர் அரையிறுதிக்குத் தகுதி பெறுவார். (ம)

# நெருக்கடியில் பங்களாதேஷ்

இங்கிலாந்து, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இரண்டாவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.
தொடரில் இரு ஆட்டங்கள், முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து 22 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இதனால் குறைந்தபட்சம் தொடரை சமநிலையிலாவது முடிக்க வேண்டுமாயின் இந்த ஆட்டத்தில் வென்றேயாக வேண்டும் என்ற நெருக்கடியில் பங்களாதேஷ் களமிறங்குகிறது. இந்த ஆட்டத்தின் முடிவு சமநிலையாக அமைந்தாலும் கிண்ணம் இங்கிலாந்திடம் சென்றுவிடும். (ம)



# முதல் பத்துப் பந்துப்பரிமாற்றங்கள் நியூசிக்கு சாதகமாகினவாம்

ஆட்டத்தின் முதல் பத்துப் பந்துப் பரிமாற்றங்களும் நியூசிலாந்துக்கு சாதகமாக அமைந்துவிட்டன. எமது தோல்விக்கும் அதுவே காரணம்.
இவ்வாறு தெரிவித்தார் இந்திய அணித்தலைவர் டோனி. ராஞ்சியில் நேற்றுமுன்தினம் நடந்த நியூசிலாந்துக்கு எதிரான நான்காவது ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணி 19 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 260 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்தியா 241 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. நியூசிலாந்து துடுப்பெடுத்தாடியபோது முதல் பத்துப் பந்துப் பரிமாற்றங்களில் இந்திய அணி 80 ஓட்டங்களை விட்டுக் கொடுத்திருந்தது. இந்த நிலையிலேயே டோனி இவ்வாறு தெரிவித்தார். (ம)

# முதலிடம் என்பது நிரந்தரம் இல்லை

## சானியா தெரிவித்தார்

பன்னாட்டு ரென்னிஸ் தரப்படுத்தலில் பெண்கள் இரட்டையர் பிரிவில் முதலிடத்தில் உள்ள வீராங்கனையான சானியா மிர்ஸா, எவரும் தொடர்ந்து நீண்ட காலத்துக்கு முதலிடத்தில் நீடிக்க இயலாது எனத் தெரிவித்தார்.
சிங்கப்பூரில் நடைபெறவுள்ள பெண்கள் இரட்டையர் பிரிவு சுற்றுக்காகச் சென்றுள்ள அவர் அங்கு நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். "எவருமே, தொடர்ந்து முதலிடத்தில் இருப்பதில்லை. கடந்தாண்டு ஏப்ரலில், முதலிடத்துக்கு நான் வந்தபோது, அது மிகப் பெரிய தருணமாக அமைந்தது. கனவொன்று நனவான சந்தர்ப்பம். தொடர்ந்து 80 வாரங்களுக்கு முதலிடத்தில் இருப்பேனென நான் எதிர்பார்த்திருக்கவில்லை. இது, மிகவும் அற்புதமான பயணமாகும்" எனச் சானியா மேலும் தெரிவித்தார்.
மிர்ஸா கிங்கிஸ் இணை தற்போது பிரிந்து வெவ்வேறு "இணைகளுடன் விளையாடுகின்ற போதிலும், இந்தத் தொடருக்காக மீண்டும் ஒன்றுசேர்ந்துள்ளது. இந்தத் தொடரில், சானியா மிர்ஸா - மார்ட்டினா ஹிங்கிஸ் இணை வெற்றி பெறாவிட்டால், முதலிடத்தில் உள்ள சானியா தனது இடத்தைப் பறிகொடுக்க வேண்டியிருக்கும். (ம)

# பாகிஸ்தானில் பாதுகாப்பில்லை: சொயிப் அக்தர் தெரிவித்தார்

பாகிஸ்தானில் பாதுகாப்பு இல்லை எனத் தெரிவித்த அந்த அணியின் முன்னாள் வீரரான அக்தர், அங்கு எந்த அணியும் சுற்றுப் பயணம் மேற்கொள்ள வேண்டாம் எனவும் எச்சரிக்கை விடுத்தார். இலங்கை அணி சென்ற வாகனத்தின் மீது பாகிஸ்தானில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் எந்த அணியும் அங்கு சுற்றுப் பயணம் மேற்கொள்வதில்லை. பாகிஸ்தானில் நடைபெறவேண்டிய தொடர்களெல்லாம் ஐக்கிய அரபு இராச்சியத்திலேயே நடைபெறுகின்றன. ஆனால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் நீண்ட முயற்சிகளின் விளைவாக அங்கு தொடர் நடத்தப்படுவது தொடர்பாக கருத்தில் கொள்ளப்பட்டு



பரிசீலனை செய்யப்படும் நிலை இருந்தது. இந்த நிலையில் குவாட்டா நகரிலுள்ள பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் சில தினங்களுக்கு முன்னர் ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் 61 பொலிஸ் மாணவர்கள் இறந்தனர். 200 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர். இதனால் மீண்டும் அந்த நாட்டில் இருதரப்புத் தொடர் நடத்துவது சாத்தியமற்றதாக மாறியுள்ளது. இந்த நிலையிலேயே அக்தர் இவ்வாறு தெரிவித்தார்.
பாகிஸ்தானில் தற்போது நிலவும் சூழ்நிலையில் எந்த ஒரு வெளிநாட்டு அணியும் சுற்றுப்பயணம் மேற்கொள்வது சரியானதாக அமையாது. இங்கு உரிய பாதுகாப்புக்கள் இல்லை. ஏனைய பல நாடுகளுடன் பாகிஸ்தானை ஒப்பிடும்போது வருத்தமடைகின்றேன். பாகிஸ்தானில் இருதரப்புத் தொடர் நடத்தப்படுவதற்கு இங்கு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். இதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று அக்தர் மேலும் தெரிவித்தார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாயத்தில் முத்திரை பதித்த ஆசிகாவுக்கு மகத்தான வரவேற்பு



மலேசியாவில் நடைபெற்ற பொதுநலவாய பளுதூக்கும் போட்டியில் பங்குபற்றி வெண்கலப் பதக்கம் வென்று தாயகம் திரும்பிய சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி வி.ஆசிகாவுக்கு நேற்று மகத்தானவரவேற்புவழங்கப்பட்டது. ஆசிகாவும், அவருடைய தந்தையும் பயிற்றுநருமான விஜயபாஸ்கரன் இருவருமே அவ்வாறு கௌரவிக்கப்பட்டனர். யாழ். பேருந்துத் தரிப்பிடத்திலிருந்து அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். யாழ். மாவட்ட பளுதூக்கு சங்கத்தின் தலைவர் இளம்பிறையன், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி உபஅதிபர் திருமதி சகாயசீலன், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி விளையாட்டுத் துறை பொறுப்பாசிரியை திருமதி ஹரிகரன் ஆகியோரும் குறித்த கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-23)

# மைலோ கிண்ணத்தின் அரையிறுதிகள் இன்று

மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் கால்பந் தாட்டத் தொடரில் வடமராட்சி கால்பந்தாட்டச் சங்க அணிகளுக்கான அரையிறுதியாட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன. அல்வாய் மனோகரா விளை யாட்டு மைதானத்திலேயே இந்த ஆட்டங்கள் நடைபெற வுள்ளன. பி.ப. 3 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகமும் மாலை 4 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரை யிறுதி ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)

# மனோகரா, பொம்மர்ஸ், கொலின்ஸ், கலைமதி வடமராட்சி லீக்கில் அரையிறுதிக்குத் தகுதி




யாழ்ப்பாணம், ஒக். 28

மைலோ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்களில் அல்வாய் மனோகரா, வதிரி பொம்மர்ஸ், கொலின்ஸ், நவிண்டில் கலைமதி அணிகள் அரையிறுதி ஆட்டங்களுக்குத் தகுதி பெற்றன.

அல்வாய் மனோகரா விளையாட் டுக் கழகத்தின் மைதானத்தில் காலிறுதி ஆட்டங்கள் நேற்று நடைபெற்றன. முதலாவது காலிறுதியாட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட் டுக் கழக அணியை எதிர்த்து அண்ணாசிலையடி இளைஞர் கழக அணி மோதியது. இதில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது காலிறுதியாட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலட்டி ஐக்கிய விளையாட் டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் பொம்மர்ஸ் அணி 6:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

மூன்றாவது காலிறுதியாட்டத் தில் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நியூட் டன் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் கொலின்ஸ் விளையட் டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.


நான்காவது காலிறுதியாட்டத்தில் சிவகுமரன் விளையாட்டுக் கழ கத்தை எதிர்த்து நவிண் டில் கலைமதி அணி மோதியது. இதில் நவிண்டில் கலைமதி அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23-108)



# நசரேத் அணியை வீழ்த்தி குறிஞ்சிக்குமரன் இறுதியில்

மெலிஞ்சிமுனை இருதயராஜா வி. கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் இறுதியாட் டத்துக்குத் தகுதி பெற்றது குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம்.

யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட இந்தத் தொடரின் அரையிறுதி ஆட்டம் இருதயராஜா விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்றது. புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக் கழகமும் குப் பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. கோல் கணக்கு இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் அதே நிலைதான். சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலைமை ஏற்பட, முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி வெற்றி பெற்று இறுதிக்குள் நுழைந்தது. (ம-108)




போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
வடமாகாண உள்ளக கணக்காய்வாளர்
ஞாயிறு 9.00-4.00
திங்கள்-வெள்ளி 5.00-6.30 மணி
வடமாகாண ஆசிரியர்
ஞாயிறு 10.00-3.00
வடமாகாண காணி வெளிக்கள போதனாசிரியர்
ஞாயிறு 2.00-5.00
* வங்கி, Med, இறைவரி பரீட்சைகளுக்குரிய இவ்வார சனி வகுப்பு ஞாயிறு 1.00 மணிக்கு நடைபெறும்.
T.P 0766883394
021 2223382
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(C 23029) (16.17.18)

இலவச UK முகாமைத்துவ டிப்ளோமா
● வியாபார முகாமைத்துவம் DBM
● மனிதவள முகாமைத்துவம் DHRM
● சந்தைப்படுத்தல் DMKT
சான்றிதட் கட்டணம் மட்டுமே
பயிற்சியுடன் வேலைவாய்ப்பு
வெளிமாவட்டத்தவர்க்கு தங்குமிடம்
தொடர்பு: Dr. ந. பிரபு MBBS (SL)
சுவடி இலாப நோக்கற்ற நிறுவகம்
0768384466

உடுவில் மகளிர் கல்லூரி தரம் 06 இற்கான விசேட அனுமதி
புலமை பரிசில் பரீட்சையில் 130 புள்ளிகளுக்கு மேல் எடுத்த பிள்ளைகளுக்கு விசேட புலமைப்பரிசில் வழங்கப்படும். மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.
விண்ணப்ப முடிவு திகதி: 10.11.2016 அதிபர்.
(C 23032) (16.19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.